
காவ்யா



811.
V

# அரிதாரம்

ரா. கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T 894.811·31
வகுப்பெண் ........... சுட்டெண் 534278

# இலங்கைப் பல்கலைக்கழக நூலகம்

பேராதனை.

## இரவல் பெறுவோருக்கு அறிவித்தல்

இந்நூல் பல்கலைக்கழக நூலகத்தினது உடைமை. நூலக இரவல் விதிகளுக்குப் புறம்பாக, இதனை இசைவாணையின்றி வைத்திருத்தல் பாரதூரமான குற்றமாகும். நூலகக் கையேட்டிலுள்ள இரவல் பெறுவதற்கான நியதிகளையும் சட்டங்களையும் செவ்வனே பின்பற்றுமாறு இரவல் பெறுவோர் கேட்கப்படுகின்றனர்.

நூல்களை துப்புரவாகவும், ஒற்றைகளை மடிக்காலும், பென்சிலால் வரையாமலும் மற்றும் முறைகளில் குறியீடுகள் செய்யாமலும், வைத்துக்கொள்ளுமாறு தயவாகக் கேட்கிறோம். திருப்பித்தரும் நூல்களின் நிலைமைக்கு வாசகர்களே பொறுப்பு. ஆதலினால், இரவல் பெற முன்னர், நூலில் உள்ள ஊறுகளை அவர்கள் முகப்பு மேசையிலுள்ள நூலகத் துணைவர்களுக்குச் சுட்டிக் காட்டி விட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

Class No T894·811·31

Acc. No 534278

This Book is returnable on or before the last date stamped below

| | | | |
|---|---|---|---|
| -1. FEB.2003 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
20-8-2001
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிதாரம்

*சமூக நாவல்*

ரா. கண்ணன் மகேஷ்

534278

காவ்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ARIDHARAM**
NOVEL

by **Raa. Kannan Mehesh**

**First Edition :** December 1999

*Published by :* LAKSHMI SUNDARAM

KAAVYA
*16, 17th 'E' Cross, Indira Nagar 2nd Stage,*
*Bangalore - 560 038.*
*Phone : 080-5251095*

*Cover Design by :* MUTHU

*Laser Type Setting by :*
SRI JAYALAKSHMI GRAPHICS
*7, Kutchery Road, Mylapore, Chennai - 600 004.*

*Printed at :* MAA PRINTERS, Bangalore.

**Price Rs. 30.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ரா. கண்ணன் எனும் கண்ணன்மகேஷ் கடலூர்க்காரர். இப்போது சென்னைவாசி. கடந்த 40 ஆண்டுகளாக சிறுகதை நாவல், என எழுதி வருகிறார். வேய்ங்குழல் வேந்தன் என்ற பெயரில் நாடகங்களும் புதுக்கவிதைகளும் எழுதியிருக்கிறார்.

'அரிதாரம்' நாடக வாழ்க்கையைப் பற்றிய நயமான நாவல். அரிதாரமற்ற வாழ்க்கை அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது.

இவரது, பொழுது விடியட்டும் (சிறுகதை) ஆற்றுமணல் (நாவல்), வீரவணக்கம் (சிறுகதை) என மூன்று நூல்களை வெளியிட்ட காவ்யா இப்போது இவரது புதிய நாவலை வெளியிடுகிறோம். வாழ்க. வளர்க.

காவ்யா சண்முக சுந்தரம்

UNIVERSITY OF PERADENIYA
20-8-2001
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

- வெள்ளைக் காக்கைகள்
- கிருதயுகம் எழுக
- ஆற்று மணல்
- நீலமதியின் காதல் (வரலாற்று நாவல்)
- வாழ்வெனும் மகா நதி
- சொர்க்கத்தின் கதவுகள்
- இனி விடிந்து விடும்
- துப்பறியும் சிறுவர்கள் (சிறுவர் நாவல்கள்)
- மனத்தின் அழகு ,,
- பொழுது விடியட்டும் (சிறுகதைகள்)
- வீர வணக்கம் ,,
- வெற்றியே பெறுவோம் (சுயமுன்னேற்ற நூல்கள்)
- வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் ,,
- அரிதாரம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY 20-8-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மேடை ஏறி, மைக் முன் நின்று தன் ஆற்றலால் சபையோரை பிரமிக்க வைத்த பேச்சாளனுக்குப் பிறகு பேச அழைக்கப்பட்ட சாதா ரக ஆசாமி போல நான். என்னைப் பற்றி தன் பதிப்புரையில் ரத்தின சுருக்கமாக, தெளிவாகச் சொல்லிவிட்டார் நண்பர் காவ்யா சண்முகசுந்தரம் அவர்கள். இதற்கு மேல் நான் சொல்லிக் கொள்ள என்ன இருக்கிறது? இவர் நண்பராகக் கிடைத்தது என் பாக்கியம்.

அரிதாரம்! இப்படி ஒரு நாவல் கரு எழுதப்படாமல் என் மனதில் ஒளிந்திருப்பது எனக்கே தெரியாது: மாதப் பத்திரிகை ஒன்று குறுநாவல் போட்டி அறிவிக்கவும், எழுதுவோமே என்று சற்று யோசித்தபோது கடலூர் முழுநிலா நாடக மன்றமும் அதன் உறுப்பினர்களும் என் நினைவுகளின் மேற்பரப்பிற்கு வந்தனர்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் பழகிய முழுநிலா நாடக மன்ற உறுப்பினர்கள் நேற்றைய சம்பவங்கள் போல பசுமையாக என் பேனா வழியே பேப்பரில் இறங்கி உலா வரத் தொடங்கினார்கள். என் கையும், மனமும் என் கட்டுப்பாட்டில் இல்லாமல் தாமே பரபரப்புடன் இயங்கி இந்த நாவல் அதன் போக்கில் சென்று முழுமைப் பெற்றது.

இந்த நாவலின் ஒரு விசேஷம், இது எழுதப்பட்ட இரண்டாவது ஆண்டிலேயே நூலாக வெளி வருகிறது என்பதுதான். இதற்கு முன்பு எழுதப்பட்ட என் வேறு சில நாவல்கள் ஆண்டுக் கணக்காக கைப்பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் உள்ளன. இது, சில வீடுகளில், அக்காக்கள் இருக்க தங்கைக்குத் திருமணம் ஆவதை நினைவூட்டுகிறது. நீலமதியின் காதல் என்கிற என் சரித்திர நாவல் ஒன்று எழுதப்பட்டு இருபத்தி அய்ந்து ஆண்டுகள் கழித்து நூல் வடிவம் பெற்றது! எனக்குப் பின்னால் எழுதத் துவங்கி பிரபலம் ஆகிவிட்ட சில சரித்திர நாவல் ஆசிரியர்களிடம் இப்போது தான் நான் எழுதத் துவங்குவது போல வாழ்த்தும், ஆசியும் பெற நேர்ந்தது!

அரிதாரம் நாவலை கைப்பிரதியில் படித்த அன்பர் ஒருவர், இந்த நாவல், நல்ல ரசிகர்களின் கையில் கிடைக்க வேண்டும். இல்லை என்றால் இதே கதையில் நீங்கள் குறிப்பிட்டுள்ள ஒரு சினிமாப் பாடல் :

கண் இரண்டும் இல்லார் முன்
ஓவியம் வைத்தார், காதிரண்டும்
இல்லார் முன் கானம் இசைத்தார்

என்பது போல ஆகிவிடும் என்றார். அவருக்கு நன்றி.

வெள்ளைக் காக்கைகள், ஆற்றுமணல், கிருதயுகம் எழுக, கழுகு அழுதது, பென்ஷனர்ஸ் பெஞ்ச் ஆகிய நான் முன்பு எழுதிய நாவல்களின் தரத்தில் அரிதாரமும் வாசகருக்கு நிறைவாய் அமையவேண்டும் என்பதே என் அவா.

நண்பர் கவிஞர் ஞானக் கூத்தன் ஒரு சமயம் சொன்னார் : once you write a good poem, you are always among the company of good poets. அரிதாரம் பற்றி வாசகர்களே சொல்லட்டும்.

நன்றி.

சென்னை -91 ரா. கண்ணன் மகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2 -8-2001
LIBRARY

# அரிதாரம்

"முடிவா என்ன தாண்டா சொல்ற?. என் நண்பன் பலராமன் பெண்ணைக் கட்டிக்க சம்மதிக்கிறியா? இல்ல, அந்த பன்னி மேய்க்கிற பெண் மேலக் கொண்ட காதல் தான் பெரிசுங்றியா? இன்னிக்கு உன் பதில் தெரிஞ்சே ஆகணும்.."

"நீங்க எத்தனை தடவைக் கேட்டாலும் என் பதில் அதே தாம்பா. பலராம் மாமா பெண்ணுக்கு நானே நல்ல வரனாப் பாத்துக் கல்யாணம் செஞ்சு வெக்கறேன். . ."

"அடே, எனக்கு வர்ற கோபத்துக்கு. . ."

"வேண்டாம்பா. உணர்ச்சி வசப்படாதீங்க. உங்களுக்கு ஏற்கெனவே பிரஷர். பீபி மாத்திரை சாப்பிட்டீங்களாப்பா? ஃபிரிஜ்லேந்து எடுத்துத் தரேன். சாப்பிடுங்க. .."

"ஒரு மண்ணாங்கட்டியும் வேணாம். சீக்கிரம் இந்த பூமியை விட்டுப் போய்த் தொலைக்கிறேன். உன்னைப் பிள்ளையாப் பெத்தத்துக்கு எனக்கு பீபி மட்டும் வந்தாப் போதாதுடா, எய்ட்ஸ் வரணும், எய்ட்ஸே வரணும்!"

"அப்படி எல்லாம் சொல்லாதீங்கப்பா, அப்படி எல்லாம் சொல்லாதீங்க. உங்க மன வருத்தத்தை அதிகப்படுத்தற பாவி நான். உங்க கண் எதிர இல்லாம இந்த ஊரை விட்டு எங்காவது ஓடிடறேன். ப்ளீஸ் அப்பா, விருப்பம் இல்லாத இந்தத் திருமணத்திற்கு என்னை வற்புறுத்தாதீங்க. என்னைப் புரிஞ்சுக்குங்க. மன்னிச்சிடுங்க. நான் கண் காணாம எங்கயாவதுப் போயிட்றேன்!. . ." அப்பாவை நெருங்கி, அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைப் பிடித்துக் கொண்டு, தோள்கள் குலுக்கி 'ஹ ஹ ஹ' என்று அழுதான் அவன்.

"பிர்ர்..." என்று விசில் ஊதினான் நாக கணேஷ்.

"போறாதுப்பா. வாத்தியார் எப்படி உயிரைவிட்டு நடிக்கிறாரு? நீ என்னவோ வசனங்களை உயிர் இல்லாம ஒப்பிக்றியே?"

"ஆமா அண்ணே, இந்த வசனத்தை ஒப்பிக்கவே எனக்கு வேர்த்து விறுவிறுத்துப் போச்சி. வாத்தியார்கூட என்னை ஒப்பிடலாமா? அவரு எப்பேர்ப்பட்ட கலைச் சூரியன். நான் வெறும் கத்துக்குட்டி..." என்றபடி நடிகன் ஜெய் அருண் சிறு துண்டால் தன் கழுத்தை அழுத்தி ஒற்றினான்.

"ஆமா, உனக்காக ஏசி ரூம் ஏற்பாடு பண்ணுவாங்க, வா. ஏதோ இந்த மட்டிலும் ராத்ரி ஒத்திகைக்கு ஸ்கூல் ஹெச்.எம்.பெரிய மனசுப் பண்ணி ஸ்கூல் வகுப்பறையைத் திறந்துவிட வாட்சுமேனை அனுமதிச்சிருக்காரு..." என்றான் குண்டு சிவப்பா, ஒரு பெஞ்சு மீது அமர்ந்து கால் மீது கால் போட்டு. அவன் கழுத்தில் பெரிய சிவப்பு தேங்காய்ப் பூத் துண்டு. துண்டால் தன் முக வியர்வையைத் துடைத்தான்.

"இந்த 40 வாட்ஸ் பல்பு வேற ஒரே புழுக்கமா இருக்குப்பா..." என்றான் ஓர் ஒன்றரைக் கண்ணன்.

அந்த வகுப்பறையில் இரட்டை வரிசையாக குட்டை பெஞ்சுகள் கிடந்தன. கரும்பலகையில் ஆசிரியரால் அன்று பகலில் எழுதிப்போடப்பட்ட பாடம் அழிக்கப்படாமல் அப்படியே இருந்தது.

"டீ வாங்கி வர அனுப்பின வாட்சுமேன் இன்னும் வரல" என்று ஒருவன் கொட்டாவி விட்டான்.

"உங்க பாடத்தை மனப்பாடம் பண்ணிட்டீங்களா? வாங்க. வசனம் சொல்லுங்க..." என்றார் வாத்தியார் வெங்கு, நாக கணேஷைப் பார்த்து.

"எனக்குத்தான் வளண்டி, வண்டியா வசனம் எழுதிக் குடுத்துட்டீங்க வாத்தியார். சிவாஜியுடைய தம்பின்னோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாம்பா பிள்ளைன்னோ என்னை நினைக்கிறீங்க போல் இருக்கு. பக்கம் பக்கமா மனப்பாடம் செய்யற வயசா எனக்கு?" என்று எழுந்து ஒற்றை பல்ப் தொங்கிய இடத்திற்கு வந்தான் கணேஷ்.

"சரி சரி. அடுத்த ஒத்திகைக்குள்ளயாவது மனப்பாடம் பண்ணிடு. இப்ப பேப்பரைப் பாத்துப்படி..." என்றார் வெங்கு. "மேடையில் ஏறி, டயலாக்கை பத்திப் பத்தியா முழுங்கிடுவியே! நான் எழுதிக் குடுக்கற டயலாக் பூரா நீ ஒழுங்கா சொன்னா, உன் கேரக்டர் ஆடியன்ஸ் மத்தீல அப்படியே 'தூள்' கிளப்பும். எங்க..."

"டார்லிங், இயர் பை இயர் உன் அழகு கூடிக்கிட்டே போகுதே, அதன் மர்மம் என்ன? உனக்கு 35 வயசுன்னு எந்தக் குருடன் சொல்லுவான்? 18 வயசுதான் சொல்வேன். 18 இல்லை 16 என்றும் பதினாறு. நீ மார்கண்டேயி..."

வாத்தியார் வெங்கு பெண் குரல் பேச வேண்டிய வசனத்தைப் படித்தார். "ச்சீ போங்க அத்தான்! இந்தக் குறும்புல ஒண்ணும்கொறச்சல் இல்ல! எனக்கு சினிமால நடிக்க சான்ஸ் வாங்கித் தருவீங்கன்னுப் பாத்தா, இந்தா, அந்தான்னு இழுத்தடிக்கிறீகளே!..."

கொத்து டீ வந்தது. ஆளுக்கு ஒரு கிளாஸ் எடுத்துக் கொண்டு பெஞ்சுகளில் அமர்ந்தனர்.

"இந்தத் தடவை எந்த நடிகையை புக் பண்ணப் போறீங்க?.." என்றான் நாக கணேஷ்.

"உக்கும்! அதைத் தெரிஞ்சுக்க அலைங்க. மாயவரம் மாலதி தான்..." என்றார் வெங்கு.

## இரண்டு

**அ**டுப்பில் பெரிய எண்ணெய் வாணலியில் வடைகள் வெந்தன. எதிரே கைலியை மடித்துக்கட்டிநின்றான் தொப்பைக்கார அருணாச்சலம். எண்ணெயில் மிதந்த பெரிய வடைகளைப் பார்த்ததும் நாடக நடிகை மாயவரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதியின் பெரியமுகம் - முகம் மட்டுமா பெருசு - உடம்பும்தான் நினைவிற்கு வந்தது. சட்டுவத்தால் வடைகளை அலைத்தான்..

இதுவரை வாத்தியார் வெங்கு பத்து நாடகங்கள் மேடை ஏற்றிவிட்டார். எல்லாவற்றிலும் அருண்தான் கதாநாயகன். இனி எத்தனை நாடகங்கள் எழுதி கடலூர் முழு நிலா நாடக மன்றம் அரங்கேற்றினாலும் எல்லாவற்றிலும் அவன்தான் கதாநாயகன் என்று வெங்கு சொல்லிவிட்டார்.

அருண், வெங்குவின் கண்ணில்பட்டதே தற்செயலாகத் தான். பத்து ஆண்டுகள் முன்பு ஒரு லீவு நாளில் பகல் பொழுதில் பள்ளி வகுப்பறை ஒன்றில் வெங்கு நாடக நடிகர்களை வைத்து ஒத்திகை நடத்தினார். அந்த இடத்தில் வடையும், டீயும் விற்கும் எண்ணத்தில் நுழைந்தான் அருணாசலம்.

டாக்டர், ஒரு நோயாளியைப் பரிசோதிக்கும் காட்சி. வேடிக்கைப் பார்த்திருந்த அருண் வாய்விட்டுச் சிரித்தான்.

"ஏன் தம்பி, என்ன சிரிப்பு?"

"அய்யே, இவர்தான் டாக்டராம்! மார்ல அதை வெச்சு வெச்சு அழுத்தறாரே தவிர ரெண்டு காதுலயும் செருகிக்கலயே!"

"சொல்றது எல்லாருக்கும் சுலபம். நடிச்சுப்பாத்தா தான் தெரியும்..." என்றார் வெங்கு.

"ஒண்ணும் கஷ்டமில்ல..."

"நடிக்கிறியா?..."

"கதாநாயகன் வேஷம் குடுத்தா."

கொடுத்தார் வெங்கு. வெகு இயல்பாக நடித்தான் அருண். தொலைவில் இருந்துப் பார்த்தால் மேடையில் அவன் தொப்பை மற்றும் குண்டு உருவம் அசிங்கமாகத் தெரியவில்லை. கம்பீரமாக, அழகாகக் காட்சி அளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டும் அல்ல, அருணின் சிறப்பு, கொடுக்கும் வசனப் பாடத்தைக் கவனமாகப் படித்து மனப்பாடம் செய்துவிடுவான். மேடையில் அவன் வசனம் பேசும்போது மேடையின் பின்புறம் இருக்கும் ப்ராம்ப்டர் வசனத்தை அருணுக்கு நினைவுப்படுத்த வேண்டியதே இல்லை.

அருண் வைத்திருந்தது சிறு சிற்றுண்டிக் கடை. அவன் வீட்டின் முன்புறம் தட்டி அடைத்து திண்ணையை ஒட்டி சிறு மேசைப் போட்டு ஒரே சமயத்தில் ஆறுப் பேர் அமர்ந்து சாப்பிடலாம். பெரும்பாலும் தட்டி மறைப்பிற்கு அந்தப் பக்கம் தெரு நடைபாதையில் நின்று காபி வாங்கி சாப்பிட்டுப் போகிறவர்கள் தான் நிறைய.

அருணின் அப்பா நடத்தி வந்த கடை அது. எந்தக் காலத்தில் இருந்தோ அப்படியே தான் இருந்து வருகிறது. வியாபாரம் கூடவோ, குறையவோ இல்லை. சில நிலையான வாடிக்கையாளர்களை நம்பி ஓடிக் கொண்டிருக்கிறது.

அப்பா உடல் அளவில் ஓய்ந்துவிட்டார். அருணும், தம்பியும் தான் கடையைப் பார்த்துக் கொள்கிறார்கள்.

ரெண்டு காராசேவுப் பொட்லம்!

ரெண்டு இட்லி ஒரு வடை!

பூரி கிழங்கு!

ஊத்தப்பம் போடு அருண்!

ஷ்ட்ராங் காபி!

"தர்றேன் அண்ணா!" என்று அருணாசலத்தின் உடல் இயந்திரமாக இயங்கினாலும் மனம் நாடக ஒத்திகையையே நினைக்கும். ஓமப்பொடி, காராசேவு, பகோடாத் தட்டுகள் இடையே மனப்பாடம் செய்ய வேண்டிய நாடக வசனக் காகிதங்களும் இருக்கும். கடையில் வியாபாரம் இல்லாத போது எடுத்து எடுத்துப் படிப்பான்.

"அருணா, பூரி செட் பார்சல்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தரேண்ணா." - பொட்டலம் கட்டிக் கொடுத்து காசை வாங்கிப் போட்ட பிறகு பாடத்தை மறுபடி -

"அருணா, ஊத்தப்பம்!"

நாள் முழுவதும் பெரும்பாலும் நின்று கொண்டே இருப்பான். அவ்வப்போது அரை டம்ளர் காபி கலந்து எடுத்துக் கொண்டு ஸ்டூலில் அமர்வான்.

ஒன்றுவிட்டு ஓர் இரவுப் பத்து மணிக்கு நாடக ஒத்திகை, பள்ளிக் கூடத்தில் இருக்கும். ஒத்திகை இல்லாத நாளில் தபால் ஆபீஸ் ஊழியன் சந்திரன் - அவன் இவர்களின் முழுநிலா நாடக மன்ற நாடகங்களில் இரண்டாவது கதாநாயகன் - சைகிளில் வந்துவிடுவான்.

"டேய் போவமா?. . ."

"போவமாவா? நாம உயிர் வாழறதே அதுக்காகத் தானேடா? கிளம்பு. . ." புறப்பட்டு விடுவார்கள். எந்த தியேட்டரில் சிவாஜி படம் ஓடுகிறது என்று. சிவாஜி படம் மட்டுமே பார்ப்பார்கள்.

"அய்யோ பிறவி மேதைடா! என்னமா நடிக்கிறான் நம் ஆள்! இவனுக்கு இணையா உலகத்துலேயே எவனுமே கிடையாதுடா. என்னிக்காவது ஒரு நாள் சென்னைப் போய், சிவாஜியைக் கட்டித் தழுவிக்கணும்டா. அதுதான் நம் வாழ்வின் லட்சியம்!"

## மூன்று

"சந்திரா, எந்திரிப்பா. டீ ஆறுது பாரு. சுட வெச்சா நல்லா இருக்காது. மணி ஏழு ஆகுது. டீயைக் குடிச்சிட்டுத் தூங்குப்பா. நாடகம், கூத்துன்னு ராத்திரிப் பூரா தூங்காம முழிச்சிருந்து பகல்பூரா தூங்கறதே வழக்கமாப் போச்சி. . ." என்றாள் அம்மா.

சந்திரன் புரண்டு படுத்தான். இன்பக் கனவை ஏனோ கலைக்கிறாய் என்று பாட வேண்டும் போல் இருந்தது. என்ன இனிய கனவு? அம்மா ஏன் குரல் கொடுத்தாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீயா? சரி. கவிழ்ந்துப் படுத்து கோப்பையை எடுத்தான்.

வெங்கு சாருக்கு ஏதோ கோபம். போடா, போடா, என் முகத்திலேயே விழிக்காதே. உனக்கும் எனக்கும் அறுந்தது தொடர்பு. இனி சந்திரன் தான் என் நாடகங்களில் கதாநாயகன் என்று அருணை விரட்டி அடிக்கிறார். நீ வா சந்திரா, இனி நீ தான் முதல் கதாநாயகன். இந்த வசனத்தை உணர்ச்சி பூர்வமா சொல்லு, கேட்போம் என்கிறார்.

அருகில் நாடக நடிகை மாயவரம் மாலதியோ, பாண்டிச்சேரி மீனாட்சி, நெல்லிக் குப்பம் மணியோ ஒருத்தி நிற்கிறாள். அவளின் 'திண்' உடம்பு சந்திரனைப் பரவசப்படுத்துகிறது.

"வாத்தியார் அய்யா, டயலாக் பேசறதை விட இவகூட ஓடி ஆடி டூயட் பாட்றது நல்லா இருக்குமே?" என்று அவளின் இடுப்பில் கிள்ளுகிறான். அடடட, சும்மா இருங்களேன் கொஞ்சம் என்று அவள் நெளிகிறாள்.

"சரி, அப்படித்தான் செய்யேன்" என்கிறார் வெங்கு. மானே, தேனே, மயிலே, குயிலே... என்று அவள் முகவாயைப் பிடிக்கிறான். அவள் மூக்கின் மீது தன் மூக்கைத் தேய்க்கிறான். அவள் அடி வயிற்றில் இவன் கைகளை மாலையாகக் கோர்க்கும்போது விரல்கள் சற்று மேலேப் பட்டுவிட "ஏய், வரம்பு மீறாதே!" என்கிறாள். நம் பெற்றோர் வரம்பு மீறியதால் தானே நீயும், நானும் வந்தோம் இந்த பூமியிலே என்று அரிய தத்துவத்தை உதிர்க்கிறான்.

அப்போது பார்த்து அம்மா டீயைச் சாப்பிடு என்று எழுப்பிவிட்டாள்.

ஹ்ம், வெங்கு சாராவது, மனம் மாறுவதாவது? முழு நிலா நாடக மன்றத்தின் என்றும் கதாநாயகன் அருண் தான் என்று ஒவ்வொரு நாடகத்தின் போதும் நாடகம் முடிய பத்து நிமிடம் இருக்கையில் நன்றி நவிலல் என்கிற பெயரில் மேடையில் தோன்றி மைக்கில் சொல்கிறார். அவன் அப்படி என்ன அவருக்கு சொக்குப் பொடி போட்டானோ! அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையில் மீந்துக் கிடக்கும் ஓம்பொடிப் பொட்டலங்களை அவ்வப்போது குரு காணிக்கையாகச் செலுத்துவதோடு சரி.

அதைப் பார்த்துவிட்டு சந்திரனும் அம்மாதிரி வேலைகளை ஆரம்பித்தான். வாரம் இருமுறை ஸ்வீட் பாக்கெட்டுடன் சென்று வெங்குவைக் கண்டு கொண்டான். ஒரு மூன்று மாதம். . .

பெரிய கோவில் வாசலில் தான் வெங்குவின் தையல் கடை. தையல் மெஷின் ஓட்டுவதை நிறுத்தி, வெங்கு சார், சந்திரன் கொண்டு வந்த ஸ்வீட் முழுவதையும் தானே தின்று முடித்து விரல்களை நக்கியபடி, "ரொம்ப நல்லாருக்குபா" என்றார்.

மூன்று மாதம் கழிந்த பிறகு சந்திரன் தொண்டையைக் கனைத்து சரிப்படுத்திக் கொண்டு, "வாத்தியார் அய்யா, நான் கதாநாயகனா வர்ற மாதிரி ஒரு நாடகம் எழுத மாட்டீங்களா?" என்றான்.

வெற்றிலை பாக்குப் பொட்டலத்தைப் பிரித்தார் வெங்கு. வெற்றிலைப் போட்டு முடிக்க இரண்டு நிமிடம் ஆயிற்று. வெற்றிலைக் குழம்பு முகத்தை வெங்கு அண்ணாத்தினார்:

"சந்திரா, ஆண்டவன் ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு முக அமைப்பைக் குடுத்திருக்கான். கதாநாயகனின் தம்பியா, மச்சானா, நண்பனா, ஒருடாக்டரா, சமூக சேவகனா வரத்துக்கு நீ பொருத்தமா இருக்க. உன் கீச்சுக் குரலை வெச்சுக்கிட்டு கதாநாயகன் ரோலுக்கு ஆசைப்படாத. இந்த வேஷங்கள்ளயும் நீ பேர் வாங்க முடியும். போய் வா. உன் ஸ்வீட்டுக்கெல்லாம் நன்றி. . ."

வீட்டு வாசலில் கிணிங் என்று சைகிள் சத்தம். "சந்திரன் இருக்கானா" என்று அருணின் குரல்.

"என்ன நேத்து போஸ்டல் இலாகா ஆண்டு விழா மேடையில அமக்களம் பண்ணிட்டியாமே! உன் நடிப்புக்குத் தான் முதல் பரிசு குடுத்தாங்களாமே! வாழ்த்துக்கள்!..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா, குடுத்தாங்க. . ." என்றான் சந்திரன் அசுவாரசியமாக. முதல்நாள் விழாக் காட்சிகள் நினைவிற்கு வந்து எரிச்சலூட்டின.

மாறுவேடப் போட்டியில் கலந்து கொள்ள சந்திரன் பெயர் கொடுத்தான். நாக கணேஷ் பெயர் கொடுக்கவில்லை என்று தான் தகவல். ஆனால் மேடையில் மொட்டைத்தலை சாணக்கியனாக நாக கணேஷ் கையில் நீண்ட தடி ஏந்தி வந்தான். சந்திரன் சாக்ரடீசாக, கறுப்புப் போர்வையும், கைத்தடியுமாக. சாக்ரடீசாக. சாணக்கியனா? மேனாட்டு மேதையா? இந்திய அறிஞனா? யாருக்குப் பரிசு? நீதிபதிகள் திணறிவிட்டனர். குலுக்கலில் சாக்ரடீசுக்கே பரிசு என்று முடிவாயிற்று. இது என் திறமைக்குக் கிடைத்த பரிசு இல்லை என்று சந்திரன் வருந்தினான்.

## நான்கு

**தோ**ளில் தொங்கும் பையும், கையில் அடுக்கிய கடிதங்களுமாக போஸ்ட்மேன் நாககணேஷ் போஸ்ட் ஆபீஸ் வாசல் திடலுக்கு வந்தான். இங்கே நிறைய கல்பெஞ்சுகள். ஒவ்வொரு பெஞ்சில் ஒவ்வொரு பீட் போஸ்ட்மேன் தங்கள் பாரத்தை இறக்கினர். அவர்களைச் சுற்றி கூட்டம். ஆங்காங்கே மொபைல் டீக்கடைகள்.

போஸ்ட்மேன் தங்கள் தெருவிற்கும், வீட்டிற்கும் வந்து சேர இன்னும் இரண்டு மணி நேரம் ஆகலாம். அதுவரை காத்திருக்கும் பொறுமை இல்லாத சிலர் போஸ்ட் ஆபீஸ் வாசலுக்கே தபால் வாங்கிச் செல்ல வருவார்கள். தபால்களை தெரு, வீடுவாரியாக அடுக்கிய ஞாபகத்தில் தபால்காரர்கள் -

"ஒங்களுக்கு ஒண்ணும் தபால் இல்லீங்க."

"ஒங்களுக்கு ஒரு புக் போஸ்டு இருக்குங்க. எடுத்துத் தரேன். தம்பி, ஒரு டீ குடுப்பா!"

"அய்யய்யோ, கதை திரும்பி வந்துட்டுதா? ரெண்டு மாசம் ஆனதாலப் பிரசுரம் ஆகும்னு நினைச்சேனே. . ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் தினமும் வரும் எழுத்தாளர். அவசரம் ஒண்ணுமில்லப்பா. டீயைக் குடிச்சிட்டே எடுத்துக் குடு.

பஸ்சுக்குக் காத்திருந்த பெண்களை நோட்டம் விட்டபடி டீ கிளாசை ஆட்டி ஆட்டி மெல்ல உறிஞ்சினான் நாக கணேஷ். இந்தப் பெண்கள் இறைவனின் அற்புதப் படைப்பு என்றே வியக்கத் தோன்றுகிறது. எத்தனைமுறை பார்த்தாலும் சலிப்பதில்லையே! ஆண்களின் கண்களுக்கு நல்விருந்து.

இந்த வேலையில் நிறையப் பெண்களை பார்க்க, ரசிக்க முடிகிறது. தபால்காரரை எதிர்பார்த்து சில பெண்கள் ஒரு பாதம் நிலத்தில் பதித்து, மற்றொரு கால் கட்டைவிரல் மட்டும் ஊன்றி நாட்டிய அபிநயம் போல நிற்பது ஓர் அழகு. "இந்த ஒரு லெட்டர் மட்டும் தானா போஸ்ட்மேன்?" என்று இனிய குரலில் விசாரிப்பாள் ஒரு பெண்மணி. தாகத்திற்கு நீர் கேட்டால் கறி வேப்பிலையும், இஞ்சியும், கடுகும் தாளித்த கனமான மோரையே பருகத் தருவார்கள் சில பெண்கள். நடக்கும்போது சல், ச்சல் என்று கொலுசுச் சத்தம் கேட்கும். கை வளையல்கள் கலகலக்கும். பேசும் போதே கண்களில் மின்னல் வெட்டும். இந்தப் பெண்களை மனைவிகளாக அடைந்த கணவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று நினைப்பான் நாக கணேஷ்.

ஹ்ம், எனக்கும் வாய்த்திருக்கிறதே ஒரு கரிக்கட்டை! ஒண்ணரைக் கண் வேறு. மாமன் மகள். நாக கணேஷின் மூன்று சகோதரிகளைக் கரை ஏற்றும் பொறுப்பை தாய்மாமன் நிறைவேற்றியதற்கு நன்றிக் கடனாக நாக கணேஷ், மாமாவுக்கு மாப்பிள்ளை ஆனான். தூணுக்கு சேலை கட்டினாலும் வெறித்துப் பார்க்கும் வாலிப வயது - வெறி - அவளையும் கட்டி அணைத்து ஒன்பதுப் பிள்ளைகள் பிறந்தாயிற்று. இருப்பினும் வெளியிடங்களில் பளிச் என்று எவளையாவதுப் பார்க்க நேர்ந்தால், தான் அவசரப்பட்டு ஏமாந்து விட்டோம் என்று வருந்தாமல் இருக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஏமாற்ற உணர்விற்கு மாற்றாக அமைந்தது நாடகமேடை.

ஒரு சமயம் கோவிலில் பௌராணிகர் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். திடீரென்று ஓர் ஆண், பெண் எழுந்து ஆளுக்கு ஒரு தட்டு ஏந்தி சபையோர் நடுவில் வருகிறார்கள். டொக், டொக் என்று நாணயங்கள் விழுகின்றன.

"அடடா, இப்படி தட்டு வசூல் செய்வார்கள் என்பது எனக்கு நினைவு இல்லை. காசு கொண்டு வரவில்லையே!" என்று வருந்தினார் வெங்கு.

"முன் வரிசையில் பாரும், வக்கீல், ஜட்ஜ் என்று பிரமுகன்கள். அவன்கள் எதுவும் தட்டில் போடவில்லை. உமக்கு மட்டும் இந்த விஷயத்தில் என்ன வெட்கம்? பதறாமல் இரும்..." என்றான் நாக கணேஷ்.

"சாரின் குரல் மிடுக்கா இருக்கு. நாடகங்கள்ள வில்லன் வேஷம் குடுத்தா செய்வீங்களா?"

கோவில் வாசலில் தையற்காரர். அதே சமயம் நாடக ஆசிரியர், டைரக்டர். வெங்குவின் அறிமுகம் கிடைத்ததில் நாக கணேஷ் அரிதாரம் பூசி மேடை ஏறினான்.

நாடகத்தில் நடிப்பது ஒரு சந்தோஷம் என்றால் நாடகம் முடிந்த பிறகு நடிகை கிடைப்பது அதைவிட சந்தோஷம். நடிகைகளை புக் செய்யும் பொறுப்பை நாக கணேஷிடமே விட்டுவிடுவார் சில சமயம் வெங்கு.

நடிகைகளின் முகவரியைத் தெரிந்து கொண்டு, எந்த கிராமம் ஆனாலும் தேடிச் சென்று நாடக வசனப் பாடத்தையும் முன்பணத்தையும் கொடுத்து வருவான் நாககணேஷ்.

நாடகத்திற்கு முன் தினமே அந்த நடிகைகள் இறுதி ட்ரஸ் ரிகர்சலுக்கு வந்துவிடவேண்டும். தாயும் மகளுமாக அவர்கள் வந்து இறங்கிய உடனேயே படபடப்பாகி விடுவான் நாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கச்சி, சாப்பிட்டியா, தூங்கினியா? இடம் வசதியா இருக்கா? எது வேண்ணாலும் கேளு. . ." அங்கேயே சுற்றிக் கொண்டிருப்பான். மகளே, தாயே, அன்பு சகோதரி என்றெல்லாம் மேடையில் வசனம் பேசியவளை தற்காலிக மனைவி ஆக்கவே துடிப்பான்.

எல்லா நடிகைகளும் அப்படி இல்லை. முறைக்கிறவர் களிடம் எட்டி நின்று நல்ல மனிதன் பெயர் வாங்குவான். படியும் போல இருந்தால் வீழ்த்தி விடுவான். அவன் காட்டில் மழைதான். அய்ம்பது, நூறு அவன் கைப்பணமும் செலவாகும். ஆனாலும், பரம திருப்தி.

## அய்ந்து

"சில்லறையா இல்லீங்களா சார்? ஒரு காபி சாப்பிட்டதுக்கு நூறு ரூபாயை நீட்டீங்களே?. . ." என்றபடி சில்லறை கொடுத்தான் சிவப்பா.

"இல்லீங்க முதலாளி. . ."

"நானும் முதலாளி இல்லீங்க. தொழிலாளி தான். எங்க முதலாளி எதிர் சந்துல ஒண்ணுக்கு இருக்கப் போயிருக்காரு. அதுவரைக்கும் நான் பாத்துக்கறேன். . ." என்றான் சிவப்பா.

"இவர் கல்லாப் பொறுப்பாளரா இருக்கறதுனாலத் தான் உங்களுக்கு நூறு ரூவாக்கு சில்லறை கிடைக்குது. ஒரிஜினல் முதலாளின்னா மூஞ்சி அடிதான் கிடைக்கும்" என்றார் ஒருவர்.

சிவப்பா, பெயருக்கு ஏற்றபடி சிவப்பு நிற மனிதன். குண்டு உடம்பு. சாதாரண உயரம். அவனுக்கு வயது முப்பது. அந்த ஓட்டலில் அவன் சரக்கு மாஸ்டர். தோளில் எப்போதும் ஒருசிவப்புத் துண்டு கிடக்கும். அது அவன் சார்ந்துள்ள கம்யூனிஸ்டு கட்சியைக் குறிப்பது. கட்சி அலுவலகத்திற்கும். கட்சிக் கூட்டங்களுக்கும் அடிக்கடி சென்று வருவான். கட்சி அலுவலக ஆலோசனைக் கூட்டமும், நாடக ஒத்திகையும் பாதிக்காமல் பார்த்துக் கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பாவின் குடும்பம் சிறியது. அம்மா, ஒரு தங்கை. அம்மாவுக்கு வயது 75. தங்கைக்கு விரல்கள் மடங்கிய குஷ்டம். மருத்துவம் பார்க்கிறார்கள். இருப்பினும் தங்கைக்குத் திருமணம் ஆகுமா என்பது அய்யம். அவள் திருமணம் செய்துக் கொள்ளாததால் சிவப்பாவுக்கும் திருமணம் கிடையாது. தங்கையை வாழ்நாள் முழுவதும் காப்பாற்றும் தார்மீகப் பொறுப்பு சிவப்பாவுக்கு.

சிவப்பா நல்ல மனிதன். தன் சம்பளத்தில் ஓர் இலவச வாசகசாலை நடத்துகிறான். எவரிடமும் மரியாதையாக நடந்துக் கொள்வான். இதமான சொற்களைப் பேசுபவன்.

ஒரே ஒரு கெட்டப் பழக்கம் உண்டு. அடிக்கடி பாண்டிச்சேரிக்கு பஸ் ஏறி விடுவான். பாட்டில் திறக்க வேண்டும். அவன் ஜிப்பா பாக்கெட்டில் அவன் மனப்பாடம் செய்யவேண்டிய வசனப் பாடத் தாள்களுடன் குவார்ட்டர் பாட்டிலும் இருக்கும்.

முழு நிலா நாடக மன்றத்தின் இரண்டாவது வில்லன் நடிகன் சிவப்பா. வில்லன் நாக கணேஷின் பிரதம கையாள். அல்லது ஏதாவது கதாபாத்திரத்திற்கு அப்பா. இவன் முரட்டு உடம்பும், தடிக்குரலும் அந்தப் பாத்திரங்களுக்குத் தான் பொருத்தம் என்று வெங்கு நினைத்துவிட்டார்.

ஓட்டல் பணி இல்லாத நாட்களில் சிவப்பா ஓர் ஆட்டோவில் ஏறிக் கொள்வான். கையில் மைக். "வணக்கம். இன்று மாலை ஆறுமணி அளவில் கடலூர் மஞ்சகுப்பம் மைதானத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இந்தி மொழிப் போராட்டத்தில் உயிர்விட்ட தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் மாநாடு நடைபெற உள்ளது. அவ்வமயம் நாவரசர் நாஞ்சில் மனோகரன் ஆற்றொழுக்குப் பேச்சாளர் ஆசைத்தம்பி மற்றும் பலர் உரையாற்ற உள்ளார்கள். கூட்டத்திற்குப் பெரும் திரளாக வாரீர், வாரீர் என. . ."

இந்த மாதிரி அறிவிப்புப் பணிக்கு சன்மானம் உண்டு. சன்மானம் பெறாமல் முழுநிலா நாடக மன்றப் பிரசாரம் செய்வதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றிரவு ஒன்பது மணிக்கு கைத்தறி வார விழாவின் மூன்றாவது நாள். கடலூர் முழுநிலா நாடக மன்றத்தின் தெருப்பாடகன் சமூக நாடகம் நடைபெறும். கதை வசனம் இயக்கம் முத்தமிழ் வித்தகர் வெங்கு, வெங்கு, வெங்கு!"

சிவப்பா அடிக்கடி நாக கணேஷைச் சந்திப்பான். இருவரும் பாண்டிச்சேரி போவார்கள். தண்ணி. குட்டி. . .

நாக கணேஷை தன் குருவாக நினைப்பவன் சிவப்பா. அவன் என்ன சொன்னாலும் கேட்பான். ஆனால் ஒரு சமயம் நாக கணேஷையும், வெங்குவையும் எதிர்க்க வேண்டியவன் ஆனான்.

வெங்குவின் ஒரு நாடகம் 'சரித்திரம் திரும்புகிறது'

ஓர் ஓட்டல் முதலாளி. அவரை எதிர்த்து ஊழியர்கள் ஸ்டிரைக். கதவடைப்பு. தலைமை சர்வர் சந்திரன் தான் புரட்சித் தலைவன். முதலாளியின் மகளின் காதலனும் அவனே. முதலாளியைப் பகைத்து, ஊழியர்கள் வெளியேறி சந்திரன் தலைமையில் புதிய ஓட்டல் துவங்குகிறார்கள். இப்போது சந்திரன் முதலாளி. காலப்போக்கில் மறுபடி ஸ்டிரைக், புதிய தலைவன். சந்திரன் ஒழிக! சந்திரனுக்கு முழி பிதுங்குகிறது. . .

இந்த நாடகம் மூன்று முறை அரங்கேற்றப்பட்டது.

"வாத்தியார் அய்யா, தொழிலாளர் பேரியக்கத்தையே இந்த நாடகத்தின் மூலம் கேவலப்படுத்தறீங்க. ஒரு நாடக ஆசிரியர் இப்படி எழுதலாமா? . . ." என்று சிவப்பா கோபித்ததில் வெங்கு பயந்து இந்த நாடகத்தைப் பரணில் போட்டுவிட்டார். வெங்குவின் மற்ற நாடகங்கள் ஓ.கே.

நாடக நடிகைகளை எப்படி, மடியில் படுக்கையில் வீழ்த்துவது என்று சிவப்பாவும், நாககணேஷும் ரகசியம் பேசுவார்கள். அருணும், சந்திரனும்" அண்ணே, அண்ணே, உங்கக் கூட்டணில எங்களையும் சேத்துக்குங்க. . ." என்று கெஞ்சுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போங்கடா, சின்னப் பசங்க, உங்களுக்கு தைர்யம் பத்தாது" என்பான் நாககணேஷ்.

அது உண்மைதான். அருணும், சந்திரனும் நடிகைகளின் கைகளைத் தொடுவார்கள். ஒட்டி ஒட்டிநிற்பார்கள். அவள்களின் கன்னங்களைக் கிள்ள விரல்கள் பரபரக்கும். ஆனால் உள்ளம் படபடக்கும். தேகம் நடுங்கும்.

"இந்த ஆட்டோல ஏறு பொம்பளை. ஒரு நல்ல ஓட்டல் போய் சாப்பிட்டு வருவோம்..." என்பான் சிவப்பா. "ஆமா.." என்று நெருக்கி ஏறுவான் நாக கணேஷ்.

"மதனோற்சவம் ரொம்ப அருமை!" என்று சில நாட்களுக்கு அந்த அனுபவங்களையே பேசுவார்கள் வில்லன்கள் இருவரும்.

## ஆறு

"கண்ணம்மா, ஒனக்கு ஒரு அஞ்சு ரூவா வெச்சிட்டுப் போறேன். ஓட்டல்ல ஏதாவது சாப்பிட்டுக்க. நான் ஒரு எடம் போறேன். அவங்க ரூபாத் தரணும். மத்தியானம் வந்துட்றேன். சமையல் பண்ணிச் சாப்பிடுவோம்..." என்றான் கொத்தமல்லி.

"ஏங்க, நீங்க ஒண்ணுமே சாப்பிடலியே? போற வழில ஏதாவது சாப்பிடுங்க. வீட்டுக்காரரர் வந்து கன்னா பின்னான்னுக் கத்திட்டுப் போறாரு ஆறுமாச வாடகை பாக்கின்னு. அதுக்கு ஏதாவது வழிப் பண்ணுங்க முதல்ல" என்றாள் மனைவி கொல், கொல் இருமலுடன்.

பாவம் அவள். தகப்பன் ஒரு பிரபல வக்கீல். அவள் சற்றுப் பொறுமையாக இருந்திருந்தால் அவளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்திருப்பான். வீட்டுக்கு வீடு சென்று லெண்டிங் லைப்ரரிப் பத்திரிகைகள் விநியோகிக்கும் கொத்தமல்லியை எப்படியோ விரும்பினாள்.

கொத்தமல்லிக்கே தூக்கிவாறிப் போட்டது அவளின் முடிவைக் கேட்டு. தகப்பன் வெகு சாதாரணமாக எடுத்துக் கொண்டான். "சரி, அப்ப, அவன் பின்னாலயேப் போயிடு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தமல்லி கோவிலில் வைத்து தாலி கட்டினான். அழைத்து வந்துவிட்டான் குடும்பம் நடத்த.

கொத்தமல்லி முழுநிலா நாடக மன்றத்தின் சிரிப்பு நடிகன். கொத்தமல்லியும், வெங்குவும் சேர்ந்து மேடையில் அடிக்கும் கொட்டடங்களைப் பார்த்து ரசிகர்கள் கை தட்டிச் சிரிப்பார்கள்.

முழுநிலா நாடக மன்ற நடிகர்களுக்கு நாடகத்தில் நடிப்பதற்குச் சன்மானம் ஏதும் கிடையாது. அவ்வப்போது டீ, பன் சாப்பிடுவதோடு சரி. நடிகைகளுக்குத்தான் சன்மானம். அதுவும் அய்ம்பது ரூபாய்தான்.

கொத்தமல்லி வீடு திரும்பி சட்டையைக் கழற்றினால் பனியனில் ஆயிரம் ஓட்டைகள். ரசிகர்களைக் குலுங்க குலுங்க சிரிக்க வைக்கும் காமெடியனின் வாழ்வில் ஒரே அழுகை.

"ஏங்க, முழுநிலா நாடக மன்ற நாடகம் வருஷத்துக்கு ஒண்ணோ, ரெண்டோ தான் நடக்குது. அதுக்கும் ஒண்ணும் பைசாக் கெடையாது. வேற நாடகங்கள்ளயும் நடிச்சா என்ன?" என்றாள் மனைவி.

எந்த நாடகத்தில் நடித்தால் தான் என்ன? இருபத்தி அய்ந்து ரூபாய்க்கு மேலா சன்மானம் கொடுத்துவிடப் போகிறான்? நடிப்பதை எல்லாம் சும்மா ஆத்ம திருப்திக்கு வைத்துக் கொண்டு வயிற்றுப் பசிக்கு வேறொரு வேலை தேட வேண்டியதுதான்.

அனுமார் கோவில் எதிரே பச்சை கார் ஒன்று விரைந்து வர விழுந்தடித்துப் பாதையைக் குறுக்கே கடந்தான் கொத்தமல்லி. எருமைக் கனத்துடன் அவன் மீது வந்து மோதினான் ஒருவன்.

"ஏ, என்னப்பா, கண் ரிப்பேரா?..."

"சாரிப்பா, ஏ கொத்தமல்லி! நீயாடா?..."

"டேய், அம்பாடிக்குட்டா, எந்தா?"

பால்ய சகாக்கள் இருவரும் தெரு ஓரம் ஒதுங்கி சாய் அடித்தபடி பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாடிக்குட்டனுக்கு ஆம்னி பஸ்சில் இரவு முழுவதும் கண் விழித்து வீடியோ கேசட் போடும் வேலை. தூங்கவே முடிவதில்லை. இது என்ன வேலை? ஆவ்! கொட்டாவி கொட்டாவியாய் வருகிறது. இந்த வேலை வேண்டாம்.

டே, என்னாலக் கண் முழிக்க முடியும். இந்த வேலையை எனக்கு வாங்கிக்குடு என்றான் கொத்தமல்லி.

வாங்கிக்கோ. ஆர்.டி.வோ சிபாரிசு உண்டானால் பஸ் கார்பொரேஷன் எம்.டி (அய்.ஏ.எஸ் ஆபீசராக்கும்) கேட்பார்.

கொத்தமல்லியின் மனைவியின் பக்கத்து வீட்டில் முன்பு இருந்தவராம் டிரான்ஸ்போர்ட் ஆபீசர். அவளைப் பார்த்ததும் "வாம்மா, வா.."

உடனே எம்.டி. ஃபோனில் அழைக்கப்பட்டார். கொத்தமல்லி உடனடியாக எம்.டியிடம் அனுப்பப்பட்டான்.

"ஓகே. வேலை ரெடி. ஆயிரம் ரூபாய் டெபாசிட் கட்டுவியா? பணத்தோட வா. உடனே வேலையில் சேரு.."

அய்யோடா! ஆயிரம் ரூபாயோ?

ஒண்ணும் கலங்க வேண்டாம். மனைவியின் கழுத்தில் மஞ்சள் துண்டு ஏறியது. கொத்தமல்லியின் கையில் தாலி, "உடனே, வெச்சு வாங்குங்கோ.."

அன்றிரவு ஒன்பது மணிக்குத்தான் கொத்தமல்லி வீடு திரும்பினான். முதல் வேலையாக மனைவியின் கழுத்தில் அதே தாலியைக் கட்டினான்.

தாலியை அடகுக் கடையில் வைத்து வாங்குமுன் எம்.டியை சந்தித்தான் கொத்தமல்லி. அப்போதுதான் அந்த வேலையின் முழு விபரமும் தெரிந்தது.

ஓடும் பஸ்சில் வீடியோ கேசட் போடுவது மட்டும் இல்லை அவன் பணி. இரவு முழுவதும் ஓடி ஓடி (பஸ்சினுள் தான்) பயணிகளிடம் காலைக்குள் 200 காபி விற்க வேண்டும். விற்கும் காபியின் எண்ணிக்கையைப் பொறுத்து அவனுக்கு கமிஷன். அதுதான் அவன் தினக்கூலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி ஆத்தி! 200 காபி! ஒரே ராத்திரியில் ஒரே பஸ்சினுள் விற்க முடியுமா! பயணி தூங்குவானா, காபி வாங்கிக் குடிப்பானா? நடக்கிற கதையா?

இல்லேன்னா இன்னொரு வேலை இருக்குது. பஸ்களைத் தண்ணீர் விட்டுக் கழுவணும். இதுக்கு டெபாசிட் தேவை இல்லை. இதுவும் தினக்கூலி தான் . நீ என்னப் படிச்சிருக்க?

எட்டாவது. . .

எட்டாவதுப் படிச்சவன் பஸ்தான் கழுவணும். மேனேஜர் வேலையாக் குடுப்பாங்க?

மைக்கேல் ஜாக்சன்னு ஒரு மேல் நாட்டுப்பாடகனுங்க. படிப்பறிவு இல்லா கை நாட்டுங்க. கோடி கோடியா சம்பாதிக்கிறானுங்கோன்னு சொல்ல நினைத்தான் கொத்தமல்லி. சொல்லவில்லை. கும்பிட்டான். எனக்கு பஸ் கழுவற வேலை போதுங்கோ.

"என்னங்க இது?. . ."

"எந்த வேலையா இருந்தா என்ன கண்ணம்மா? ஒண்ணும் கேவலம் இல்ல. கால் மீ தோட்டி, பே மீ ஃபாட்டி!"

"அப்ப நாடகம்?"

"அதுவும் உண்டு. முழுநிலா நாடக மன்ற நிரந்தரசிரிப்பு நடிகன் கொத்தமல்லி வாழ்க. நாடகக் கலையும் வாழ்க. சரிசரி, எந்திரிச்சி, சமையல் பண்ணு. ஆண்டவன் யாரையும் கை விட்றது இல்ல. எப்படியோக் காப்பாத்திட்றான்!"

## ஏழு

"சார், சார்!" என்று வாசலில் குரல் கேட்டதுமே வீட்டின் உட்புறம் பொமரேனியன் 'உள், உள், உள்' என்று குரைக்க ஆரம்பித்துவிட்டது. கேட்டின் அருகிலேயே அழைப்பு மணி இருந்ததைக் கவனித்து 'குர், குர்' என்று அழுத்தினார்கள். மறுபடி "சார், ஸார்!.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரு?. . ." என்றபடி வாசல்விளக்குப் போடப்பட்டது. வாசல் கதவு திறந்தது.

"நாங்க தான் முழுநிலா நாடகமன்றம்"

"ஆங். பூட்டைத் திறக்கிறேன், இருங்க. . ."

கோல்டு பிரேம் மூக்குக் கண்ணாடி அணிந்த உயரமான மனிதன் வந்து கேட்டில் பூட்டிய பூட்டைத்திறந்தான். "வாங்க, வாங்க. . ."

"இந்த நேரத்துலத் தொந்தரவுக் குடுக்கறதுக்கு சார் மன்னிக்கணும். ஒரு மணி நேரம் முன்னால வந்தோம். சார் இல்ல போல. வீட்டு உள்ள விளக்கே எரியல..." என்றபடி நாக கணேஷ் உள்ளே நுழைந்தான். சிவப்பாவும் பின்னாலேயே.

"தொந்தரவு ஒண்ணும் இல்ல. ப்ளீஸ் கம் இன். .." சார் உள்ளே சென்றார்.

ஒரு பெண் வெள்ளை பொமரேனியனை மார்போடு அணைத்திருந்தாள். கறுப்பு நாயை சங்கிலிப் பிடித்து நின்றாள். நைட்டியில் இருந்தாள்.

'என்னே, வெள்ளை நாய் செய்த பாக்கியம்!' என்று சிவப்பா மெல்ல முனகினான்.

கலர் டி.வியில் ஏதோ ஆங்கில சினிமா ஓடியது. வெள்ளை நாயையும், கறுப்பு நாயையும் ஒரே சோபாவில் விட்டு அவள் உள்ளே சென்றாள். அவர் ரிமோட்டை அழுத்தி டி.வி. சத்தத்தைக் குறைத்தார். "உக்காருங்க. . ."

"சார் தான் பேராசிரியர் மகாரத்தின சபாபதி. நம்ம நாடகப் பாடல் ஆசிரியர். அவங்க சார் மிசஸ். அவங்களும் ஒரு பேராசிரியை. இவர் நம்ம மன்ற நடிகர்கள்ள ஒருத்தர். இப்பத்தான் முதல் தடவையா இங்க வராரு. . ." என்றான் நாக கணேஷ்.

"வணக்கம்."

"வணக்கம்"

UNIVERSITY OF PERADENIYA
20 - 8 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோபா மீது ஆங்கிலப் பத்திரிகைகள் நிறைய கிடந்தன. தலைக்கு மேலே இரண்டு மின் விசிறிகள் மிதமாக சுற்றின.

"சொல்லுங்க" என்றார் பேராசிரியர்.

"எங்க வாத்தியார் அனுப்பினாரு. நாடகப்பாட்டுகள் எழுதிட்டீங்கன்னா வாங்கி வரச் சொல்லி. . ."

"ஓ எஸ்!" எழுந்து ஒரு மேசை இழுப்பறையைத் திறந்தார்.

கிணிங் கிணிங் என்றது ஃபோன்.

"எஸ். ஹோல்டிங். யா! நோ ப்ராப்ளம்! சோ அஹெட் யார்! ஷ்யூர்! வித் ப்ளஷர்! ஓய் நாட்! அவர் அட்வான்ஸ் கிரீட்டிங்ஸ் ஓகே, ஓகே. யுவார் வெல்கம். மேடம்? ஷி இஸ் இன்த கிச்சன். ஜஸ்ட் எ மினிட்" என்று இன்டர்காம் பட்டனை அழுத்தி ஃபோனை வைத்தார்.

"ஆங். இங்கப் பாருங்க. ஆறுபாட்டு எழுதி இருக்கேன். போதுமில்ல?. . ." என்று ஒரு ஃபைலுடன் வந்து அமர்ந்தார் பேராசிரியர். "டீ சாப்பிடலாம் இல்ல? . . ."

மேடம் டீ ட்ரேயுடன் நின்றாள். பேராசிரியர் அவளைப் பார்த்துக் கை அசைத்ததும் அருகில் வந்தாள்.

டீ கப்களை எடுத்துக் கொண்டதும், "ஆங், பைதபை, உஷா, இவங்க முழுநிலா நாடகமன்றம்"

"ஹலோ!" என்று சிரிப்பைக் காட்டினாள் உஷா. அழகான அரிசிப் பற்கள். மேக்சிக்குள் ஆடிய எடுப்பான உடம்பு. முழங்கைகளில் அதிக ரோமம்.

"பாட்டைப் பாக்றீங்களா?. . ."

"வேணாங்க. ஆசிரியர் கிட்டக் குடுத்துட்றோம். . ."

"ஏன்? நத்திங் ஹாம் இன்இட், சூட் ஆகுதாப் பாருங்க. இல்லேன்னா வேற எழுதிக் குடுக்றேன். . ."

"இதுவே போதுங்க."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அய்யோ போதாதுங்க. இவருக்குப் பாட்டே எழுத வராது. இவரைப் போய் பாட்டு எழுதச் சொல்லி இருக்கீங்க. நல்லாவே இருக்காதுங்க..." என்றாள் உஷா சிரித்து.

அவள் முகத்தையே ஆர்வத்துடன் பார்த்தான் சிவப்பா. இவள் எல்லாம் நடிக்க வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

"உஷா, சும்மா இரு. அப்புறம் உண்மையைச் சொல்லிடுவேன்..." என்றார் பேராசிரியர்.

"என்னங்க உண்மை?"

"அதாவது வந்துங்க. . . உண்மையில் இந்தப் பாட்டெல்லாம் எழுதினது இவங்க தான். நான் இல்ல..."

"ஓ, கவிதாயினியா! அவசியம் படிக்கணும்..." என்று நாககணேஷ், சிவப்பா இருவரும் கூவினர்.

காகிதச் சுருளைப் பிரித்தான் கணேஷ்.

முத்து முத்தான எழுத்துக்களில் பாடல்கள்:

வானவில்லில் ஒரு பஞ்ச வர்ணக்கிளி
அது பறிக்குது எந்தன் கண்ணின் ஒளி
மேகக் கூட்டத்தில் ஒரு மின்னல் கோடு
அது உன் கூந்தல் நடு வகிடு
மலையிடை இறங்கும் அருவி
அது உந்தன் பல் வரிசை முறுவல்.

"ஆகா, அற்புதமா இருக்குதுங்க. எங்க இசை அமைப்பாளர் அருமையா ட்யூன் போடப் போறாரு. ஆடியன்ஸ் மெய் மறக்கப் போறாங்க..." என்றான் சிவப்பா.

"ஏதோ எழுதினேங்க. வார்த்தைகள் கோர்வையா வந்து விழுந்தது..." என்று கும்பிட்டாள் மேடம்.

"ஏங்க, எங்களுக்குக் கவிதைகள்னா ரொம்ப இஷ்டங்க. நீங்க அனுமதிச்சீங்கன்னா நாங்க அடிக்கடி வந்து உங்கக்கிட்ட இலக்கியம் பேசுவோம்..." என்றான் சிவப்பா ஆர்வத்துடன் உஷாவைப் பார்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்ப வேண்ணா வாங்க, பேசுவோம். வரும்போது ஃபோன்பண்ணிட்டு வாங்க. கை வேலையை ஒதுக்கி காத்திருப்பேன்..."

"கவிதையைப் போலவே நீங்களும். .." என்று அசடு வழிய ஆரம்பித்தான் சிவப்பா.

"நானும்?..."

குடிப்போதை தலைக்கேறி பேச்சு திசைமாறுவதை உணர்ந்த நாக கணேஷ். "ஒண்ணும் இல்லீங்க. உங்க கவிதைப் போலவே டீயும் அருமைங்றாரு..." என்றான்.

## எட்டு

**சி**னிமா பாட்டுப் புத்தகங்களின் பௌண்டுத் தொகுப்பைப் புரட்டியபடி குடிசை முகப்பில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தான் இப்ராஹீம். லேலல்ல லல்லேலேலேலேலே...ஏஹே ஹே.. ஆஹாஹா...என்று லேசாக ராகம் இழுத்தான். வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்துக் கொத்தாக சீவலை அள்ளினான்.

"சலாம் பாய்!" என்று சைகிளில் வந்தான் சிவப்பா.

"வணக்கம் தோழர்! வா, வா. ஏது இவ்வளவு தூரம்?" என்று உற்சாகமாக வரவேற்ற இபுராகீம், "ஏ ஆறுமுகம், ரெண்டு டீ அனுப்பு!" என்று எதிர் டீக்கடைக்குக் குரல் கொடுத்தான்.

வேலிப் படலைத் திறந்து உள்ளே வந்தான் சிவப்பா. வேலியின் உட்புறத் திடலில் இரண்டு குடிசைகள். கோழி, குஞ்சுகளுடன் மேய்ந்தது. பூவரச மரத்தடியில் நான்கைந்து ஆடுகள். சற்றுத்தள்ளி நான்கு கறவை எருமைகள் படுத்திருந்தன.

"ரிகர்சல் ஆரம்பிக்கலையா பாய்?" என்றபடி சிவப்பா, கட்டிலில் அமர்ந்தான்.

"ஆரம்பிக்கணும். மியூசிக் பார்டி வர்ற நேரம் தான்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒண்ணும் இல்ல பாய். வாத்தியார் அனுப்பினாரு. ஏழு பாட்டுகள் குடுத்து விட்டாரு. . ."

"புது நாடகம் போடப் போறீங்களா? சந்தோசம். வெங்குவே ஏழுப் பாட்டு எழுதிட்டாரா? டீ சாப்பிடு. . ."

"வெங்கு எங்க ஏழுப்பாட்டு எழுதறது? வழக்கம்போல நாடகத் துவக்கத்தில் பாட்ற முதல் பாட்டு மட்டும் அவர் து. மத்தப்படி புதுப்பாடலாசிரியர் ரத்தினம் - பேராசிரியர். . ."

"தெரியும். அடுத்த தெரு முதல் வீடு. கறுப்பா, உயரமா அவன் சம்சாரம், பிரமாத உடம்புப்பா அவளுக்கு. ."

"பேரு உஷா! இந்தப் பாட்டெல்லாம் அவ எழுதினது தானாம்! நேத்து ராத்திரி அவ கையால டீ சாப்பிட்டேன் பாரு, அப்படியே மயங்கிட்டேன் போ!"

"கையெழுத்து என்னப்பா இவ்வளவு அழகா இருக்குது! அவ யூஸ் பண்ற பேப்பரையும் பாரு, காஸ்ட்லி போல! வழவழன்னு அருமையா இருக்கே. இந்தப் பாட்டுக்கெல்லாம் உசாவை மயக்கற அளவு ட்யூன் போட்றேன், பாரு. . ."

"சரி, உன் மியூசிக் பார்டி வந்தாச்சி, நான் புறப்பட்றேன்." வேலிப்படலைத் திறந்து கொண்டு ஒரு ஸ்கூட்டர்காரனும், சைகிள்காரனும் வந்ததில் சிவப்பா எழுந்தான்.

"ரெண்டு பாட்டு கேளேன் . . ."

"நேரமில்ல. கட்சி ஆபீஸ் போகணும். நீ நடத்து. . ." சிவப்பா குட்மார்னிங் வைத்துப் புறப்பட்டான்.

"என்னா தோளர்! நலம் தானா? வாத்தியார் புது நாடகம் தயார் பண்ணீட்டாரா?" என்றான் ஆர்மோனியக்காரன் ஸ்கூட்டரை ஸ்டாண்டுப் போட்டபடி. விரல்களில் தங்கம் மின்னியது. தலையைப் படிய வாறி இருந்தான். சலவைச் சட்டை, பேன்ட், சென்ட் வாசனை. முகத்தில் பவுடர் சரியாகத் துடைக்கப்படவில்லை. காதிலும். சதுர முகம்.

"மோகன், ரெண்டாவது தங்க மோதிரம் ஜொலிக்குதுப்பா. . ." என்றான் சிவப்பா கண் சிமிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆங், ஆங். கண்டுக்காத, எதையும் கிளறாத. இப்பத்தான் எரிமலை வெடிச்சி, ஒரு மாதிரி அடங்குது நீ மறுபடி கிளப்பாதே!. . ." என்றான் தபேலாக்காரன். வழுக்கைத் தலையும், எண்ணெய் வழிந்த முகமும், காலர் வைத்த கலர் பனியனும், லொடலொட பேன்டும், தேய்ந்த ஸ்லிப்பருமாக. .

ஆர்மோனியம் வாசிக்கக் கற்றுத் தருகிறேன் என்று சமீபத்தில் தான் வயதுக்கு வந்த மைத்துனியின் மீது கை வைத்துவிட்டான் மோகன். சண்டையும், கூச்சலுமாக தெருவே நாறிவிட்டது. அவன் ஓர் ஆபீசில் டைபிஸ்டு. மைத்துனியையும் அவனுக்கே கட்டி வைத்துவிட்டார்கள்.

"இசை அரங்கம் திறக்கப்படுகிறது! கலைவாணியே, இந்தக் கலைஞர்களின் பணிவான வணக்கத்தை ஏற்பாய்!" என்கிற அறிவிப்புடன் இரண்டாவது குடிசையின் கதவைத் திறந்தான் தபேலாக்காரன். அவன் மோகனின் வீட்டிற்கு நேர் எதிரே ஒரு மளிகைக் கடையில் பொட்டலம் கட்டுபவன்.

மூலையில் சுருட்டி வைத்திருந்த பாய்களை எடுத்துத் தரையில் விரித்தனர். தபேலா, ஆர்மோனியம், மிருதங்கம், ட்ரம்ஸ், சுருதிப்பெட்டி, புல்லாங்குழல், மொராக்கஸ் என்கிற கிலுகிலுப்பை. அவரவர்களும் அவரவர் இசைக் கருவிகளுடன் அமர்ந்தனர்.

'எல்லாம் வல்ல பரம்பொருளே, இசைபாட எமக்கருளே' என்கிற இறைவணக்கப் பாடலைப் பாடினான் இப்ராஹீம்.

பிறகு சினிமா பாட்டுப் புத்தகத்தைப் புரட்டினான். ஒரு பழைய சினிமாப் பாடலை ட்யூன் பிசகாமல், எல்லா இசைக்கருவிகளும் ஒத்துழைக்க அதே அச்சாகப் பாடினான்.

"அழகிய லைலா. . ." புத்தம் புதிய பாட்டிற்குத் தாவினான். வாத்தியக்காரர்கள் அந்த இசைத் தட்டில் உள்ள அதே இசையைத் தங்கள் கருவிகளில் கொண்டு வந்தனர்.

இசைக் கலவையில் அந்தக் குடிசையே அதிர்ந்தது. வழக்கம் போல இருபத்தி ஐந்து ரசிகர்கள் வேறு கச்சேரியை ரசிக்கக் கூடிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரில் வந்து இறங்கினான் ஒரு குண்டு மனிதன். நாலு முழ வேட்டியும், அரைக் கைச் சட்டையுமாக எளிமை. ஆனால் பெரிய மனித தோரணை.

"வாங்க இசைத் தென்றல் அவர்களே!"

அசைந்தாடி வந்த இசைத் தென்றல், இபுராகீம் அருகில் அமர்ந்தது. பாட்டுப் புத்தக நோட்டு அதன் எதிரில்.

மயக்கம் எனது தாயகம்...

வாழ்வே மாயம்...

என்னை யார் என்று எண்ணி எண்ணி ...

குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில். ..

நான்கே பாட்டுகள் பாடினார் குண்டுப் பாடகர். அவர் செலவில் இசைக் குழுவினருக்கு டீ. ஒத்திகை முடியும் வரை இருந்து மற்றவர்களின் பாட்டுகளையும் கேட்டார். அரை மணி சென்று இன்னொரு சுற்று டீ வரவழைத்துக் கொடுத்தார். காரில் ஏறிச் சென்றார். நகைக்கடைக்காரரின் மாப்பிள்ளையாம்.

தார் ட்ரம் நகர்ந்து வருவது போல வந்த குள்ள குண்டு, கறுப்பு, தாவணிக்காரப் பாடகி, "உன்னைக் காணாத கண்ணும் கண் அல்ல.. " என்று இனிமையாகப் பாடினாள். இரு கன்னங்களிலும் நிறையபருக்கள்.

## ஒன்பது

**கட**கடவென்று தையல் மெஷினை ஓட்டினார் வெங்கு. நிறைய ரவிக்கைகள் தைக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு விட்டன. தையற்காரர் என்கிற முறையில் வெங்கு படு சோம்பேறி. எப்போதும் அவர் மேடை ஏற்ற வேண்டிய நாடகங்கள் பற்றியே நினைத்தார். ஆனால் அந்த சன்னதித் தெரு மாமிகள் எவ்வளவு காலம் பொறுமையாக இருப்பார்கள்? அவ்வப்போது யாராவது வந்து "எப்பத்தான் தெச்சுக் குடுப்ப?" என்று சண்டை போடுவார்கள். மூன்றாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக் குழந்தைக்கு மறுநாள் பிறந்தநாள் என்பதால் அதன் கவுனை அப்போது மெஷினில் ஓட்டினார்.

வெங்குவின் அப்பா பஸ் டிரைவராக இருந்தவர். அம்மா ஒரு பள்ளிக்கூட ஆயா. இருவருக்குமே எப்படி ஏற்பட்டதோ அப்படி ஓர் ஆர்வம். கதாகாலட்சேபம் கேட்பது என்றால் அவ்வளவுப் பிரியம். சீக்கிரம் சாப்பிட்டு விட்டு கோவில் கோவிலாகக் கிளம்பி விடுவார்கள். வெங்கு வீட்டில் இருந்து பாடம் படிப்பான். சமயங்களில் இவனும் கதைகள் கேட்கச் செல்வான்.

வெங்கு ஒன்பதாவதுப் படித்தபோது நேருக்கு நேர் இரு பஸ்கள் மோதிக் கொண்டதில் அப்பா மேல் உலகில் கதாகாலட்சேபம் கேட்கப் போய்விட்டார். அம்மா கலங்கவில்லை. பகவான் அவரை சீக்கிரம் அழைத்துக் கொண்டார், என் சீட்டு எப்போது அவர் கையில் அகப்படுமோ என்றாள்.

அப்பாவைப் பறிகொடுத்ததில் வெங்குவுக்கு மேற் கொண்டு பள்ளிப் படிப்பைத் தொடர்வதில் ஆர்வம் போய்விட்டது. ஏதேதோ வேலைகள் பழகி 25வது வயதில் தையற்காரர் ஆனார். அப்பா இறந்ததில் அம்மா புத்திசாலித்தனமாக அன்றே ஒரு வீட்டை விலைக்கு வாங்கிப் போட்டாள்.

வெங்கு காலை, மாலைகளில் கோவில் குருக்கள் அருகே நின்றார். குருக்கள் இட்ட கோவில் திருப்பணிகளை சந்தோஷமாகச் செய்தார்.

அம்மா ஒரு நாள் வட தேச யாத்திரை புறப்பட்டாள். போனவள், போனவள் தான். இன்றுவரை தகவல் இல்லை.

வெங்கு இரண்டு மூன்று பகுதிகளாக வீட்டை வாடகைக்கு விட்டார். சன்னதித் தெருவில், பெரிய கோவில் வாசலில் ஒரு சிறிய இடத்தை வாடகைக்கு எடுத்து தையல் மெஷின் வைத்தார்.

தையல் மெஷினால் ஒன்றும் பிரமாத வருமானம் இல்லை. வீட்டு வாடகையை வைத்துத்தான் வண்டி ஓடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் குருக்களின் அருகே பெரும்பாலான நேரம் நிற்பதால் கோவிலுக்கு வழக்கமாக வரும் பக்தர்களின் அறிமுகம் கிட்டியது. அதில் ஒருவர் நாடக ஆசிரியர் மில்டன்தாசன். மில்டன் தாசன் என்கிற புனைபெயர் கொண்ட கருப்பன் ஒரு சீட்டுக் கம்பெனி பில் கலெக்டர். அவர் ஏற்கெனவே மூன்று நாடகங்கள் அரங்கேற்றியவர். நான்காவது நாடக ஒத்திகை நடக்கையில், "வாங்களேன்?" என்று மில்டன் அழைக்க வெங்கு ஓர் இரவு சென்றார்.

நாடக நடிகர் ஒருவர் அரசு ஊழியர். அவருக்கு, தொலைவில் உள்ள ஊருக்கு மாற்றல் வந்துவிட்டது. அவர் இடத்திற்கு யார்?

"நீங்கதான்" என்றார் மில்டன் வெங்குவிடம்.

வெங்கு மேடை ஏறினார். இரண்டு வருடங்கள் போயின. அரசுப் பொருட்காட்சியில் ஓர் இரவு இவர்களின் நாடகம். மில்டன் தாசன், கம்பெனிப் பணத்தைக் களவாடிவிட்டதாகப் பழி சுமந்து போலீஸ் கண்களில் மண்ணைத் தூவித் தலைமறைவாகிவிட்டார்.

நாடக மன்றத்தைப் பொறுப்பேற்று நடத்துவது யார் என்கிற கேள்வி எழுந்தது. என்னால் முடியாது, உன்னால் முடியாது என்று எல்லோரும் நழுவினார்கள். சரி, நான் என்றார் வெங்கு.

அந்த வருடம் பிரச்னை முடிந்தது. பிறகு அடுத்து அடுத்து மேடை ஏற்ற நாடகங்கள் வேண்டுமே? அதை யார் எழுதித் தருவார்கள்? அதையும் நீங்கதான் எழுதணும்.

நானா! எனக்கு என்ன எழுத?. . . எல்லாம் எழுத வரும். பேனாவைத் திறங்க.

சர். . .ரி! சரஸ்வதி, நீ தான் என் எழுத்தில் வந்து இருக்கணும். தாயே, நீயே துணை அம்மா!

எழுதினார் வருடம் ஒரு நாடகம். ஏற்கெனவே தமிழ் ஒலி நாடக மன்றம் என்று இருந்ததை முழுநிலா என்று மாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளில் ஏதும் புதுமை இல்லை. ஏற்கெனவே அரைத்த மாவு, புளித்த மாவுதான். ஆனால் முழுநிலா நாடக மன்ற நடிகர்கள் தங்கள் நடிப்பால் ரசிக மகாஜனங்களை பிரமிக்க வைத்தனர். முழுநிலா நாடகமன்ற நாடகம் என்றால் ஏமாற்றம் இருக்காது நம்பிக்கையோடு பார்க்கலாம் என்று கடலூர் மக்கள் நினைத்தனர்.

முழுநிலா நாடக மன்றத்தின் வயது அய்ந்து. நாடக ஆசிரியர், இயக்குநர் வெங்குவின் வயது கூடுதலாக இன்னும் இருபத்தி அய்ந்து. அப்போது அவர் வாழ்வின் இரண்டாம் அத்தியாயம் துவங்கியது.

அவர் வீட்டின் பின் பகுதியில் அய்ம்பது ரூபாய் வாடகை கொடுத்த குடித்தனக்காரர் இந்தி பண்டிதர் ஒருவர். வீட்டு வாசலில் இந்தி கற்றுக் கொடுக்கப்படும் போர்டு. தேரடியில் சிறு இடம் வாடகைக்கு எடுத்து அதே போர்டு. தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு அலை வீசும் நேரம். பள்ளிகளில் உள்ள இந்தி ஆசிரியர்களையே என்ன செய்வது என்று அரசு திணறியது.

சாப்பாட்டுக்கே லாட்டரி. அய்ந்துப் பெண்கள் வேறு. குடும்பம் பட்ட கஷ்டம் பார்க்க சகிக்கவில்லை. கருணையினால் பத்து மாத வாடகை பாக்கியைக் கேட்காமல் விட்டார் வெங்கு.

பண்டிதரின் மூன்றாவதுப் பெண் ஆந்தூரிகா. ஒருகால், மற்றதைவிட மெலிது. நடக்கும்போது கையை கால் முட்டியில் அழுத்தி ஒரு முறை குனிந்து நிமிர்வாள்.

அவள் வந்து வெங்குவிடம் பேசிக் கொண்டிருப்பாள். நாடக வசனங்களைப் பாத்திரம் வாரியாக நகல் எடுத்துத் தந்தாள். கறுப்பு மசியில் அழகான கையெழுத்து அச்சுக் கோர்த்ததுப் போல படுநேர்த்தி. தங்கள் பகுதிக்கு, வெங்குவின் நாடக நோட்டுடன் புறப்பட்ட தூரிகா தடுமாறினாள். "பாத்து!" என்று வெங்கு தாங்கினார் "அவசரம் என்ன?"

ஆஹா, இவளின் கண்கள் தான் என்ன அழகு? பழத்துண்டுகள் போல உதடுகள். மூக்கு - குத்துவிளக்குத் தண்டுப்போல. சிறிய மூக்குத்தியும் சிறு நட்சத்திரம் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்குவின் மனதில் தூரிகா புகுந்துவிட பண்டிதரிடம் கேட்டுவிட்டார். பதினான்கு வயது வித்தியாசமா! சாதிவேறு. ஆயினும் என்ன செய்ய? வயிற்றுக்கே கஞ்சி ஊத்த வக்கு இல்லாத அவர், மகள்களின் திருமணத்திற்கு என்ன ஏற்பாடு எந்தக் காலத்தில் செய்வார்? சரி, ஈஸ்வரரோ ரட்சது!

வெங்கு மணமகன் ஆகியும் பத்து ஆண்டுகள் ஆயின. அப்பாதான் ஆகவில்லை இன்னும்.

## பத்து

காலை ஏழுமணிக்கு அருணின் கடையில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை. ஒரே ஒரு கிழவர் தான் இருமியபடி எழுந்து "ஸ்ட்ராங் காபி" என்றார். "பெரியவரே, இலையை எடுத்துத் தொட்டியில் போட்டுட்டுக் கை கழுவுங்க. . ." என்றான் அருண்.

தற்செயலாகத் திரும்பியவன் ஒரு ஸ்டூலில் வெங்கு அமர்ந்திருப்பது கண்டு இனிய அதிர்ச்சி கொண்டு, "வணக்கம் குரு" என்று அவரின் கால் தொட்டு வணங்கினான்.

"நீ பிராமணப் பிள்ளையாண்டான். இப்படி என் காலைத் தொடக்கூடாதுன்னு எத்தினி வாட்டி சொல்லி இருக்கேன்?. . ." என்று அவன் தோள்களை அன்புடன் தொட்டார் வெங்கு.

"ஜாதி எல்லாம் எப்படியோ நாசமாப் போகட்டும் குருவே. நீங்க என் மரியாதைக்குரியவர் என்பதுதான் முக்கியம். ஏன் நீங்க கல்யாணம் பண்ணி இருக்கிறது மட்டும் பிராமணப் பெண் இல்லையா? சரி, சூடா நாலு இட்லி சாப்பிடுங்க. மசால் தோசையும். . ."

"ஒண்ணும் வேணாம்பா. அரை கப் காபி போதும். திருவேந்திரபுரம் வரைப் போய் வரலாம்னுப் புறப்பட்டேன். நம்ம புது ட்ராமாவுக்கு நாலு புது ஸ்கிரீன் எழுதி வாங்கணும். . ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்கிரீன் எழுதற போது நான் இல்லாமயா? வாங்க போவோம். டே, சத்ய வாகீசா, கடையைப் பாத்துக்கடா..." என்று தம்பியிடம் பொறுப்பை ஒப்படைத்துப் புறப்பட்டான் அருண்.

"ஹையர் பைக் ரெண்டு எடுத்துக்கலாமே குரு? திருவேந்திபுரம் பஸ் எப்ப வருமோ?..."

"அட, எதிர்காத்துல யாரு மூணும், மூணும் ஆறு மைல் சைகிள் மிதிப்பா? பஸ் ஏறினா பத்து நிமிஷம்..."

"போக பத்து நிமிஷம், திரும்பப் பத்து நிமிஷம், ஆர்டிஸ்டைக் கண்டுபிடிக்க ரெண்டு மணிநேரம்..."

"அய்யோ, அந்த ஆர்டிஸ்டு என்னப்பா இந்தப் பாடுபடுத்தறான்? அவனைக் கண்டுபிடிக்கறதுக்குள்ள உயிர் போய் உயிர் வருதே?..."

"கலைஞன் ஆச்சே? எங்கயாவது மலையையும், ஆறையும் வேடிக்கைப் பாத்து நிற்பான். அவங்களை எல்லாம் யார் கட்டுப்படுத்த முடியும்?" என்றான் அருணா.

"ஒவ்வொரு நாடகம் மேடை ஏத்தற போதும் இதோ அதோன்னுக் கடைசி நிமிஷம் வரை இழுத்தடிச்சிக் கஷ்டப்படுத்திட்றான்.. அதுக்குத் தான் இந்தத் தடவை முன்னுக்கு முன்னதா சொல்லி வெப்போம்னு..."

"இதெல்லாம் நடக்கிற கதை இல்லை வாத்தியாரே. நாடகத் தேதி எங்கயோ கெடக்குது, அப்பப் பாத்துக்கலாம்னு வழக்கம்போல கெடப்புலப் போட்ருவான். எல்லாக் கலைஞர்களிடமும் இந்த சோம்பலும், அலட்சியப் புத்தியும் இருக்குது. இதுவும் ஒரு அழகுதான். அதெல்லாம் முடியாது, உடனே செஞ்சு தந்தாத்தான் ஆச்சுன்னு மென்னியைப் பிடிச்சா, கலைஞன் வேண்டா வெறுப்பா வேலையைச் செய்ய ஆரம்பிப்பான். ஆனாலும் கலை நேர்த்தியோடு செஞ்சுக் குடுப்பான்..."

பஸ் வந்தது. பஸ்சினுள் அவ்வளவாகக் கூட்டம் இல்லை. உட்கார இடம் கிடைத்தது. "நான்தான் டிக்கட் எடுப்பேன்" என்றான் அருண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரும் எடுக்க வேணாம். எங்களை என்ன ரசனை இல்லாத முட்டாளுங்கன்னு நினைச்சீங்களா? முழுநிலா நாடகமன்ற நடிகரையும், இயக்குநரையும் எங்க கம்பெனி பஸ் சுமக்க நாங்க பாக்கியம் செஞ்சிருக்கணும்..." என்றான் கண்டக்டர்.

வரிசையாக ஓட்டு வீடுகள். தென்னை மரங்கள். செங்கல் சூளைகள். சுற்றும் குயவனின் சக்கரம். மாட்டுக் காலுக்கு லாடம் அடிப்போர். கிராமப்புற எளிமை என்று திருவகீந்திபுரம் அழகாக இருந்தது. எழிலை அதிகரிப்பதற்கு மலை. மலையை அரவணைக்கும் கெடில நதி.

பஸ்ஸைவிட்டு இறங்கி 'நதி ஆர்ட்ஸ்' என்று போர்டு தொங்கிய வீட்டினுள் நுழைந்தனர். வண்ணங்களின் கலவை நெடிநாசியைத் தாக்கியது. எழுதி முடிக்கப்பட்ட பேனர்கள். சித்திரங்கள்,அரைகுறையாக நின்ற ஓவியங்கள்... நின்ற நிலையில் வண்ணம் தீட்டிக் கொண்டிருந்த இளம் கலைஞர்கள்.

"தியாகராஜன் இல்ல?" என்றார் வெங்கு.

"வாங்கண்ணா!" என்றாள் ஒரு கரிய நிறப் பெண் கையில் சட்டுவத்துடன் வெளிப்பட்டு. இப்படி ஓர் அட்டைக்கரி நிறமா என்று வியப்புடன் பார்த்தான் அருணா. புத்தம் புதிதாக சுண்ணாம்பு அடித்ததுப் போலப் பளீர் என்று வெள்ளைப் பற்களைக் காட்டினாள்.

"சௌக்யமா அண்ணா? அண்ணி எப்படி இருக்காங்க? உங்க நாடகம் எல்லாம் ரொம்ப அருமைன்னு இவங்க சொல்வாங்க. இருங்க, வராதவர் வந்திருக்கீங்க. நாஷ்டா சாப்பிடுங்க. அதுக்குள்ள நான் யாரையாவது அனுப்பி அவங்களை இட்டாரச் சொல்றேன்..."

"அதெல்லாம் வாணாம் சுஷ்மா. உன் திருப்திக்கு அரை டம்ளர் தண்ணி குடு. தியாகு எங்கே இருக்கார்சொல்லு, நாங்களே போய்ப் பார்க்கறோம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க வர்ற வழில உயரமா சாரம் கட்டி பெயின்ட் பூசிக்கிட்டு அவரு மேல நின்னதப் பாக்கலையா? இருங்க, டீயாவது..."

சுஷ்மா கொடுத்த டீ ரொம்ப அருமை.

"உன் கடையில் இப்படி ருசியான டீயை நீ குடுப்பியா அருணா?"

"ஊஹூம். கட்டுப்படி ஆகாது குரு.."

வீட்டுப்படி இறங்கினர். அந்தத் தெரு முனையில் பஸ் ஸ்டாப். அங்கே தான் சாரம் கட்டி அதில் அமர்ந்து பிரபல சிகரெட் கம்பெனிக்கான பிரும்மாண்டமான ஹோர்டிங்கில் அழகான எழுத்துக்களைத் தீட்டிக் கொண்டிருந்தான் ஓவியன்.

"தியாகு!" என்று கூவினார் வெங்கு.

தியாகுவும் வெங்குவும் சிறு வயது பள்ளி வகுப்புத் தோழர்கள். தியாகு பயின்ற ஓவியப் பள்ளியில் மாடலிங்கிற்காக நிர்வாணமாக நின்றவள் சுஷ்மா. ஒரு காலையில் நட்ட நடுத் தெருவில் ஒரு குஷ்டரோகப் பிச்சைக்காரன் சுஷ்மாவின் ஒரு மார்பைக் கடித்து இழுத்து கூட்டம் கூடி விட்டது. அந்த வழியாக வந்த தியாகு தன் கையில் இருந்த வண்ணக் குழம்பை வெறியன் முகத்தில் விசிறி அடித்து...

அடுத்த நாளே சுஷ்மாவை மணந்தவன் தியாகு என்கிற விபரங்களை வெங்கு அருணாவிடம் சொன்னார்.

கீழே இறங்கி வந்து வெங்குவைக் கட்டி அணைத்தான் தியாகு.

"வா, அய்யர் கடையில் சாப்பிட்டுக் கிட்டே பேசுவோம். புது நாடகம் போடப் போறியா? நாலு என்ன, நாற்பது சீன் எழுதித் தர்றேன்..." என்றான் தியாகு, சாராய நெடி 'குப்' என்று வீச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொன்று

"**வா**ய்யா, நடிகர் திலகம்! என்ன, இவ்வளவு காலையிலே? உன் நண்பன் இன்னும் தூங்கறான். நீயே திருப்பள்ளி எழுச்சிப்பாடு..." என்றாள் சந்திரனின் அம்மா.

"அம்மா, உங்க வரவேற்பிற்கு நன்றி. ஆனாலும் ஒரு மறுப்பு. எங்க நடிகர்திலகத்துக்கு இணை அவர்தான். வேறு யாரையும் அந்தப் பெயர் சொல்லி அழைக்க முடியாது. நான் அவர் கால்தூசுக்குச் சமம். டேய் சந்திரா, எந்திரி. நமக்கு வாத்தியார் ஒரு வேலை வெச்சிருக்காரு. மயிலாடுதுறை வரைப் போய் வரணும்டா..." என்ற அருண், தூங்கும் சந்திரனின் கன்னத்தில் தட்டினான்.

அடுத்த அரை மணியில் அவர்கள் திருப்பாதிரிப் புலியூர் பஸ் ஸ்டாண்டில் இருந்தனர்.

"என்ன சமாச்சாரண்டா? ஞாயிற்றுக்கிழமைலக் கூட ரெஸ்ட் எடுக்க முடியாம..."

"காலையிலேயே குரு ஆள் அனுப்பிட்டாரு. போனேன். ரூபாயும், பாடமும் குடுத்தாரு. நாம ரெண்டுப்பேரும் தான் மாயவரம் மாலதிக்கு அட்வான்ஸ் குடுத்து..."

"ஏன், இந்த வேலையை அந்தத் தடியன் நாககணேஷ் செய்யமாட்டானாமா?..."

"அய்யோ, போதும். சரியான அலைஞ்சான் கேசுங்க. சந்திசிரிக்க அடிச்சிடுவானுங்க. போன வருசம் போயிட்டு, கிராமத்துலக் கண்லப் பட்றவ கிட்ட எல்லாம் வழிஞ்சிருக்கானுங்க. துடைப்பம் பிஞ்சுப் போகும் ராஸ்கோலுன்னுத் திட்டு வாங்கி ஓடிவந்திருக்கானுங்க..."

"சரி, டைம்பாஸ் ஆக நான் வேர்க்கடலை வாங்கி வர்றேன். இப்படி ஓரம் நில்லு..."

"நானும் யூரின் பாஸ்.."

"என்னடா இவ்வளவு நேரம்?..." என்றான் வேர்க்கடலை கொரித்து நின்ற அருணாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லடா, லேடீஸ் டாய்லட் பக்கம் போனேனா? ஒருத்தி ஒழுங்கா கதவை சாத்திக்கல. . ."

"சே, இதாண்டா நினைப்பு எப்பப் பார்!"

கடலூரிலிருந்து சிதம்பரம் பஸ் பயணம் ஒரு மணிநேரம். சிதம்பரத்தில் இருந்து மயிலாடுதுறை ஒரு மணி நேரம். ஒரு பஸ்சின் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தனர்.

"டேய், புது நாடக வசனம் பூரா மனப்பாடம் பண்ணிட்டியா?"

"அதைவிட நமக்கு வேறு வேலை? தூக்கத்தில் கூட அதையே பெனாத்தறேன்னு எங்கம்மா சொல்றாங்க. . ."

இந்தத் தடவை நம்ம நடிப்பு சூப்பரா இருக்கணும்டா. கடலூர் ரசிக மகாஜனங்களை அசத்திடணும். . ."

"இவர்கள் மயிலாடுதுறை போய்ச் சேர காலைப் பதினொன்றரை ஆயிற்று. அங்கிருந்து மங்சளூர் செல்ல மேல்சிந்தாமணி டவுன் பஸ்சைப் பிடிக்க வேண்டும். பஸ் ஸ்டாண்டு ஸ்டால் ஒன்றில் வடையும், டீயும் சாப்பிட்டு அரைமணி ஓட்டினர். டவுன் பஸ் வந்து நின்றதும் மூன்று மடங்குக் கூட்டம் பஸ்சினுள் புக முண்டியது.

ஒரு வழியாக பஸ்சினுள் நுழைந்துவிட்டனர். ஒரே கசகச, நசநச. . . கழுத்தையோ, உடம்பையோத் திருப்ப முடியவில்லை. இந்த ஊருக்கெல்லாம் மூன்று நாளைக்கு ஒரு பஸ்தானா!

மஞ்சளூர் சாலையில் இறங்கினர். மேலும் 5 கி.மீ. புழுதித் தெருவில் நடந்தால் தான்கிராமம். அய்யோ. . . டா!

நடந்து கிராமத்தை அடைந்தனர்.

போகும் வழியிலேயே ஒரு வயலை ஒட்டி ஒரு பந்தல். கீழே கயிற்றுக் கட்டில். திடகாத்திரமான ஒரு கிழவர், "தம்பிகளா, நீங்க தேடி வந்திருக்கிறது என் மவளைத்தான். ஒண்ணும் அவசரம் இல்ல. நிதானமாப் பேசுவோம். கட்டில்ல குந்துங்க. டீ வரவழைக்கிறேன்" என்றார். சொன்னபடி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையனிடம் எவர்சில்வர் ஜக் கொடுத்து சைகிளில் அனுப்பினார்.

அருகிலேயே டப்டுப் என்று இரைத்த கிணற்றுத் தொட்டியில் அவர்களைக் குளிக்கச் சொன்னார்.

குளித்த உடன் பசி. அதை உணர்ந்த கிழவர் "டேய்!" என்றார். இரண்டு மூன்று இளைஞர்கள் சைகிள்களுடன் நின்றனர். டபிள்ஸ் ஏறி வந்ததும் வீட்டுக் கூடத்தில் காரசார சாப்பாடு. சாப்பிட்டு எழுந்தபோது தாம்பூலத் தட்டுடன் வந்தாள் மாலதி.

சென்ற வருடம் முழுநிலா நாடகத்தில் நடித்த அவளை அருணும், சந்திரனும் அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது. சென்ற ஆண்டு அவள் குண்டாக இருந்தாள். இப்போது இளைப்பு. அவளின் சின்னச் சின்ன ரோமங்கள் முளைத்த ஒல்லிக் கைகளைப் பிடித்துக் கொண்டு அப்போதே லா, லலா, லல்லல்லலா. . . என்று டூயட் பாடும் துடிப்பு ஏற்பட்டது அருணுக்கு. மேடையில்தான் இவன் கதாநாயகன். உண்மையில் உருளைக்கிழங்குப் போல வீங்கிய இவனை விட மெலிந்த உருவம் கொண்ட என்மீது தான் இவளுக்குப் பிரியம் ஏற்படும் என்கிற நினைப்பில் சந்திரன் அவளின் மேனியைக் கண்களால் தழுவினான்.

அவள் உள்ளூர் பள்ளி ஆசிரியை. அவளின் தகப்பன் மூன்று கல்யாணம் செய்து ஒண்பதுப் பெண்கள் பெற்றிருக்கிறான். மாலதி, மூன்றாம் தாரத்தின் பெண். ஏதோ சிறிது நிலம் இருக்கிறது. அதை வைத்து ஒன்பது பெண்களின் திருமணம் எப்படி நடக்கும்?

அதனால், மாலதிக்கு ஒரு லட்சியம். நாடகங்களில் நடித்துத் திறமையை வளர்த்துக் கொண்டு அடுத்த அடி சினிமாவில் வைப்பது. அதன் மூலம் பணம் சம்பாதித்து சகோதரிகளின் திருமணத்திற்கு உதவுவது.

நாடகத்தில் நடிப்பதன் மூலம் என்னப் பொல்லாத காசுப் பணம் வந்து விடப்போகிறது? அதனால் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகளிலும் சம்பாதிப்பவளோ என்கிற சந்தேகம் எழுந்தது சந்திரனுக்கு. அதை எப்படி தெரிந்து கொள்வது?

"ஏங்க, அட்வான்ஸ் அம்பது ரூவா வாங்கிக்குங்க. பாடத்தையும் குடுத்துட்டுப் போறோம். நல்லா மனப்பாடம் பண்ணிக்கிட்டு. நாடகத்துக்கு முதல்நாள் கடலூர் வந்திடுங்க. . . துணைக்கு யாரைக் கூட்டி வருவீங்க?. . ."

"துணைக்குத் தானே? எங்க ஊர்ல இட்லிக் கடை வெச்சிருக்ற பொன்னாத்தா தான். அவளுக்கு இந்த நாட்டியம், நாடகம் எல்லாம் பிரியம்.. ."

எதிர் வீட்டில் இருந்து பொன்னாத்தா வந்தாள். கறுப்பாக, குண்டாக, பாழ் நெற்றியாக. சரிதான், சிவப்பாவும் நாக கணேஷும் இந்தப் பொன்னாத்தாவைத் தான் சென்ற ஆண்டு படுக்கையில் வீழ்த்தினரா!

"இன்னக்கி இருந்து, காலையில் போகலாமே" என்றாள் பொன்னாத்தா.

## பன்னிரெண்டு

வெங்கு, கூட்டுறவு பதிவாளர் அலுவலக வாசலில் சைகிளை நிறுத்திப் பூட்டி, சாவியை ஜிப்பாப் பையினுள் போட்டுக்கொண்டு நின்று யோசித்தார். ஈசுவரமூர்த்தி வந்திருப்பாரா? ட்ரம் காபிக்காரன் ஒருவனும் அவர் அருகே வந்து சைகிளை நிறுத்தினான். "என்னங்க யோசனை?"

"ஈசுவரமூர்த்தி. . ."

"சீட்டுல இருக்காருங்க. . ."

படி ஏறினார் வெங்கு. பல மேசைகளைக் கடந்து சூப்ரண்டு ஈசுவரமூர்த்தியைக் கும்பிட்டார்.

வெங்குவைப் பார்த்ததுமே ஈசுவரமூர்த்தி உற்சாகப் பரபரப்படைந்து "வாங்க, வாங்க!" என்று கும்பிடுவார். ஆனால் இன்று "என்ன விஷயம்?" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வருஷக் கைத்தறி வாரவிழால முழுநிலா நாடக மன்றம் நாடகம் போடப் போறது இல்லீங்க..."

"அது உங்க இஷ்டம்."

"ஏன்னுக் கேளுங்க..."

"கேக்க வேண்டிய அவசியம் இல்லை."

"அவ்வளவுதானே? நான் வரேங்க.."

வெங்குவுக்குக்கோபம். ஜிப்பாப் பைகளில் கைகள் விட்டபடி எழுந்தார்.

அப்போது, "கூப்பிட்டீங்களா சார்?" என்று ஒரு சோடாபுட்டிக் கண்ணாடிப் பெண் புன்னகையோடு வந்தது. காபிக்காரனும் இரண்டு டம்ளர் காபியை ஈஸ்வரமூர்த்தியின் மேசை மீது வைத்தான்.

"ஆமா. இப்படி உக்காரு. காபி சாப்பிடு..." தன் அருகில் இருந்த மரப்பெட்டி மீது அவளை உட்கார்த்தி, "அப்பாவுக்கு நெஞ்சு வலி தேவையா?" என்று பரிவுடன் அவளைப் பார்த்தார் ஈஸ்வரமூர்த்தி.

"ஆரம்பம் ஆயிட்டுது காதல் காவியம். இன்னும் அரை மணி நேரத்துக்கு இவங்க இந்த உலகத்துலேயே இருக்க மாட்டாங்க..." என்று அடுத்த அடுத்த மேசைகளில் இருந்தவர்கள் இவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினார்கள்.

வெங்கு யோசனையோடு நடந்தார். இந்த ஈசுவரமூர்த்தி ஏன் இப்படித் திமிராக நடந்து கொள்கிறார்? அவர் தன் காதலியை எதிர்பார்த்த நேரத்தில் நம் வருகைப் பிடிக்க வில்லையோ? இன்னும் ஒரு அரைமணி கழித்து மறுபடி வந்துப் பார்த்தால் மூடு மாறி இருக்குமா?

"அடடே வெங்குவா! எங்கே அய்யா இங்கே?"

ஓர் அறையின் அரை இரட்டைத் தள்ளு கதவைத் திறந்துக்கொண்டு உள்ளே செல்ல இருந்த ஓர் அதிகாரி நின்று நிதானித்து வெங்குவைப் பார்த்தார். "உள்ளே வாரும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னதித் தெருவில் தான் அந்த அதிகாரியும் அபார்ட்மெண்ட் ஒன்றில் குடி இருந்தார். அவரின் மனைவிக்கு வெங்குதான் ஜாக்கெட் தைப்பது. வெங்குவை ஒரு நாடக ஆசிரியர் என்றும் அவர் அறிவார். ஆனால் வெங்குவுக்குத்தான் அவரைத் தெரியவில்லை.

ட்ரிங் என்று மணியை அழுத்தினார் அதிகாரி.

"ரெண்டு கோல்டு ஸ்பாட் கொண்டு வாப்பா! உக்காருங்க வெங்கு. போன வருஷம் உங்க நாடகம் பாத்துப் பிரமிச்சிருக்கேன்..."

அப்போது ஈஸ்வரமூர்த்தி அந்த அறைக்கு வந்தார். வெங்குவைப் பார்த்ததும் வியர்த்தது. கை கால்கள் வெட வெட. கைக்குட்டை எடுத்து முகம் ஒற்றினார். வத்தி வெச்சுட்டானா பாவி!

"இந்த வருஷமும் முழுநிலா நாடகம் உண்டோனோ?"

கோல்டுஸ்பாட் உறிஞ்சி முடித்த வெங்கு, "நம்ம நாடகம் இல்லாம கடலூர்ல கைத்தறி வாரம் ஏது சார்? நன்றி. அப்ப உத்தரவு வாங்கிக்கறேன்..." என்றார். எழுந்து வெளியேறினார்.

அன்றிரவு ஈஸ்வரமூர்த்தி நியூஸ் பேப்பர் பார்த்திருந்தார். ரேடியோவில் சினிமாப் பாட்டு.

காலிங்பெல் ஒலித்தது. திருமதி ஈஸ்வர மூர்த்தி கதவைத்திறந்தாள் .

"வணக்கம் அம்மா." என்றபடி வெங்கு உள்ளே வந்தார். "மகாலட்சுமி மாதிரி இருக்கீங்க தாயே. உங்களைப் பாத்த உடனே கையெடுத்துக் கும்பிடத் தோணுது. உங்களுக்குப் போய் யாராவது துரோகம் நினைப்பாங்களா?"

"துரோகமா! என்ன சொல்றீங்க?..."

"இல்ல, இல்ல. ஒரு பேச்சுக்குச் சொன்னேன். சில ஆபீஸ்ல யாருக்காவது காபி வாங்கிக் குடுத்து அசடு வழிவாங்க. நம்ம அய்யா அந்த மாதிரி எல்லாம் கிடையாது. நீங்க குடுத்து வெச்சவங்க..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாங்க வெங்கு. நீங்க யாரையும் காட்டிக் கொடுக்காத ஜென்டில்மேன்னு காலையிலப் புரிஞ்சுக்கிட்டேன். எங்க ஆபீசர்கிட்ட நீங்க என்னைப் பத்திக் குறை சொல்லல. . ." என்றார் ஈஸ்வரமூர்த்தி.

"அதெல்லாம் இருக்கட்டுங்க. நீங்க ஒரு நாடகம் எழுதி எங்கிட்டக் குடுத்தீங்க. அதை என்னால் ரிப்பேர் பண்ண நேரம் ஒதுக்கவே முடியல. அந்தக்கோவம் தானே உங்களுக்கு? இதோ திருப்பிக் கொணாந்திருக்கேன். வாங்கிக்கிட்டு ஆளை விடுங்க. . ."

"வெங்கு, உங்க நாடகம். . ."

"அது இந்த வருஷம் கிடையாதுங்க. . ."

"கோபம் வேண்டாம் வெங்கு. . ."

"அய்யா, வருஷா வருஷம் 500 ரூபாய் குடுப்பீங்க நாடகம் போட. இந்த வருஷம் 300 ரூபா சேங்ஷன் பண்ணி இருக்கேண்டான்னு லெட்டர்போட்றீங்க. எங்களுக்கு 300 ரூபா என்ன செலவுக்கு ஆகும்? நடிகைகளுக்குக் குடுக்கவே பத்தாது. நடிகர்கள் நாங்க எதுவுமே எடுத்துக்கறதே இல்ல. எங்க கைக்காச செலவுப் பண்றோம். மேற்கொண்டு எங்க வீட்டுத் துணியைக் கொண்டு வர்றோம் நாடகத்துக்கு. நாடகம் போட்றதுனால எங்களுக்கு பைசா பிரயோஜனம் உண்டா? ஆர்வம் காரணமா நாடகம் போட்றோம். அவங்க அவங்க வீட்லத் திட்டுவாங்கறது தான் நாங்க கண்ட பலன். ஏங்க 300 ரூபாயாக் குறைச்சீங்கன்னு கேக்க வந்தா நாயை விட கேவலமா நடத்தறீங்க."

"அம்மா, அய்யா ஒரு நாடகம் எழுதி இருக்காரு. கிளி மாதிரி மனைவி வீட்டில் இருக்க, குரங்கு மாதிரி ஒருத்திப் பின்னாலப்போறானாம் ஒருத்தன். நல்லாவா இருக்கு இந்தக் கதை?. . ."

"என்னக் கண்றாவி இது?. . ."

"அதான். அய்யாவுக்குக் கோபம். வரேன் அய்யா, அம்மா வணக்கம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெங்கு, இந்த வருஷம் 100 ரூபா அதிகமாவே தரேன் போதுமா? வாங்க, உக்காந்துப் பேசுவோம். நம்ம வீட்ல சாப்பிடுவீங்கன்னா சாப்பிட்டுக்கிட்டே பேசுவோம். கலைஞர்கள் கோபத்துக்கு யாராவது எதிர் நிற்க முடியுமா?" என்றார் ஈஸ்வர மூர்த்தி.

"ஈஸ்வரா, போற்றி" என்றார் வெங்கு.

## பதிமூன்று

"**வா**த்தியாரே, ரொம்ப டென்ஷனா இருக்கீங்களே! ரிலாக்ஸ்! நாங்கள்ளாம் எதுக்கு இருக்கோம்? விட்டுக் குடுத்துருவமா? ஆளுக்கு ஒரு வேலை செய்யமாட்டோமா?. ." என்றான் சிவப்பா.

"ஊர் கூடித் தாம்பா தேர்இழுக்கணும். எல்லாரும் ரெண்டு நாள் ஆபீசுக்கு லீவுப் போடுங்க. . ." என்றார் வெங்கு.

"போட்டாச்சு. என்ன வேலை ஆகணும்?"

"மேக்கப் சாமான்கள் வாடகைக்குக் குடுக்கறவனப் பாத்து விக், மீசை, தாடி, ஜடை, கொண்டை, கோட்டு, வாக்கிங் ஸ்டிக், துப்பாக்கி எல்லாம் வாடகைக்கு எடுத்துட்டு வந்திடுங்க. நம்ம நாடக நடிகைகள் ரெண்டுப் பேர். அவங்க கூட வந்த எஸ்கார்ட் ஒவ்வொருத்தர். அவங்க நாலுப் பேரும் தங்க ஹரி நாராயணன் லாட்ஜுல ரெண்டு ரூம் புக் பண்ணி இருக்கு. அவங்களுக்கு சாப்பாட்டுச் செலவுக்கு அப்பப்ப பணம் கொடுத்திடணும். சீன் எல்லாம் எழுதி நாலு திரைகள் நம் வீட்டில் கொண்டு வெச்சாச்சு. அது ஆட்டோ வெச்சு நாடக மேடைக்கு நாளைக் காலையிலேயே போயிடணும். நாளைக்கு ஆட்டோல ஏறி மைக்ல ஊர் பூரா நம் நாடகம் இருக்குங்கறத அனௌன்ஸ் பண்ணிடணும். இன்னக்கி ராத்திரி வித்தவுட் ட்ரெஸ். . ."

"தலைவா, அசிங்கமாப் பேசற. . ." என்றான் நாக கணேஷ். "அப்படின்னா விளக்கை அணைச்சிடணும். . ."

"சும்ம இருப்பா. நாடகத்துலப் போட்டுக்கற ட்ரெஸ்சும், மேக்கப்பும் இல்லாம முழு வசனத்தையும் சிவில் ட்ரெஸ்லயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லணும். நாளைக் காலேல ட்ரெஸ் ரிகர்சல் உண்டு. அதுக்கு மியூசிக் பார்டி வரணும். இப்ராகீம் கிட்டச் சொல்லிடுங்க..."

"இதெல்லாம் ஒவ்வொரு நாடகத்திலும் நாம் கடைப்பிடிக்கறது தானே குருவே? இதுக்கு ஏன் தொண்டைத் தண்ணியை வீண் பண்றீங்க?.." என்றான் ஜெய் அருண்.

பக்கத்து மளிகைக் கடையில் ஃபோன் கால் வந்தது என்று ஒரு சிறுவன் வந்தான். சந்திரன் போய் தகவல் அறிந்து வந்தான். நடிகைகள் லாட்ஜுக்கு வந்துவிட்டதாக செய்தி.

"சரி, ராத்திரி ரிகர்சலில் சந்திப்போம் டைரக்டர் சார்." என்று சைகிளில் புறப்பட்டான் நாககணேஷ். "ஆமாம் குரு." என்று சிவப்பாவும்.

"கண்ணு, வழக்கம்போல உன் புடவைகள் இரண்டு மூன்று நாடகத்திற்காகத் தர வேண்டி இருக்கும். நாடகம் முடிந்ததும் சலவைக்குப் போட்டுவிடலாம்..." என்றார் வெங்கு மனைவியிடம்.

"கழுத்து செயினையோ, காது தோட்டையோக் கழற்றித் தரவேண்டாம் அல்லவா?..."

"குருவே, எத்தனை டீ, பிஸ்கட்?.."

"இன்னிராத்திரி 25 பேருக்கு, நாளைக் காலைல 40 பேருக்கு. ராத்திரி ரிகர்சல் முடிஞ்சதும் நடிகைகளுக்கு மட்டும் ஆட்டோ. நாளைக்கு காலையில், சாயங்காலம், ராத்திரி ஆட்டோ..."

"ராத்திரி ரிகர்சலை எட்டு மணிக்கே ஆரம்பிச்சு சீக்கிரம் முடிக்கணும்.."

"சொன்ன டயத்துக்கு ஒழுங்கா வந்து சேர மாட்டான்களே! வெத்தலைப்பாக்கு, பீடி, சிகரெட்... மெதுவா இஷ்டம் போல வருவானுக.."

"ஹெட் மாஸ்டரைப் பார்த்து முன்னதாத் தகவல்.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கு சொன்ன மாதிரி அன்றிரவுப் பத்து மணிக்குத்தான் ஒத்திகையை ஆரம்பிக்க முடிந்தது. வழக்கமான ஒற்றை பல்பு இல்லாமல் இரண்டு ட்யூப் லைட்டுகள் போட்டு விட்டிருந்தார் ஹெச்எம்.

"எல்லாரும் பீடி, சிகரெட் எல்லாம் ஒதுக்கி வெச்சிட்டு பயபக்தியா வாங்கப்பா!" என்றார் வெங்கு.

நடிகைகள் உட்பட எல்லோரும் நன்றாக வசனம் பேசினர். நாக கணேஷ் மட்டும் தன் வசனங்களை உருப்படியாக உருப்போடவில்லை. ப்ராம்ப்டர் படிக்கும் வசனங்களைக் காது கொடுத்துக் கேட்க முயன்று நடிப்பைக் கோட்டைவிட்டான்.

"இன்னும் எத்தினி நாடகங்கள் நடித்தாலும் நீ உருப்படவே மாட்டப்பா. உனக்குத்தான் அழகான வசனங்கள் எழுதி குடுத்தேன். அதை எல்லாம் மனப்பாடம் பண்ணாம திருதிருன்னு முழிக்கிறியே!" என்றார் வெங்கு.

"நாளைக்கு ஃபைனல் ரிகர்சல்ல பாரு குரு, பொளந்துக் கட்டிட்றேன்..." என்றான் நாகம் வீராப்பாக.

சாயங்காலம் லாட்ஜ் பக்கம் சென்றுப் பார்த்ததில் மாயவரம் மாலதி கிடைக்கமாட்டாள், சென்ற வருடம் போல கூட வந்திருக்கும் இட்லிக்காரி தான் உம் என்கிறாள். நெல்லிக் குப்பம் கலைமணி ஊசி வெடிப் போல அநியாயத்திற்கு ஒல்லி. அவளை சிவப்பா சரி செய்துவிட்டான். அவளோடு வந்திருக்கும் ஒரு பூ விழுந்த கண்காரிக்கு மேல் வரிசைப் பற்கள் நான்கு மிஸ்ஸிங். அவளும் தயார்தான். ஆனால் நாக கணேஷுக்கு விருப்பம் எழவில்லை.

ஸ்கூல் வாட்சுமேன் பிஸ்கட், டீ விநியோகித்தான். இரவு ஒரு மணி ஆயிற்று ஒத்திகை முடிய. ஆட்டோவில் நடிகைகளைப் பத்திரமாக அனுப்பி, சைக்கிள்களை உருட்டியபடி வீடு வந்து சேர்ந்தனர்.

மறுநாள் காலையில் ஒன்பது மணிக்குப் பள்ளியில் கூடினர். அவரவரும் நாடக உடைகளை அணிய ஒரு மணிநேரம் ஆயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்குழு இப்ராஹீம் ஆட்டோவில் வந்தான்.

வெங்குவின் மனைவியும் ஆட்டோவில்.

ஹெட்மாஸ்டரும் வந்திருந்தார்.

தாங்கள் இயற்றிய பாடல்களைக் கேட்பதற்காக பேராசிரியர் தம்பதிகளும்.

சீனரி எழுதித் தந்த ஓவியர் தியாகராஜனும். சிறப்பு விருந்தினராக ஈஸ்வரமூர்த்தி.

விசில் ஊதினார் வெங்கு. இசைக்குழுவினர் தங்கள் கருவிகளை அதிகபட்சமாக முழக்கினார்கள்.

இப்ராஹீம் வாழ்த்துப் பாடல் பாடினான். வாழ்க. வாழ்க. வாழ்கவே! கலைஞர், அறிஞர், ரசிகர், உலகம் யாவும்.

கதாநாயகன் - நாயகி காதல்.

கொத்தல்லி - வெங்கு நகைச்சுவை

நாக கணேஷ் - சிவப்பா சதி.

சந்திரன் - நெல்லிக்குப்பம் கலைமணி காதல்.

அவ்வப்போது இப்ராஹீம் இசைக்குழு அதிர்ச்சி, சோகம், மகிழ்ச்சி உணர்ச்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் வாத்தியங்களை அழுத்தியும் மென்மையாகவும்...

மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. மேடையில் நடக்கும் நாடகம் போலவே இறுதி ஒத்திகை பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது.

## பதினான்கு

இரவு பத்துமணிக்குத்தான் முழுநிலா நாடக மன்றத்தின் 'தெரு பாடகன்'. மாலை ஆறு மணிக்குத் தொடங்கி நான்கு மணி நேரம் மந்திரி, எம்.எல்.ஏ, கலெக்டர் இன்னும் ஊரில் உள்ள பிரமுகன் எல்லாம் மைக் முன் நின்று அறுக்க வேண்டும். பிறகே நாடகத்திற்கென மேடை ஒழித்துவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு எட்டு மணிக்குள் நாடக மன்றத்தினர் ஆகாராதிகளை முடித்துக் கொள்ள வேண்டும். சிவப்பாவின் நண்பன் ஒருவன் இலவசமாக டெம்போ கொடுத்து உதவ முன் வந்தான். இரண்டு, மூன்று தடவைகளில் நாடக நடிக, நடிகையரை டெம்போவில் ஏற்றி மேடையின் பின்புறம் கொண்டு வந்து சேர்த்துவிட முடிந்தது.

காலையிலேயே ஆர்டிஸ்டு தியாகு, தான் எழுதிய நான்கு திரைச் சீலைகளை டெம்போவில் கொண்டு வந்து மேடையில் கட்டிவிட்டுப் போனான். தெரு, வீட்டின் உட்புறம், ஓர் ஆபீஸ் உட்புறம், ஏதோ மரம் செடி, கொடிகளுடன் கூடிய ஆற்றங்கரை என்று நான்கு வித திரைச் சீலைகள். நாடகம் முழுவதும் மாற்றி மாற்றி இந்த திரைகளில் ஒன்றைக் காண்பிக்க வேண்டியதுதான்.

மேடையின் முன்புறம் பெரிய மனிதர் எவராவது ஏதோ உரை ஆற்ற, பின்புறம் மேக்கப் நடந்து கொண்டிருந்தது. நாவிதர், மீசை ஒதுக்கி, தாடி மழித்து, புருவம் சிரைத்து, அக்கிள் சுத்தம் செய்து ஆளுக்கு ஆள் ஒருசிறிய கண்ணாடி வைத்துக் கொண்டு முகத்தில் அரிதாரம் பூசி, உதட்டில் சிவப்புச் சாயம் தடவி...

நாக கணேஷும், சிவப்பாவும் சிகரெட் பிடித்தபடி மாயவரம் மாலதியையும், நெல்லிக்குப்பம் கலைமணியையும் நோட்டம் விட்டு நின்றனர்.

"இந்தப் பொண்ணுக்கு இன்னும் கொஞ்சம் மை தீட்டணும்பா..." என்று மாலதியின் கன்னத்தைக் கிள்ளிப் பார்த்தான்சிவப்பா.

"இவ உதட்டு லிப்ஸ்டிக்கைக் குறைக்கணும்பா" என்று கலைமணியின் உதட்டில் கை வைத்தான் நாக கணேஷ்.

"இன்னக்கி நாடகத்தோட நம் உறவு முடிஞ்சிடக் கூடாது. இதோ இருக்கிற நெல்லிக்குப்பம் தானே. நாங்க அடிக்கடி உன்னை வந்துப் பாக்கறோம்..." என்றான் சிவப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா, வெட்டி அரட்டை அடிக்காம, நீங்க சொல்லவேண்டிய வசனங்களை நினைவுபடுத்திப் பாத்துக்கலாமே?"

முன்பக்க அறுவைகள் எல்லாம் முடிந்தன.

"கடலூர் ரசிகப் பெருமக்களே! இன்னும் சற்றுப் பொழுதில் நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் கடலூர் முழுநிலா நாடக மன்றம் பெருமையுடன் அளிக்கும் தெருப்பாடகன் சமூக நாடகம் துவங்க இருக்கிறது. கண்டு களித்து உங்களின் நல் ஆதரவைத் தொடர்ந்து வழங்குமாறு" - சிவப்பாவின் தடிக்குரல் மைக்கில்.

குமுக்கு, குமுக்கு! என்று குத்தினான் தபேலாக்காரன். ஆர்மோனியத்தின் கட்டைகளை மிருதுவாக அழுத்தி இனிய ஒலி எழுப்பினான். டங்! என்று தாம்பாளம் போன்ற ஒரு கருவியைத் தட்டினான் ஒருவன். இப்ராஹீமும் இன்னொரு பெண்ணும் சேர்ந்து 'வாழ்க, வாழ்க, வாழ்கவே!' என்று பாடினர்.

எல்லா நடிகர்களையும் வரிசையாக நிறுத்தி கைச்சிறுமணி ஆட்டி கற்பூர ஆரத்தி காட்டினார் வெங்கு. எல்லா நடிக, நடிகையரும் மேடைத் தரையைத் தொட்டு வணங்கினார்கள்.

முதல் காட்சி ஆரம்பம் ஆயிற்று. கதாநாயகியும், தோழியும் ஆற்றங்கரைக்கு வருகிறார்கள். அய், இந்த ஆறும், அரசமரமும், மரத்தடிப் பிள்ளையாரும் என்ன அழகுடி! காலம் எல்லாம் இங்கயே இருந்துடலாம்னுத் தோணுதடி...

அங்கே அமர்ந்திருக்கும் குருட்டுக் கதாநாயகன் ஏனோ 'ஹஹ' என்று சிரிக்கிறான். பாடத் துவங்குகிறான். பட்டணத்து மனிதர்களுக்குப் பட்டிக்காட்டு எழில் எல்லாம் (மறுபடி) பட்டணத்து மனிதருக்குப் பட்டிக்காட்டு எழில் எல்லாம் பிடிக்காதம்மா, பிடிக்காது...

கதாநாயகிக்குக் கோபம். என்னையா கிண்டல் பண்ணிப்பாடற? அவ்வளவு திமிரா? கதாநாயகனை அறைகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோ வந்தாள்,

என்னை ஏன் அறைந்தாள்? (பாடுகிறான்)

தட்டுத் தடுமாறி எழுந்து விழுகிறான்.

அய்யோ, உங்களுக்குக் கண் தெரியாதா, தயவு செஞ்சு என்னை மன்னிங்க. கதாநாயகி ஓடி வந்து கதாநாயகனைத் தூக்க, அங்கே காதல் பிறக்கிறது.

அடுத்த காட்சி வீட்டு வேலைக்காரன் வெங்குவும், புதிதாக வேலை கேட்டு வரும் கொத்தமல்லியும் சந்திப்பு.

மூன்றாவது காட்சியில் கலைமணியும், சந்திரனும் தோன்றவேண்டும்.

நான்காவது காட்சியில் தான் நாக கணேஷும், சிவப்பாவும் வரவேண்டும். நிறைய நேரம் இருந்தது.

மஞ்சளூர்க்காரி (இட்லி கடை) மெதுவாக ஓர் இருட்டான பகுதிக்கு நழுவுவதை நாக கணேஷ் கவனித்தான். சத்தம் காட்டாமல் இவனும். புடவையின் முனைகளைப் பிடித்துக் கொண்டு சட்டென்று அவள் தரையில் அமர -

"இங்கே எல்லாம் ஒண்ணுக்குப் போகக்கூடாது அம்மா!" அருகில் இவனும் அமர்ந்து அவளைக் கட்டிப் பிடித்தான்.

"யோவ், நீ பெரிய ஆளுய்யா!" என்றாள்.

"ஆமா..." அவள் கையில் அய்ம்பது ரூபாய் திணித்தான். "நானும் நேத்துலேந்து உன்னைப் பாக்கறேன். பிடியே குடுக்க மாட்டேங்றியே!"

"நல்ல எடம் பாத்த போ!..."

"நாக கணேஷ் நாக கணேஷ்!" என்று ஒருவன் கத்தினான். "எங்கே ஒழிஞ்சான்? யோவ், நீ வரவேண்டிய சீன்யா!..."

"இங்கத் தான்யா இருக்கேன்..." நாக கணேஷ் ஓடி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNI... 20-8-2007 ... LIBRARY



"என் கை அம்பது ரூபாயை அப்படியே வெச்சிருக்கேனே..." என்று புலம்பினான் சிவப்பா.

"இந்த ரெண்டு சீன் கழிஞ்சா அப்புறம் பத்தாவது சீன்ல தான் நாம் மறுபடி வர்றோம். அதுக்குள்ள நீயும் மாத்திடலாம். இதை எல்லாமா சொல்லிக் குடுப்பாங்க?..." என்றான் நாக கணேஷ்.

நாக கணேஷுக்கும், சிவப்பாவுக்கும் திருப்தி தங்கள் நோக்கம் நிறைவேறியதில். சீனுக்குப் பிறகு சீன் வெற்றிகரமாக நடிக்கப்பட்டு நாடகம் வளர்வதில் வெங்குவுக்கு திருப்தி.

## பதினைந்து

**வெ**ங்கு தையல் மெஷினில் ஒரு ரவிக்கை தைப்பதில் இருந்தார். மூன்றாவது கடை பத்தர் வந்து "படிச்சிட்டுத் தரேன் டெய்லர்" என்று தினத்தந்தியை எடுத்துச் சென்றார். எதிர் டீக் கடைப் பையன் வந்து ஒரு கிளாஸ் டீ வைத்துவிட்டுச் சென்றான். வெங்காயம், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், சாம்பார் வெங்காயம்! என்று தள்ளு வண்டிக்காரன் கூவியபடி வண்டியைத் தள்ளிச் சென்றான். காலைப் பதினோரு மணி வெயில் பளீர் என்று அடித்தது.

வெங்குவின் மனம் சென்ற வாரம் அரங்கேற்றிய தெருப்பாடகன் நாடகத்தையே நினைத்துக் குதூகலித்தது. திருப்தியாக அமைந்துவிட்ட நாடகம் அது. நாக கணேஷ் கூட அதிகமாக வசனங்களை முழுங்கவில்லை. எல்லோருமே சிறப்பாக நடித்தார்கள். பல இடங்களில் ரசிகர்கள் கை தட்டி ரசித்தனர். முடிவுக்காட்சிக்கு முன்னதாக இரண்டு உயர் அதிகாரிகளை மேடையில் ஏற்றி, மாலை அணிவித்து, "நீண்ட காலத்திற்கு நெஞ்சை விட்டு அகலாத நாடகம். முழுநிலா நாடக மன்றத்தினர் பிரமிக்க வைத்துவிட்டனர்" என்று பேச வைத்தார் ஈஸ்வரமூர்த்தி.

நாடகம் முடிந்து இறுதியாக திரை தொங்க விட்டதும் மேடையின் பின்புறத்திற்குப் பாய்ந்து வந்த நண்பர்கள் கூட்டத்தை சமாளிக்க முடியவில்லை. "கொன்னுட்டீங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்குசார்! அபாரம், அற்புதம்! இந்த நாடகம் தான் உங்க மாஸ்டர் பீஸ்!.."

நாடக நடிகைகளுக்குக் கொடுக்க வேண்டிய சன்மானத்தை முதலில் கொடுத்து அவர்களை வேனில் ஏற்றி அனுப்பினார் வெங்கு. "வேளையோடு நீங்க தங்கி இருக்கிற லாட்ஜுக்குப் போய்ச் சேருங்க. காலையில் முதல் பஸ்ஸைப் பிடிச்சுப் பத்திரமா உங்க ஊருக்குப் போங்க. ரொம்ப அருமையா நடிச்சு நாடகத்தை வெற்றி ஆக்கிட்டீங்க. போய் வாங்க. நன்றி. மறுபடி சந்திப்போம்..." என்று சிரித்தபடி கும்பிட்டு வழி அனுப்பினார்.

அதே வேனில் தொற்றிக் கொண்டு சிவப்பாவும் நாக கணேஷும் போய்விட்டனர். "போய்த் தொலையட்டும், நாடகத்தை விட இவன்களுக்கு இதுதான் முக்கியம்" என்றார் வெங்கு.

அடுத்து இப்ராஹீம் தன் இசைக் குழுவுடன் ஓர் ஆட்டோவில் புறப்பட்டான். "போய் வாங்க பாய். இசையிலே ரொம்ப முன்னேறிட்டீங்க. பாடின பாட்டு ஒவ்வொண்ணும் தேன்-நாடக வெற்றிக்கு உங்க இனிமையான இசை முக்கிய காரணம். பாப்போம்..." என்று இப்ராஹீமின் தோளைத் தட்டினார் வெங்கு. இப்ராஹீம், பணத்திற்கு அவசரப் படுகிறவனே இல்லை. ஆறுமாதம் ஆனாலும் வாய் திறந்துக் கேட்க மாட்டான். வெங்குவாகப் பார்த்துக் கொடுக்கும் போது வாங்கிக் கொள்வான்.

தியாகராஜன் கட்டித் தழுவிக் கொண்டான். "பிறவி மேதைடா நீ! அசத்திட்டியே! உன் திறமைக்கு நீ கடலூரில் இருக்க வேண்டிய ஆளே இல்ல. உனக்குப் பிரகாசமான எதிர்காலம் இருக்கு!..."

தியாகராஜனிடம் ஒரு வழக்கம். அவன் காலையில் கொண்டு வந்து கட்டிய திரைகளை நாடகம் முடிந்ததும் அவனே அவிழ்த்து சுருட்டி வைத்து விடுவான். வெங்குவோடு ஆட்டோவில் புறப்பட்டு வந்து, வெங்குவின் வீட்டில் திரைச்சீலைகளை சேர்த்து விடுவான். உடனே தன் டூ வீலரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பி திருவகீந்திரபுரமும் சென்று விடுவான். இனி அடுத்த நாடகம் போடும்போது தான் சந்திப்பு.

திரையின் பின்புறம் முகத்தில் தேங்காய் எண்ணெய் தடவி நடிகர்கள் அரிதாரத்தை நீக்குவார்கள். இதில் பத்து நிமிடம் கழியும். அதுவரை விளக்குகளை அணைக்காமல் காத்திருந்த வாட்சுமேனுக்கு இருபது ரூபாய் கொடுப்பார்கள். நீண்ட மைதானத்தில் உள்ள துணிக்கடைகளில் விளக்குகளை அணைத்து மூடத் தொடங்குவார்கள். சில நடிகர்கள் சைகிள்களில். சிலர் நடந்து. வெங்குவும், அருணும், சந்திரனும், தியாகராஜனும் திரைச் சீலைகளுடன் ஆட்டோவில் ஏறி வீடு வரும்போது இரவு மணி இரண்டாகும்.

அடுத்த காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே முடியாது மணி ஒன்பது ஆனாலும். கண்ணெல்லாம் எரியும். உடம்பெல்லாம் அசதி. மூன்று நாட்களாகும் உடம்பு நேர் ஆக. நல்லா நாடகம் போட்டீங்க போங்க, பைசாப் பிரயோஜனம் இல்லாம காசுக்குப் பிடிச்ச கேடு!

உண்மையில் வெங்குவின் கையை விட்டு இருநூறு, அருணின் கையை விட்டு முன்னூறு ரூபாய். ஈஸ்வரமூர்த்தி கொடுத்த அய்நூறுக்கு மேல் செலவாகி இருக்கும். போகட்டும் விடுங்க. நமக்குக் காசு பணம் பெரிசு இல்ல, திருப்தியா நாடகம் போட்டதே போதும்.

நான்கு நாட்கள் சென்று மாயவரம் மாலதி, நெல்லிக் குப்பம் கலைமணியிடமிருந்து கார்டு வரும். அண்ணா, சவுக்கியமா ஊர் வந்து சேந்தோம். நடிக்க சான்ஸ் குடுத்ததுக்கு நன்றி. அந்த கார்டுகளை பத்திரமாக ஃபைல் பண்ணி வைப்பார் வெங்கு.

ஒரு வாரம் கழிந்த பின் கலர் ஃபோட்டோ ஆல்பம் வரும். இந்த ஃபோட்டோ மற்றும் ஆல்பச் செலவை அருணும், சந்திரனும் பகிர்ந்துக் கொள்வது வழக்கம். ஆல்பத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து மகிழ்வார்கள். கதாநாயகனும், இரண்டாவது கதாநாயகனும். வெங்கு விடமும் பயபக்தியோடு காட்டுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கு அந்த ஆல்பத்தில் நான்கு ஈஸ்வரமூர்த்தியினுடைய போட்டோ இருக்க வேண்டும் என்பார். ஆடியன்சில் முன் வரிசை நாற்காலிகளில் ஈஸ்வர மூர்த்தி தம்பதிகள் ஃபோட்டோ . அந்த ஆல்பத்தை எடுத்துச் சென்று ஈஸ்வர மூர்த்தியின் வீட்டில் காட்டி மகிழ்வார் வெங்கு. ஈஸ்வர மூர்த்தியின் தொடர் ஆதரவு வேணுமே?

ஆல்பம் புரட்ட நாக கணேஷுக்கும் ஆசைதான். ஒரு சமயம் தன் திருமதியிடம் காண்பிக்க ஓர் ஆல்பத்தை மறுநாளே திரும்பக் கொண்டு வருவதாகச் சொல்லி வாங்கிச் சென்றவன் முப்பது நாட்கள் இழுத்தடித்தான். அதிலிருந்து வீட்டுக்கு எல்லாம் ஆல்பம் கிடையாது. இப்படியே திண்ணையில் உக்காந்துப் பாருங்க அண்ணே! ஒரு பிளேட் பகோடாவும், காபியும் அருணுக்கு நஷ்டம்.

ஃபோட்டோவைப் பார்த்து ஏதேதோ நினைப்பான் அருண். அடா, அடா! காதல் காட்சிகளில் தான் எப்படி நெருங்கி நடிக்கிறாள்! இடுப்பில் கை போட்டால், இழுக்க வேண்டிய அவசியமே இல்லாமல், தானே வளைகிறாள். கன்னத்தோடு கன்னம் வைக்கிறாள். உடலோடு நன்கு உரசுகிறாள். கண்களில் ஆசை மின்னுகிறது. நிஜமாகவே என்னை விரும்புகிறாளோ? ஒருநாள் மஞ்சளூர் போய் அவள் வீட்டில் சந்திக்க வேண்டும். அவளுக்கு விருப்பம் என்றால் எனக்கும்தான். உன்னை மணக்க நான் தயார்...

சந்திரனும் இதேபோல மயக்கத்தில் கிடப்பதுண்டு. மேடையில் வேணுமானால் மாயவரம்காரி இந்த குண்டனைக் காதலிக்கலாம். உண்மையில் சுருட்டை முடிக்காரனான என் மீதுதான் அவளுக்குப் பிரியம். திரைக்குப் பின்புறம் என்னிடம் எப்படி சிரித்து சிரித்துப் பேசினாள்! ஒரு தடவை மஞ்சளூர் போய் வர வேண்டியது தான்.

## பதினாறு

**வீ**ட்டு வாசலில் சைக்கிளை நிறுத்தி, "நாகம், நாகம்!" என்று மணி அடித்தான் சிவப்பா. தெருவைப் பார்த்த ஜன்னலின் உட்புறம் ஆணியில் மாட்டிய சிறு கண்ணாடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் பார்த்துத் தலை சீவிய நாக கணேஷ் "வா, வா வாசக் கதவு திறந்துதான் இருக்குது..." என்றான்.

சிவப்பா உள்ளே நுழைந்து நாற்காலியில் அமர்ந்து தமிழ் தினசரியைக் கையில் எடுத்தான்.

'உக்கும், வந்துட்டான் துச்சாதனன்' என்று சமையல் அறையில் நாக கணேஷின் மனைவி சொன்னாள். தன் கணவனின் மோசமான நடவடிக்கைகளால் அவனுக்கு துரியோதனன் என்று பெயர் கொடுத்திருந்தாள். "சரி வா. சாப்பிட்டுக் கிளம்ப சரியா இருக்கும். பாரிஜாதம், ரெண்டு பேருக்கும் டிபன் கொண்டா!" என்றபடி அறையில் இருந்து வெளிப்பட்ட நாக கணேஷ், சொம்பு நீரை சிவப்பாவிடம் நீட்டினான். "முத்தத்திலேயே கை அலம்பிடு!"

"நீங்களும் அப்பா கூட பாண்டிச்சேரி போறீங்களா மாமா?" என்றபடி இரு பீங்கான் தட்டுகளில் இட்லி எடுத்து வந்தாள் நாகத்தின் மூத்த மகள்.

"பின்ன, நான் இல்லாமயா! நான்தான் உன் அப்பனுக்கு இந்த யோசனையைச் சொன்னேன்..."

சென்ற மாதம் ஓர் ஞாயிறு மாலையில் நாக கணேஷைத் தேடி வந்தான் சிவப்பா.

"வாப்பா சிவப்பா, போன வாரம் தெருப்பாடகன் நாடகத்துலப் பிச்சு உதறிட்டியே!"

"அவ்வளவுதான். இன்னும் ஒரு வருசத்துக்கு வேற நாடகம் கிடையாது. இதையே தான்பேசிக் கிடக்கணும். அடபோப்பா, வெங்கு ஒரு சோம்பேறி. வருசம் ஒரு நாடகம் போட்டுக்கிட்டு..."

"வாழ்க்கையில் முன்னேறணும்னா புதுப்புது யோசனைகள் தோணணும். உனக்கு ஏதாவது தோணுதா?..."

"ஊஹூம். ஒனக்கு?..."

"தோணுது. இதோ 14 மைல்ல இருக்குது பாண்டிச்சேரி இங்கே புதுசா அகில இந்திய வானொலி ஆரம்பிச்சு மூணு மாசம் ஆகுது. அதிலே நம் குரல்கள் ஒலிச்சா என்ன?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படி?..."

"நீயும், நானும் ரேடியோ நாடகங்கள்ள நடிக்கப் போறோம்" என்ற நாககணேஷ் புதுவை வானொலி நிலையத்திற்கு தங்கள் இருவர் கையெழுத்திலும் மனுக்கள் எழுதிப் போட்டான். ஒரு மாதத்தில் புதுவை வானொலி அவர்கள் இருவரையும் ஆடிஷன் டெஸ்டுக்கு கூப்பிட்டது.

"ஆமா, ஆடிஷன் டெஸ்டுன்னா?..."

"உன் குரல், ரேடியோல ஒலிபரப்பத் தகுந்தது தானாப் பாப்பாங்க..."

"ஹஹ! நம்மக் குரல் பொருந்தல்லேன்னா எவன் குரல் பொருந்தும்..."

சிவப்பாவின் சைகிளில் நாகம் டபிள்ஸ் ஏறினான். சைகிளை போஸ்ட் ஆபீசில் விட்டுப் பூட்டி பாண்டிக்கு பஸ் ஏறினார்கள்.

பஸ்சின் உட்புறம் "வாண்ணா!" என்று கோரசாக ஒரு வரவேற்புக் கேட்டது. ஜெய் அருணும் சந்திரனும்.

"எங்கே புறப்பட்டீங்க?..."

"நீங்க எங்கேப் புறப்பட்டீங்க, ஹஹ!"

பாண்டி பஸ் ஸ்டாண்டில் இறங்கியதும் அந்த இருவரும், இந்த இருவரை வெட்டிவிடவே நினைத்தனர். இவனுங்க எங்கேடா வந்து சேந்தானுங்க, சனியனுங்க.

"நீங்க போய்கினே இருங்க. நாங்க ஒரு பீடி அடிச்சிட்டு வந்திட்றோம்..."

"நாங்களும் சிங்கிள் டீ அடிச்சிட்டு..."

தனித்தனி டெம்போக்களில் ஏறி ரேடியோ ஸ்டேஷன் வந்தனர்...

ஆடிஷன் டெஸ்டுக்கு முதலில் உள்ளே அழைக்கப் பட்டவன் நாக கணேஷ். ஏற்கெனவே ஒலி பரப்பப்பட்ட ஒரு பழைய நாடகத்தின் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு பிரதி அவனிடம் தரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம், தளபதி மார்த்தாண்ட பூபதி பேசற வசனத்தை நடிச்சுக் காட்டுங்க?..."

"வேந்தர் வேந்தே! உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என்று காலம் காலமாக வாழ்ந்து வரும் உங்களுக்கு நாங்கள் பரம்பரை பரம்பரையாக மெய் காப்பாளர்களாக இருந்து வருகையில் சபை நடுவில் எங்களை நிறுத்தி கருங்காலிகள் என்றும் கைக்கூலிகள் என்றும் குற்றம் சாட்டுவது தெய்வத்திற்கே பொறுக்காது. உருவுங்கள் உங்கள் உடை வாளை! பாய்ச்சுங்கள் அதை ஆழ எங்கள் நெஞ்சில் ! மானம் காக்க, மார்கழி மாத நண்பகலில் மார்த்தாண்ட பூபதி மாய்ந்துப் போனான் என்று மாணிக்கத் தீவின் வரலாறு என்னை..."

அடுத்து சிவப்பா. இவனுக்கு வேறோரு நாடக ஸ்கிரிப்ட் கொடுக்கப்பட்டது.

"என்ன வார்த்தை சொல்லிவிட்டாய் மகளே! உனக்கு நான் துரோகம் செய்வேனா! என் சொத்து முழுவதும் உனக்கு எழுதிக் கொடுத்து நான் இமயமலைச் சாரலுக்குப் போயிடறேன். நீயும், மாப்பிள்ளையும் சந்தோஷமா வாழுங்க. உங்க கண்லயே இனிநான் தென்பட மாட்டேன். தென்படவே ... ஹு ஹு ஹு..." அழுகிறார்.

அருணும், சந்திரனும் உள்ளே சென்றனர்.

அதற்குள் அங்கிருந்த ஓர் அறிவிப்பாளரை - அவர் பெயர் காடாத்தூர் தம்பியாம் - அசத்த ஆரம்பித்துவிட்டான் நாக கணேஷ். காடாத்தூர் தம்பி - அவரின் உண்மைப் பெயர் திருமங்கை ஆழ்வார். பத்து ஆண்டுகள் முன்பு கடலூரில் ஓர் அலுவலக குமாஸ்தா. தஞ்சாவூர் மாற்றிச் சென்றார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரையில் திருச்சி வானொலி யில் பணியில் நுழைந்தார். அவ்வப்போது வானொலியில் நாடகங்கள், உரைச்சித்திரங்கள் என்று ஏதோ எழுதி சற்றுப் பிரபலம் ஆனவர். திருமணம் ஆகி மூன்று குழந்தைகளுக்கும் தகப்பன்.

நாக கணேஷின் கிள்ளலைப் புரிந்து கொண்டு சிவப்பா வெளியில் சென்று ஒருகிலோ ஸ்வீட் வாங்கி வந்தான். அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடா தம்பி கையில் வாங்கவில்லை. ஒரு முகவரியைக் குறித்துக் கொடுத்து “அங்கே குடுங்க” என்றார்.

“ரத்னஜா - உங்க சம்சாரம்களா?...”

“சம்சாரம் வேற எடத்துல இருக்காங்க. இவங்க, இவங்க.” காடா தம்பி வெட்கப்பட்டார் “ஓ புரியுதுங்க...”

அன்று மாலையே ஆடிஷன் டெஸ்டு முடிவு தெரிந்து விட்டது. அருணும் சந்திரனும் தேறவில்லை.

விக்கிரமாதித்தன்ங்ற என் நாடகத்துலே விக்கிர மாதித்தன் நாக கணேஷ். கவி காளிதாசன் சிவப்பா என்று கா. தம்பி சொல்லிக் கொண்டிருந்தார் அருணும், சந்திரனும் எரிச்சல்பட.

## பதினேழு

**பி**ற்பகல் மூன்று மணி. தன் பலகாரக் கடையில் அடுப்பில் வாணலி எண்ணெய் வைத்து பகோடா தயாரிப்பில் இருந்தான் அருண். மூன்று நாட்களுக்கு முன்பு பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிகள் மனதில் அலை அடித்தன. அருணுக்கும், சந்திரனுக்கும் கீச் சென்ற பெண்மைக் குரலாம். நாக கணேஷுக்கும், சிவப்பாவுக்கும் கம்பீரமான குரலாம். ரேடியோக்காரனின் கண்டு பிடிப்பு! அது எப்படியோ ஒழிகிறது. நாக கணேஷ் விக்கிரமாதித்த மகாராஜாவாம். சிவப்பா கவி காளிதாசனாம். இவன் தலையில் கிரீடமும், அவன் கையில் எழுத்தாணியும் கற்பனை செய்துப் பார்த்ததில் வாய் விட்டே சிரித்துவிட்டான் அருண். ஆனால் ரேடியோ நாடகத்தில் முகத்தை யார் பார்க்கப் போகிறார்கள்?

எண்ணெயில் மிதந்த பகோடாவைப் பார்த்தபடிசிரித்த முகமாக அருணாசலம் நிற்கையில் ஓர் ஒல்லி மனிதர் கையில் பிடித்த சணல் பையுடன் படி ஏறி வந்து “பிரணதார்த்தி அய்யர் இருக்காரோ” என்றார். உள் பக்கம் கை காட்டினான் அருண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே சென்ற ஒல்லி மனிதர் அரை மணி ஆகியும் வெளியில் வரவில்லை. அருணின் தம்பி வந்து "நீ உள்ளே போ. நான் பாத்துக்கறேன்..." என்று சட்டுவத்தை வாங்கினான்.

"வாப்பா, இப்படி ஜமக்காளத்தில் உக்காரு..." என்றார் பிரணதார்த்தி அன்புடன். அந்த ஒல்லி ஆசாமி ஒரு பெரிய தாம்பாளத்தில் ஒரு சீப்பு வாழைப்பழம், பூப் பொட்டலம், வெற்றிலைப்பாக்கு, மஞ்சள், குங்குமம் எல்லாம் வைத்திருந்தார்.

"அண்ணா, ஒரு நிமிஷம்" என்று பக்க அறையில் இருந்து தங்கை அழைத்தாள். அருண் அருகில் வந்ததும் பீரோவில் இருந்து ஒரு ஜரிகை வேட்டியை எடுத்துக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னாள். கூடவே ஒரு சட்டையையும். பூத்துவாலையால் எண்ணெய் வழிந்த முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டாள். இந்தா, தலையை வாறிக்கோ என்று கண்ணாடியும், சீப்பும் தந்தாள். "உம் இப்பத்தான் சபாஷ் மீனாவில் வர்ற சிவாஜி மாதிரி இருக்க. இப்ப போ" என்றாள்.

"இதெல்லாம் என்னப்பா?"

"சொல்றேன். எல்லாம் நல்ல சமாச்சாரம் தான். இவர் குஞ்சிதபாதம் அய்யர். மயிலாடுதுறை கொரநாட்டுல காபி கிளப் வெச்சிருக்கார். மாயூர நாதஸ்வாமி கோவில் சன்னதித் தெருவுல வீடு. இவர் மூத்தப் பெண் அன்னலட்சுமியை உனக்குப் பாத்திருக்கு. ஜாதகப் பொருத்தம் இருக்கு. வரதட்சணை, சீர் விஷயங்களும் பேசி முடிவாயிடுத்து. இவருக்கும் உன்னைப் பாத்ததுல திருப்தி. பெண்ணோட ஃபோட்டோ கொண்டு வந்திருக்கார் பார். எப்ப பொண்ணுப் பாக்கப் போகலாம். சொல்லு..." என்றார் பிரணதார்த்தி அய்யர் வாசனைப் புகையிலையை உள்ளங்கையில் வைத்து உருட்டியபடி.

அருண் எழுந்து சமையல் அறைக்குச் சென்றான்.

"அம்மா, நான் கல்யாணம் பண்ணச் சொல்லிக் கேட்டேனா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீப காலங்களில் அருண் தூக்கத்தில் பிதற்றுவது அதிகம் ஆகிவிட்டது. அதிலும் "மாயவரம் மாலதி, உன்னை என்னால மறக்க முடியலடி. . ." என்கிற வசனம் வேறு. தலையணையைக் கட்டி அணைக்கிறான். தலையணை பாவம். மொச், மொச் என்று அதற்கு ஏகப்பட்ட முத்தங்கள். கோவிலுக்குச் சென்றால் அங்குள்ள துவாரபாலகி சிலைகளின் அங்கங்களை மாலதி, மாலதி! என்று தடவுகிறானாம். பார்த்தவர்கள் வந்து சொன்னார்கள்.

"இல்லப்பா. காலாகாலத்துல பேரக்குழந்தைகளை கொஞ்சற ஆசை எங்களுக்கு. . ." என்றபடி அம்மா, பெண்ணின் முழு சைஸ் ஃபோட்டோவைக் காட்டினாள். பேரு மாலதி.

ஹா, மாலதியா! அப்பா வேறு பெயர் சொன்னாரே! மின்சாரம் பாய்ந்தது. அந்தப் பெண்ணின் கண்களில் சிரிப்பு. குண்டுக் கன்னங்கள். குள்ளம் இல்லை. வேண்டாம் என்று தள்ள முடியாத உருவ அமைப்பு.

"என்ன சொல்ற? வர்ற புதன் சுபமுகூர்த்த நாள். பெண் பாக்கப் போவமா?. . ."

அருணை திடீர் வெட்கம் ஆட்கொண்டது. வெங்குவின் நாடக வசனம் நினைவிற்கு வந்தது. உங்க இஷ்டம்மா.

"டேய், கடையைப் பாத்துக்கடா. . ." என்று தம்பிக்கு உத்தரவிட்டுப் படி இறங்கினான்.

அருணுக்கு வேறு போக்கிடம்? நேரே சந்திரனிடம் சென்றான். "வாடா, நல்ல ஓட்டல்ல ஸ்பெஷல் காபி சாப்பிட்டு வருவோம். . ."

பெண் பார்ப்பதற்கும், திருமணம் முடியும் வரையிலும் மாப்பிள்ளைத் தோழன் சந்திரன்தான். அருண் பணச் செலவைப் பொருட்படுத்தாமல் கடலூரில் இருந்து மயிலாடுதுறை சென்று வர முழுநிலா நாடகமன்ற நடிகர்கள், இசைக் கலைஞர்கள் எல்லோருக்குமாக இரண்டு பஸ்களை வாடகைக்கு அமர்த்தி விட்டான். திருமணம் முழுவதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநிலா நாடக நடிகர்கள் சிவாஜி நடித்த படங்களின் வசனங்களையே சொல்லி ஜோக் அடித்தனர். திருமணநாள் மாலையில் இப்ராஹீம் தன் குழுவினருடன் இசை விருந்து அளித்தான்.

அன்றிரவு தன் மனைவியிடம் அருண், "உனக்குப் பிடித்த சினிமா நடிகர் யார்?" என்றான்.

"எனக்கும் சரி, என் அண்ணா, தம்பிகளுக்கும் சரி பிடிச்ச நடிகர் எம்.ஜி.ஆர்தான்..."

"என்ன?!"

"ஆமா, எம்.ஜி.ஆர்., எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர்.."

"இனிமே உனக்குப் பிடிச்ச நடிகர் சிவாஜியாத்தான் இருக்கணும். இது என் அன்புக் கட்டளை."

"ச்சீய்! என்னால அப்படி மாத்திக்க முடியாது நீங்க எம்.ஜி. ஆருக்கு மாறிடுங்க..."

"அது என்னால இந்த ஜென்மத்துல முடியாது. நாங்க சிவாஜி படத்தை மட்டும் தான் பாப்போம்..."

"நாங்களும் எம்.ஜி.ஆர் படம் மட்டுமே பாப்போம். எங்களையும் யாரும் மாத்த முடியாது.."

தன் கீழ் உதட்டை அழுத்திக் கடித்தான் அருண். "முட்டாள் தனம் பண்ணீட்டேன். பெண் பாக்க வந்த போதே இவள் யாருடைய ரசிகை என்று கேட்காமல் போனோமே!"

சினிமாப் பற்றி பேசுவதில்லை என்கிற முடிவுக்கு இருவரும் வந்தனர். பொதுவாகப் பேசி, காதலில் கரைந்து அந்த இரவைக் கழித்தனர்.

அடுத்த காலையில், "ஏய், நீ எழுதிய வாசகர் கடிதம் இந்தப் பத்திரிகையில் வந்திருக்குடி. என் கடிதம் அந்த பத்திரிகையில்" என்று இரு சிநேகிதிகள் மணப்பெண்ணைச் சூழ்ந்து கொண்டனர்.

எல்லாப் பத்திரிகைகளிலும் கடிதங்களும், கேள்விகளும் எழுதுவது மயில் மாலதியின் பழக்கமாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினெட்டு

வெங்கு ட்ரங்க் பெட்டியில் இருந்து ஒவ்வொரு பௌண்டு நோட்டாக எடுத்து வெளியில் வைத்தார். பத்து ஆண்டுகளில் பத்து நாடகங்கள். ஒற்றை ரோஜா, சிரிக்கும் சிங்காரி, பளிங்கு மாளிகை, மயக்கும் ஓவியம், வீணா கான விநோதினி, வண்டுக்குள் மாங்கனி, சூரியனுக்குப் பின் பக்கம், பைத்தியக்கார உலகம், ஹலோ மிஸ்டர் மேதாவி, தெருப்பாடகன். பதினொன்றாவது நாடகம் இட்லிக் கடை இந்திரகுமாரி பாதி வளர்ந்திருந்தது. இந்த நாடகம் முழுவதும் எழுதி முடித்து மேடை ஏறினால் வம்புதான். அதே தெருக்கோடியில் இட்லி வியாபாரம் செய்யும் காவேரியை அப்படியே தன் நாடகத்தில் கொண்டு வந்திருந்தார் வெங்கு. காவேரிக்கு அய்ந்து கணவர்கள். அவர்கள் மூலம் ஒவ்வொரு குழந்தையும் உண்டு. ஒவ்வொரு கணவனின் குணமும் ஒவ்வொரு விதம். வெங்குவின் நாடகத்தில் இந்திரகுமாரிக்கு ஏழு கணவர்கள்.

இந்த நாடகங்களைப் படித்துப் பார்த்து, அல்லது மேடை ஏற்றும் போதாவது பார்த்துப் பாராட்டி ஆந்தூரிகா ஒரு வார்த்தை சொல்வாளா? மாட்டாள். ஒரு காலத்தில் அவள் அந்த நாடகங்களைத் தன் அழகான கையெழுத்தில் பிரதிகள் எடுத்துக் கொடுத்தவள்தான். நாடக கதாபாத்திரங்களின் நிறை குறைகள் பற்றி அவரிடம் நிறையவே பேசி இருக்கிறாள். திருமணத்திற்குப் பிறகு அவள் அதை எல்லாம் திரும்பியே பார்க்கவில்லை.

அவளுக்குப் பிடித்தப் பொழுது போக்கு இரண்டு நாளைக்கு ஒருமுறை தெருப் பெண்களோடு சகட்டு மேனிக்கு எந்த தமிழ் சினிமாவுக்கும் தரை டிக்கட்டில் போய் வருவது தான். வெங்குவிற்கு அது குறித்து ஏதும் வெறுப்பு இல்லை. எப்படியோ அவள் சந்தோஷமாக இருந்தால் சரி.

"ஷேக்ஸ்பியர் சார்!. . ." என்று அழைத்தபடி வந்தாள் சாமந்தி. மூன்றாவது வீட்டுக் குட்டி, பெங்களூரில் பியூசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைப் படித்தவளாம். கடலூரில் இருக்கும் அக்காவுக்கு உடம்பு சரி இல்லை என்று அக்கா புருஷனுக்கு சமைத்துப் போட வந்திருக்கிறாள். அக்கா புருஷன் வேலைக்குப் போய்விட்டால் இவளுக்குப் பொழுதுப் போவதில்லை. படிக்க ஏதாவது புஸ்தகம் கிடைக்குமா சார்?

நான் எழுதின நாடகங்கள்தான் இருக்கு பரவா யில்லையா?

அய்யோ, குடுங்க சார், நாடகங்கள்னா எனக்கு உசிரு.

படிச்சுப்பாரு, சுமாரா இருக்கும்.

கொன்னுட்டீங்க சார், நீங்க ஜீனியஸ்!

ஏன்சார், இந்த நாடகக் காட்சியை இப்படி மாற்றி எழுதி இருக்கலாமோ? இந்தப் பாத்திரத்துக்கு என்ன சார் அப்படி ஒரு முடிவைக் குடுத்துட்டீங்க? திரும்பத் திரும்ப குஷ்டம், கேன்சர்னே எழுதிக்கிட்டிருக்காம எய்ட்ஸ், சிறுநீரக மாற்று சிகிச்சை, க்ளோனிங் முறையில் மற்றொரு உயிர் உற்பத்தின்னு நவீன உலகத்துக்கு உங்க நாடகத்தைக் கொண்டு வாங்க சார்...

ஏது சாமந்தி, நீ கூட நாடக ஆசிரியை ஆகிவிடலாம் போலிருக்கே?

எனக்கு அவ்வளவு மூளை இல்லை சார். யோசனைகள் சொல்லத் தெரியும்...

சாமந்தி, வெங்குவின் எல்லா நாடகங்களையும் படித்துவிட்டாள். இட்லிக் கடை இந்திரகுமாரி படுசுவையாக இருக்கிறது, சீக்கிரம் எழுதி முடிங்க என்றாள். நாடக வசனங்களைப் பாத்திரவாரியாக நகல் எடுத்துத் தரவும் சம்மதித்தாள்.

"அய், இங்கேதான் கடைப் போட்டிருக்கீங்களா! நல்ல அமைதியான தெரு சார். உங்க தையல் மெஷின் சக்கரம் ஓடுதோ, இல்லியோ, உங்க மனசுல கற்பனைத் தேர்ச் சக்கரம் அற்புதமா ஓடும்..." என்று வெங்குவின் தையல் கடைக்கே வந்துவிட்டாள் சாமந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவில் போன இலந்தைப் பழக் கூடைக்காரியைக் கூப்பிட்டு சாமந்திக்கு ஓர் ஆழாக்குப் பழம் கொடுக்கச் சொன்னார் வெங்கு. அப்புறம், சொல்லுங்க.

"எல்லா நாடகத்தையும் விட தெருப்பாடகன்ல நல்ல வளர்ச்சித் தெரியுதுங்க. அடேயப்பா, வசனம் என்ன ஆழம், அழுத்தம்! வாழ்க்கைத் தத்துவங்கள் என்ன?"

"சும்மா இரும்மா, என்னை ஒரே தூக்கா தூக்காத. ஓர் அளவுதான் புகழலாம்."

"அய்யோ ஏங்க, தன்னடக்கம் வேண்டியதுதான். அதுக்காக இப்படியா?. . ."

அடிக்கடி கடைக்கு வந்தாள் சாமந்தி. மாலைகளில் ஆற்காடு உட்லண்ட்ஸில் இட்லி சாம்பார் சாப்பிட்டபடியும் வெங்குவும், சாமந்தியும் நாடக விவாதம் நடத்தினர்.

அருணின் கடையில் பகோடா, டீயுடன் நாடக விவாதம் தொடர்ந்தது. அருணும், சந்திரனும் கூட ஆர்வத்துடன் பேச்சுக்களில் கலந்துக் கொண்டனர். ஆனால் வெங்குவின் தலைமறைவில் "வாத்தியாருக்கு ஏன் புத்தி இப்படிப் போச்சு? பாவம் தூரிகா" என்றனர்.

சாமந்தியோடு திருவகீந்திரபுரம் மலைமீதும் ஏறினார் வெங்கு. "இங்கிருந்துப் பார்த்தால் கெடில நதி எவ்வளவு அழகு! மலை மீது ஹயக்ரீவர் கோவில் கொண்டுள்ளார். புனர்பூச நட்சத்திரம் வரும் அன்று மல்லிகை மலர் மாலையை ஹயக்ரீவருக்குச் சாத்தினால் நம் வீட்டுக் குழந்தைகளுக்குப் படிப்பு நன்றாக வரும். பௌர்ணமி அன்று ஹயக்ரீவருக்குத் திருமஞ்சனம் செய்தால் நம் விருப்பங்கள் நிறைவேறும்."

"அப்படின்னா அடுத்த பௌர்ணமிக்கு நான் அபிஷேகம் பண்றேன், நீங்க பிரமாதமா முன்னுக்கு வரணும்னு. . ."

இவர்களை ஒன்றாகப் பார்த்ததும் ஓவியன் தியாகராஜனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. "வேணாம் அண்ணா, அண்ணிக்குத் துரோகம் பண்ணாத . . ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு திரும்பினால் தூரிகா படு எரிச்சலில் இருந்தாள். "நாடக நோட்டை எல்லாம் கிழிச்சுப் போட்ருவேன், அந்தத் தேவடியா இனி உங்களைப் பாக்க இங்கே வரக்கூடாது!"

"வீண் சந்தேகம் தூரி, எங்க மனசுல களங்கம் கிடையாது."

"ஆஹ்ஹா. பச்சைப் பாப்பா..."

அடுத்த காலையில் சாமந்தியின் குரல் கேட்டபோது "என்னடீ?" என்று எரிச்சலுடன் வெளிப்பட்டாள் தூரிகா.

சூட்கேசுடன் நின்றாள் சாமந்தி. விம்மி விம்மி அழுதாள். "ஊருக்குப் போறேங்கா. இனி திரும்பி வரமாட்டேன்."

தங்கை, தன் கணவரிடம் இளித்துப் பேசுவது கண்டு எரிச்சலில் இருந்தாள் அக்கா. அவனும் மைத்துனியிடம் வழிந்து கொண்டிருந்தான். முதலுக்கே மோசம் ஆகிவிடுமோ என்று பயந்தாள் அக்கா. முன் இரவு மாராப்பு விலகி சாமந்தி தூங்குகையில் ஆர்வத்துடன் பார்த்துநின்றான் அக்கா புருஷன். அடக்கம் இல்லாமல் அதென்ன தூக்கம் ஒரு பொம்பளைக்கு? அப்போதே, துடைப்பம் எடுத்து அடி, அடி என்று அடித்துவிட்டாள் அக்கா.

"ஷேக்ஸ்பியர் கிட்ட சொல்லிடு அக்கா.." கண் கலங்கி நகர்ந்தாள் சாமந்தி.

## பத்தொன்பது

**கொ**த்தமல்லி கண்களைத் திறந்தான். எங்கே படுத்திருக்கிறோம்? அனுமார் கோவில் தென்னந் தோப்பில் என்பது தெரிந்தது. அடடா, அப்படியானால் இரவு முழுவதும் வீட்டுக்குப் போகவில்லை என்பது புரிகிறது. மனைவி மருதாணி கவலைப்படப் போகிறாள். இழவு கஞ்சாப் பழக்கம் அவனை இப்படி ஆட்டி வைக்கிறது. முன் இரவு ஏதோ நாடகத்தில் சிரிப்பு நடிகன் வேடம் அவனுக்கு. நாடகம் முடிந்ததும் அய்ம்பது ரூபாய் சன்மானத்தைப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நடந்தே வீடு நோக்கிப் புறப்பட்டவன் தான். இதோ தென்னை மரங்கள் இடையில் படுத்துக் கிடக்கிறான்.

சட்டென்று எழுந்து நின்று கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தான். லுங்கியை இடுப்பில் இறுக்கியபடி பஸ் ஓடும் சாலைக்கு வந்தான். ஒரு டீக் கடையில் சிங்கிள் டீ. அப்பாடா, கொஞ்சம் உடம்பில் தெம்பு வந்தது. மனைவிக்கு இரண்டு பன் வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். கெடில ஆற்று நீரில் இறங்கி நடந்தால் குறுக்கு வழியில் பத்து நிமிட நடை மிச்சம்.

சே, இந்த கஞ்சாப் பழக்கத்தை முதலில் விட்டு ஒழிக்க வேண்டும். இரண்டு ஆண்டுகள் முன்பு பண்ருட்டியில் ஒரு மேடை நாடகம் பார்த்தான். கொத்தமல்லி. அதில் நடித்த சிரிப்பு நடிகன் ஒருவனின் நடிப்பு அவனைப் பிரமிக்க வைத்தது. நாடகம் முடிந்த பிறகும் நாடகக் குழுவையே சுற்றி வந்தான் கொத்தமல்லி. "அண்ணே, எப்படி இப்படி அசத்தறீங்க?..."

அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்ல தம்பி... என்று புகையிலை போல எதையோ கிள்ளி வாயில் போட்டுக் கொண்டான் நடிகன். மேடையில அந்தப் பாத்திரமாகவே மாறிடணும். அந்த நேரம் நம்ப மனசு நம்ம வசத்திலேயே இருக்கலாகாது.

"அது என்ன அண்ணே, அப்பப்ப எதையோ வாயிலப் போட்டு, கன்னத்துல ஒதுக்குறீங்க?..."

"இதைக் கேக்காத கண்ணு, தொழில் ரகசியம்..."

"சும்மா சொல்லு தலைவா. உன் காலைப் புடிச்சுப் பணிவாக் கேக்கறேன். நம்ம ஒரே தொழில்காரங்க. சொன்னா புண்ணியமாப் போகும். உன்னக் காலத்துக்கும் தெய்வமா மதிப்பேன். அய்ய, சொல்லுனா, சொல்லமாட்டியா?..."

"சொல்றதா? இந்தா, யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். குருநாதர் வாழ்கன்னு என் பேரைச் சொல்லி இதைக் கொஞ்சம் வாய்லப் போட்டுப் பாரு..." என்று தன் ஜிப்பாப் பையில் கைவிட்டு சிறிது எடுத்துத் தந்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் பேர் என்ன அண்ணே? அரிச்சந்திரனா? அரிகுருநாதன் வாழ்க!..."

"இது பேர் என்னன்னு நீ கேக்கலியே? இதுதான் கஞ்சா. வாங்கி, யாருக்கும் தெரியாம மறைச்சி வெச்சுக்கோ. அப்பப்ப யூஸ் பண்ணு, உனக்கு சொர்க்கமே தெரியும் போ..."

கஞ்சாவில் ஊறிய உமிழ்நீர் சற்று தொண்டைக் குழியில் இறங்கியதுமே, "ஆமாண்ணே, உலகமே தட்டாமாலை சுத்துது, இந்த ரோடு, தெரு விளக்கு, மனுஷங்க எல்லாமே பெரிசு பெரிசாத் தெரியுது. மனசுக்குள்ள ஒரு இன்பப் பரவசம்" என்றான் கொத்தமல்லி. "ஆஹா, ஆஹா, எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவான்னு கூத்தாடத் தோணுது..."

"இதே தான், இதே தான். சித்தர்களும், ஞானிகளும், மகான்களும், மகாகவிகளும் இந்த மருந்தை வாயிலே அடக்கிக்கிட்டு ஆனந்த மனோபாவத்திலே இருப்பாங்க. இங்கு யாரோடு எனக்கு என்னப் பேச்சு? பேசாப் பொருளை நான் பேச விழைந்தேன். காணா இன்பம் கனிந்தது. போ ராஜா, காலமெல்லாம் சந்தோஷமா இரு. இனி உனக்கு காசு, பணம், சோறு, மனைவி எதுவும் பெரிசு இல்ல. பிறவிப் பயனை அடைஞ்சுட்ட..."

ஏதோ மயக்கத்தில் பஸ் ஏறி கடலூர் வந்தான் கொத்தமல்லி "ஏ எருமெ, ஏன் என் காலை மிதிக்கற?" என்று எவனோ திட்டியதற்குப் புன்னகைத்தான்.

வீடு திரும்பியபோது வீட்டு சொந்தக்காரர் பகுதியில் பெரும் வாய்ச்சண்டை. எப்போதும் பணம் கொண்டா, நகை நட்டைக் கொண்டா என்று பிடுங்கி எடுக்கும் மாப்பிள்ளை அவர்களுக்கு. அப்போது அந்த மாப்பிள்ளை வந்திருந்தான். அதுதான் சண்டையும், கூச்சலும். சண்டை முற்றி மாப்பிள்ளை, மனைவியின் கன்னத்தில் ஓர் அறை விட்டான். இந்தக் கட்டத்தில் அங்கே நுழைந்தான் கொத்தமல்லி.

"மாப்பிள்ளை சார், இந்த உலகில் நாம் கொண்டு வந்தது எதுவுமில்லை. நாம் உயிர் விட்டால் எதையும் எடுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப் போவதுமில்லை. இடைப்பட்ட காலத்தில் பெண்ணைப் பெற்றெடுத்தவர்களை வறுத்தி எடுப்பது எந்த விதத்தில் நியாயம்?" என்று அரைமணி நேரம் ஆணித் தரமாகப் பேசினான் கொத்தமல்லி. மாப்பிள்ளை கப்சிப். மனைவியோடு புறப்பட்டு விட்டார்.

அடுத்து அந்தத் திறமை மேடை நாடகங்களில் பளிச்சிட்டது. அசந்து போன நாககணேஷ், ரகசியம் என்னவோ?. . . என்று தாண்டித் துருவினான். கஞ்சா என்று அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தான். "அடப்பாவி, இந்தப் பழக்கம் எதில் கொண்டு போய்விடும் தெரியுமாடா? ஒருநாள் உன் கைகால்கள் உபயோகப்படாமல் விழுந்துடும். பாரிசவாயு வந்துடும்டா பாவி! அதுக்கு எங்க கூட தண்ணி அடி, பரவாயில்ல. ."

"தண்ணிக்கெல்லாம் செலவழிக்க என்கிட்ட காசு கிடையாதுப்பா. என் வருமானத்துக்கு எனக்கு இதுதான் கட்டுப்படி ஆகும். . ." என்று தொடர்ந்து கஞ்சாவின் அடிமையாக இருந்தான் கொத்தமல்லி. பாரிசவாயு, வருகிறபோது பாத்துக்கலாம். . . அப்படி எத்தனைப் பேர் பாரிச வாயுல விழுந்துட்டாங்களாம்?

மருதாணியிடம் சரியாகப் பேசுவதும் இல்லை கொத்தமல்லி. உம்? அம்? அம்! என்றான்.

ஒரு சமயம் இருட்டான சந்தில் நின்று கஞ்சாவை சிறிது பிய்த்து வாயில் போட்டுக் கொண்டபோது அவன் பின் கழுத்தில் ஓர் அறை விழுந்தது. "கஞ்சா வெச்சிருக்கிறது சட்டப்படிக் குற்றம்னு உனக்குத் தெரியுமா, இல்லையாடா? வா, ஸ்டேஷனுக்கு" என்று அவன் பின் கழுத்துக் காலரைப் பிடித்தான் ஒரு போலீஸ்காரன்.

ஸ்டேஷனில் அவன் முகவாயை லட்டியால் உயர்த்திய இன்ஸ்பெக்டர், "உன் அட்ரஸ் என்னடா?" என்றான்.

அந்த நேரம் புத்திசாலித்தனம் கை கொடுக்க ஏதோ பொய் முகவரியை உளறினான் கொத்தமல்லி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப எவ்வளவு கஞ்சா இருக்கு?. . ." இருந்த ஏதோ கொஞ்சம் கஞ்சாவைப் பிடுங்கிக் கொண்டான். "இது இல்லாம சரிப்படாது. நீ தான் தினமும் ஸ்டேஷனுக்கு கஞ்சா கொணாந்து தரணும். செய்வியா? நீ வரல்ல, போலீஸ் ஜீப் உன் வீட்டுக்கு வரும் ஜாக்ரதை!" என்றான் ஒரு போலீஸ்காரன். "இப்ப ஓடு!"

"கடவுளே!" பெருமூச்சுடன் வெளிப்பட்டான் சிரிப்பு நடிகன் கொத்தமல்லி.

# இருபது

"பாய், ஏ பாய்! ஒரு நிமிஷம் இங்கே வந்துட்டுப் போ!." என்றார் அய்யங்கார், நடையில் நாற்காலி மேசைப் போட்டு ஆபீஸ் நடத்திய பிரபல கிரிமினல் வக்கீல்.

வாசல் குறட்டில் பாயும், குட்டை மேசையும் போட்டுக் கொண்டு சப்பணமிட்டு அமர்ந்து வெற்றிலையில் சுண்ணாம்புத் தடவி வாயில் திணித்துக் கொண்ட வக்கீல் குமாஸ்தா இப்ராஹீம் "ஏன், வந்தேன்" என்றான். காகிதப் பொட்டலம் பிரித்து புகையிலையை அண்ணாந்து வாயில் போட்டுக் கொண்டு "தோ, வந்துட்டேன். .." என்றான்.

கேஸ் கட்டை எடுத்து வலது கையில் இருந்த ஒற்றைக்கட்டை விரலால் காகிதங்களை அழுத்திக் கொண்டு இடது கையால் பேப்பர்களைப் புரட்டினான்.

"அடடா, என்ன பாயி, வலது கைல உனக்கு கட்டை விரல் மட்டும் இருக்கு? மீதி நான்கு விரல்களும் பாதி உள்ளங்கையும் காணாமப் போயிருக்கே, எப்படி?..." என்றான் எதிரே அமர்ந்திருந்த ஒரு வழுக்கைத் தலையன்.

"அட சும்மா இருய்யா, (அய்யங்கார், அய்யர், ராவ்ஜி எல்லோருமே இவர்களுக்கு அய்யர்.) அய்யரு ஒரு கேஸ் கட்டுக் கேக்கறாரு. அதைத் தேடக்குள்ள தான் கை போன கதை கால் போன கதை எல்லாம் கேப்ப. . ." என்றபடி இப்ராஹீம் எட்டி தெரு நடைபாதையில் எச்சில் துப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது ஒனக்குத் தெரியாதா? தெருக்கோடி வீட்டுப் பெண்ணை பாய் சைட் அடிச்சாரு. தினமும் அந்தப் பொண்ணு அதோட குழந்தைக்கு டாட்டா சொல்றதை இவரு தனக்குத்தான் சிக்னல்னு நினைச்சி இவரும் தன் வீட்டில் இருந்தபடி கை ஆட்டுவாரு. அவளையே பாத்துக்கிட்டு அவ செய்யறதை எல்லாம் காப்பி அடிச்சாரு. அவ கதவை சாத்தினா. இவரும் டாட்டா காட்டின கையை மடக்காமலே இவர் வீட்டுக் கதவை அடிச்சு சாத்தினாரு. அவ்வளவுதான், கை துண்டாயிடுச்சு. . ." என்றான் ஒரு பொக்கை வாய் கிழவன்.

"சத்தம் போடாத சைத்தானே, உள்ள அய்யரு இருக்காரு. காதுல விழுந்து வெக்கப் போவுது" என்றான் இப்ராஹீம். "இவன் சொல்ற மாதிரி எல்லாம் எனக்கு கைப் போகல. பர்மால இருக்கக்குள்ள, பிரஸ்ல வேலைப் பாத்தபோது ஏதோ நினைப்புல கையை கட்டிங் மெஷின்லக் குடுத்துட்டேன். . தோ வந்துட்டேன், அந்த அஃபிடவிட் கெடைச்சிடுச்சி. . ." என்று குரல் கொடுத்தான் இப்ராஹீம்.

"அதில்ல பாய், இன்னிக்கு ஹியரிங் இருக்கற கேசுக்கு எல்லாம் அந்தந்த கட்சிக்காரனை வரச் சொல்லி கார்டு எழுதிப்போட்டியா? சரி. நாளைக்கு நான் ஹைகோர்ட்லப் பேச வேண்டிய கேஸ் கட்டை எடுத்து என் டேபிள்ள வை. . ." என் றார் அய்யங்கார்.

கேஸ்கட்டை அய்யங்காரிடம் கொடுத்து தன் இடத்திற்குத் திரும்பினான் இப்ராஹீம்.

"பாய சாதாரணமா நினைக்காத வளவனூராரே, அந்த ஒரு கட்டை விரல்லயே அவரு தபேலா வாசிப்பார் பாரு, ரொம்ப அற்புதம். . ." என்றான் எதிரே மற்றொரு பாயில் அமர்ந்திருந்த இன்னொரு வக்கீல் குமாஸ்தா பாண்டியன், சிர்சிர் என்று நாசியில் பொடி ஏற்றி.

"கத்ரீக்கா, வெண்டேகா, பொள்ளங்கா!. . . " என்று கூவியபடி ஒரு கூடைக்காரி தெருவில் சென்றாள். அவளையே ஆசையுடன் தொடர்ந்தன இப்ராஹீமின் ஆசைக் கண்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை மட்டும் அல்ல, தெருவில் எவள் சென்றாலும் வயது, உருவம், நிறம், ஜாதி எதையும் பொருட்படுத்தாமல் கண்களால் கற்பழிப்பது தான் இப்ராஹீமின் வழக்கம்.

சென்ற மாதம் தெருப்பாடகன் நாடகம் மேடை ஏறியபோது தான் அவனுக்கு அற்புத அனுபவம் கிட்டியது. அதை அவ்வப்போது மனதில் அசை போடப் போட சந்தோஷமாக இருந்தது.

நாடகத்தில் பாட பின்னணிப் பாடகர்கள் நிறையப் பேர் கிடைப்பார்கள். பாடகிகள் கிடைப்பது தான் கடினம். குடும்பப் பெண்கள் மிகவும் தயக்கத்துடன் ஒப்புக் கொள்வார்கள் - அதிலும் ஒரு பாட்டு, இரண்டுப் பாட்டு. நாடகங்களில் பாடுவது எல்லாம் கௌரவமான குடும்பப் பெண்கள் செய்யும் வேலை இல்லை என்கிற கருத்து பொதுவாக எல்லோருக்கும் இருக்கிறது. நாடகங்கள் இரவு பத்து மணிக்குத் துவங்கி இரவு இரண்டு மணி ஆகிவிடும் முடிய. அவ்வளவு நேரம் வெளியில் தங்க எங்க வீட்ல அனுமதிக்கமாட்டாங்க. எங்க அப்பா திட்டுவாரு. . .

அப்பா அல்லது அண்ணா துணையுடன் பாட வரும் குடும்பப் பெண்கள் நாடகம் ஆரம்பித்த ஒரு மணி நேரத்தில் வீடு திரும்ப வேண்டும் என்று நிபந்தனை விதிப்பார்கள். அதனால், முழுநிலா நாடகக் கதாநாயகிகள் முதல் அய்ந்தாறு காட்சிகளுக்குள் தாங்கள் பாட வேண்டிய பாடல்களைப் பாடி முடித்துவிடவேண்டும்.

நாற்பத்தி அய்ந்து நாட்களுக்கு முன்பு இப்ராஹீமின் அண்ணிப் பிரசவித்தாள். வெளியூரிலிருந்து அவளைப் பார்க்க வந்த அண்ணியின் உறவினர்கள், அண்ணிக்கு உதவியாக இருக்கட்டும் என்று தாங்கள் அழைத்து வந்திருந்த வேலைக்காரப் பெண்ணை விட்டுவிட்டுப் போய்விட்டனர். அந்த வேலைக்காரி ஏதோ சுமாராக சமைப்பாள். கடைக்கு அனுப்பினால் போய் வருவாள்.

இப்ராஹீம் இரண்டு குடிசைகளில் தனியே இருந்தான். ஒன்று அவன் குடியிருப்புக் குடிசை. மற்றொன்று இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகைக் குடிசை. சாப்பாடு, டீ சகலமும் ஓட்டலில் தான். அடுத்தத் தெருவில் இருக்கும் அண்ணனையும் அண்ணியையும் பார்க்க இபுராஹீம் இரண்டு நாளைக்கு ஒரு முறைபோவான்.

அப்படி ஒரு விஜயத்தின் போது இப்ராஹீம் விடை பெறுகையில் இந்த வேலைக்காரி, "ஏனுங்க, பாட்டுப் பாடுவீங்களாமே? நானும் உங்க கூட வரவா?. . ." என்றாள் பாவாடை நாடாவைத் திருகி நின்று. ஒல்லியாக, அட்டைக்கரியாக, பாச்சைக் குஞ்சுப் போல இருந்தாள். முகத்தில் எண்ணெய் வழிந்தது. "வாயேன்" என்றவன் சைகிளில் ஏறித் தன் குடிசைக்கு வந்துவிட்டான்.

அப்போது அண்ணியின் அக்கா, பரங்கிப் பேட்டையில் இருந்து வந்திருந்தாள். ஒரு வாரத்திற்கு அக்காவின் சமையல் நிர்வாகம். வேலைக்காரப் பெண் மீது அலட்சியம். அக்கா, நா கொஞ்சம் வெளிய. . . எங்கனா ஒழிஞ்சா சரி தான்.

இரண்டு மூன்றுப் பாட்டுகள் பாடி முடிந்த பிறகே அவள் தலையைக் காட்டினாள். மிருதங்கம், தபேலா மற்றும் பல இசைக்கருவிகள் என்று இசை ஒத்திகையில் அவர்கள் 'தூள்' கிளப்புவதில் பிரமித்தாள்.

பாட்டுப் புத்தக பௌண்டுப் புத்தகம் அவள் முன்பும் வைக்கப்பட்டது. "சும்மா ஒரு பாட்டு. தைர்யமாப்பாடு. தெரிஞ்ச வரைக்கும் பாடு. ஒண்ணும் பயப்படாத. நாங்கதான் இருக்கோம். . ."

வெட்கி, பயத்துடன், நடுங்கும் குரலில் அவள் பாடினாள் : உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன். . .

பேஷ், பேஷ் ஜானகியின் இனிய அழுகையை அவள் அப்படியே தன் குரலில் கொண்டு வந்தாள் சபை ஆர்வத்துடன் கேட்டது. குமுக்கு, குமுக்கு என்று தபேலாவும் அமர்க்களப்படுத்தியது. ஆர்மோனியமும் ஆர்வத்துடன் இழைந்தது. இரவு எட்டாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சைகிளிலேயே அவளை டபிள்ஸ் ஏற்றி திருப்பாதிரிப்புலியூரில் ஒரு நல்ல அசைவ ஓட்டலில் அவளுக்கு சாப்பாடு வழங்கினான் இப்ராஹீம். மறுபடி குடிசைக்கு அழைத்து வந்தான். வயிறார சாப்பிட்ட திருப்தி அவளுக்கு. பாயில் தன் அருகில் படுக்க அவன் அழைத்த போது அவள் மறுக்கவில்லை. கட்டின மனைவிப் போல அவள் திருப்தியாக ஒத்துழைத்தாள். அந்த அனுபவம் நீடிக்கும் என்று அவன் நினைத்தான். ஆனால் இந்தச் செய்தி அண்ணியை எவ்வாறோ எட்டிவிட்டது. மூன்றாவது நாள் அவளின் சொந்த ஊருக்கு டிக்கட் எடுத்துத் தந்து அவளை அனுப்பிவிட்டனர்.

## இருபத்திஒன்று

'கிணிங், கிணிங்' என்று பூஜை மணியை ஆட்டினான் நாக கணேஷ். பூஜை அறையில் இடுப்பில் ஈரத்துண்டுடன் நின்றான். "பத்ராவதி, அன்னம் கொண்டா, நைவேத்யம் பண்ணுவோம்" என்றான்.

"உக்கும். இதுல ஒண்ணும் கொறச்சல் இல்ல" என்று முனகினாள் நாக கணேஷின் மனைவி சமையலறையில். "அடி பத்ரா, இந்த சோத்தைக் கொண்டு உங்கப்பா கிட்டகுடு. இல்லேன்னா முனிவருக்குக் கோபம் வந்துடப் போறது!..."

முண்டா பனியனும், கைலியும் உடுத்தி, நாற்காலியில் அமர்ந்து ந்யூஸ் பேப்பரைப் பிரித்தான் நாககணேஷ். "என்னம்மா, ஹோம் ஒர்க்கா? சரிசரி..." என்றான் பக்கத்தில் தரையில் அமர்ந்து ஏதோ எழுதிய கடைக்குட்டியை.

"அப்பா, மறக்காம என் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்ல கையெழுத்துப் போட்டுடு..." என்று பேனாவை எடுத்துத் தந்தாள் பத்ரா. "அய்யய்ய, என்னப்பா இது, கை எல்லாம் சொறி? ஏதாவது ஆயின்ட்மென்ட் போட்டுக்கக் கூடாது?"

"கொஞ்சமாவா அலையறான்? இதெல்லாம் என்ன மருந்துப் போட்டாலும் தீராது" என்று சொல்ல நினைத்தாள் திருமதி நாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் அப்பாவின் மீது தான் அவளுக்குக் கோபம், கோபமாக வரும். இவனை விட்டால் அவளுக்கு வேறு மாப்பிள்ளையே கிடைக்கமாட்டான் என்கிற நினைப்பில் இவனை கெஞ்சிக் கெஞ்சி...

திருமணத்திற்கு முன்பே அவளுக்கு யானைக்கால்கள் வந்துவிட்டன. தனக்கு இந்த ஜென்மத்தில் திருமணமே வேண்டாம் என்றுதான் அவள் உறுதியாக இருந்தாள். தான் கண்மூடிவிட்டால், மகள் அநாதையாக நிற்பாள் என்கிற கவலை அந்த தகப்பனுக்கு. இந்த "தாய் மாமனுக்கு உதவமாட்டாயா" என்று இவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர்விட்டார். அக்கா நீயாவது சொல்லக் கூடாதா?

இந்த வீட்டை நாககணேஷ் பெயருக்கு எழுதி வைத்து இவளையும் அவன் தலையில் கட்டிவிட்டார். அன்றும் நாகம் போஸ்டுமேன்தான். வெகுகாலம் அதே பதவிதான். சென்ற வருடம் தான் குமாஸ்தா ஆனான்.

இருபத்தி அய்ந்து ஆண்டு கால தாம்பத்தியத்தில் ஆறு பெண் குழந்தைகள் பிறந்தாயிற்று. ஒரு பிரியமான சொல் சொல்லி இருப்பானா நாகம்? ஏய், ஓய், அடி! இங்க வாடி! வாய்க்கு ருசியா சமைச்சாவது போடத் தெரியுதா உனக்கு, ஆள் தான் அழகு இல்லன்னாலும்! நாம் காதல் பண்ணும் போது உன் கால்கள் என் மேலப்பட்டுடாமத்தள்ளி வெச்சுக்கோ. எனக்கு ஏதாவது வந்து தொலைஞ்சிடப் போவுது! கருமம், கருமம்! நான் ஏன் சம்மதிச்சேன்? முடியாது போய்யா, உன் பெண்ணை எங்காவதுப் பாழுங்கிணத்திலே கொண்டு தள்ளுன்னு சொல்லி இருக்கணும். (எங்கப்பா அதைத்தான் செஞ்சிருக்கார் என்று திருமதி நாகம் முனகுவதுண்டு)

எல்லா இளைஞர்களையும் போல நானும் கனவு கண்டதுண்டு. அழகா, சிவப்பா, ஒல்லியா சீரான வரிசைப் பற்களோடு ஏங்க, ஏங்கன்னு கொஞ்சறவளா வரணும்னு. அந்த அதிர்ஷ்டம் எனக்கு இல்லாமப் போயிடிச்சி. எங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவுக்காக நான் தியாகம் பண்ணி இருக்கேன் சார். இதுக்காக அவர் எனக்குக் கோவில் கட்டிக் கும்பிடணும் என்று தன் வீட்டுக் கூடத்தில் நண்பர்களை அமர்த்தி உரக்கப் பேசுவான் நாகம். (அய்யே! போதும். கரிமூஞ்சியும், தடி உடம்பும், மூக்குல எட்டிப் பாக்கற நாலு மயிரும், காது ஓரத்துல கம்பளிப்பூச்சி மாதிரி ரோமமும் மன்மதக் குஞ்சுதான் போ! என்னைவிட்டா உன்னை எவ கட்டுவா?)

"இன்னக்கி ஆபீஸ்லேந்து வர்றத்துக்கு லேட் பண்ணீட்டீங்களே?" என்று பக்கத்து வீட்டுக்காரன் கேட்டால், "ஆமா, வக்கத்த என் மாமன் எனக்கு ஸ்கூட்டரா வாங்கித் தந்தான்? இந்த ஓட்ட சைகிளை வெச்சித்தானே காலத்த ஓட்ட வேண்டி இருக்குது?..." என்று வாசலில் நின்று கத்துவான். (பெரிய மசிரு உத்தியோகம் பாக்கற. உனக்கு என் அப்பா ஸ்கூட்டர் என்ன, இம்பாலா காரே வாங்கி நொட்டலாம்!)

நாககணேஷிடம் எல்லா கெட்டப் பழக்கங்களும் உண்டு. எந்தக் கெட்டப் பழக்கத்தையும் பெண்களால் சகித்துக் கொள்ள முடியும். ஒரே ஒரு கொடிய பழக்கம் தவிர. அதுதான் பெண்கள் விஷயத்தில் ஒழுக்கக் குறைவாக நடப்பது. அப்படி நடப்பது மட்டும் அல்ல, அதைப்பற்றிப் பெருமை பேசுவது இன்னும் கொடுமை

பத்து ஆண்டுகளாகவே திருமதி நாக கணேஷ் தன் கணவனின் விரல் கூட தன் மீது படுவதை அனுமதிப்பதில்லை. அவன் மீது மரியாதை என்பதே அவளுக்கு இல்லாமல் போயிற்று. வீட்டில் இருக்கும் ஏதோ ஒரு மிருகம் அது.

அவன் நடிக்கும் நாடகங்கள் பற்றியும் அவளுக்கு அக்கறை இல்லை.

"மாமி, மேடையில் மாமா என்ன கம்பீரமா நடிக்கிறார்?" என்று எவராவது வந்து சொன்னால், "சர்டிபிகேட் டைப் அடிச்சுக் கையெழுத்துப் போட்டுக் குடு. சட்டம் போட்டு வீட்டுக் கூடத்தில் மாட்டலாம்" என்பாள். இதனால் நாட்டுக்கோ, வீட்டுக்கோ ஏதும் லாபம் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களில் சொறியும், சிரங்கும் அதிகம் ஆகி சாப்பிட முடியாமல் அவதிப்பட்டான் நாகம். ஸ்பூனாலும் எடுத்துச் சாப்பிட முடியவில்லை. அரை ஸ்பூன், கால் ஸ்பூனாக எடுத்து வாயில் பாதி, மேசை மீது. உடைகளின் மீது பாதி சிந்தி.

அடுத்த தெருவில் இருந்த நாககணேஷின் அக்கா தற்செயலாக வந்தவள் தம்பிக்கு ஊட்டிவிட்டாள். "இதை எல்லாம் கட்டினவ தான் செய்யணும். .. "

"உங்க தம்பிக்கு ஊர் எல்லாம் பெண்டாட்டி. எவ எவளையோக் கொஞ்சினார் இல்ல, அவளுங்க வந்து இப்ப ஊட்டி விடட்டுமே?"

"உனக்கு வாய்க் கொழுப்புடி!"

"நீ சோறு போட்ட. எங்களுக்கு வாய் வளந்தது. . ."

"நீ நல்ல கதிக்கே போகமாட்ட."

"உனக்கெல்லாம் மோட்சம்தான். முக்கியமா உன் தம்பிக்கு சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்து வெச்சுக் காத்திருப்பாங்க. . ."

"வயித்த எரியுதுடி!"

"இங்க அதுக்கு மேல எரியுது. பேசாமப் போ, வாயையும் இன்னொண்ணையும் ஒவ்வொரு கையால் மூடிக்கிட்டு!"

"அக்கா, கொஞ்சம் பேசாம இரு. நாம செஞ்ச பாவம், இவளை மனைவியா அடைஞ்சது. . ." என்றான் நாக கணேஷ்.

"என் வீட்டுக்கு வந்திடுடா. உன்னை ராசா மாதிரி நான் பாத்துக்கறேன். . ." என்றாள் அக்கா.

"ஜாக்கிரதை, உன் பெண் வயசுக்கு வந்து ரெண்டு வருஷம் ஆச்சு. உன் தம்பி உனக்கே மாப்பிள்ளை ஆகலாம்."

"ஆமா அத்தை, ரிஸ்க் எடுக்காத" என்றாள் பத்ராவதியும் தன் பங்குக்கு.

அத்தை திகைத்தாலும், இதுவும் உண்மைதான் என்று நினைத்துப் புறப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ச்சீ, நாய்களா!" என்றபடி கையை உதறிய நாக கணேஷ் சுவரில் கைபட்டு 'ஆ' என்றான். வலிக்குதாப்பா? கஷ்டப்படு என்றாள் பத்ராவதி.

# இருபத்தி இரண்டு

'தொழிலாளர் ஒற்றுமை' என்கிற பத்திரிகையை ஆர்வத்துடன் படித்திருந்தான் சிவப்பா. ஈசிசேரில் அமர்ந்திருந்தான். வெள்ளை வேட்டியும், கையில்லாத பனியனுமாக நல்ல கனமான ஆசாமி. தோளின் ஒரு பக்கம் சிவப்புப் பூத்துண்டு. புதிதாக கண் பரிசோதித்து பட்டை ஃபிரேம் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்ததில் ஒரு பெரிய மனிதத் தோற்றம் அவனுக்கு.

"அண்ணா, ஒரு உதவி செய்ய முடியுமா?. . ." என்று அருகில் வந்து எதிரில் இருந்த ஸ்டூல் மீதிருந்த சில புத்தகங்களை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள் தங்கை.

இப்போது விஞ்ஞானமும், மருத்துவமும் பல மடங்கு முன்னேறிவிட்டது. ஒரு காலத்தில் தொழுநோய் என்கிற பெயர் கேட்டாலே தொழுது விலகிச் செல்வார்கள். ஆனால் இன்று குஷ்டநோயாளிகளைக் குணப்படுத்த முடிகிறது. எய்ட்ஸ், கேன்சர், மரணம் அடைந்தவர்களைத்தான் ஒன்றும் செய்ய முடிவதில்லையாம்.

தங்கையும் மெல்ல குணம் ஆகி வருகிறாள். பூரணமாகக் குணம் ஆனாலும் முழு மனதோடு இவளை மணக்க எவன் முன் வருவான்? இவளுக்கு மணம் ஆகாதது குறித்து முழுக் கவலையும் அம்மா படுவாள். என்னைக் கேட்டால் கல்யாணம் ஆகாதது பாவமோ, பரிதாபத்திற்குரியதோ அல்ல. இவள் தன் வாழ்க்கையை சமூக சேவைக்காக அர்ப்பணிக்கலாம். ஓர் அன்னை தெரசா, ஓர் ஐடாஸ்கட்டர், நிவேதிதா. . .

அண்ணன், நாற்பது வயது கடந்த போதிலும் எவ்வளவு லட்சணம்? இவன் மட்டும் உம் என்று சொன்னால் எத்தனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் மாலையிட வரிசையாக நிற்பார்கள்? இவன் ஏன் திருமணம் செய்துகொள்ளவில்லை? என் பொருட்டுத்தானே? இப்படி ஒரு பாசம் உள்ள அண்ணன் உலகில் எங்காவது இருப்பானா? பாசமலர் என்று ஒரு தமிழ் சினிமா தான் வந்தது. உண்மை வாழ்க்கையில் அண்ணன் தங்கைகள் ஏனோ தானோ, நீ யாரோ, நான் யாரோ தான். எனக்காக உன் வாழ்க்கையை நீ ஏன் அண்ணா அழித்துக் கொள்கிறாய்? என்னையும், அம்மாவையும் ஏதாவது கருணை இல்லத்தில் கொண்டு விடு. நீ திருமணம் செய்து கொள். ஆனால், அதற்கெல்லாம் நீ ஒப்புக் கொள்ளமாட்டாய். நீ ஓர் அற்புதப்பிறவி.

அதுதான் போகட்டும். திருமணம் இல்லை என்பதற்காகப் பெண்களைப் பார்த்து நீ அசடு வழிவதும் இல்லை. பெண்கள் பக்கமே உன் பார்வை திரும்புவதில்லை. பிற பெண்களைத் தாயாய் சகோதரியாய் பார்க்கும் உன் பண்பு என்னைச் சிலிர்க்க வைக்கிறது. . .

பத்திரிகையை மூடி நிமிர்ந்தான் சிவப்பா. "சொல்லும்மா"

"எதிர் வீட்டுல ஒரு கணவன், மனைவி. அந்த கணவன் ஒரு வாரம் கேம்ப் போயிட்றாராம். அந்தம்மா தனியா இருக்கப் பயப்படுது. அது நம் வீட்டு உள்ள வந்துப் படுத்துக்கட்டும்னு அம்மா சொன்னாங்க. நீங்க. . ."

"நான் திண்ணைலப் படுக்கணும். அதானே?"

"அதேதான். அதுமட்டும் இல்ல. அடுத்தவாரம் அந்த பொம்பளையைக் கூட்டிக்கிட்டு நீங்க திருநெல்வேலி போறீங்க. அவங்க மாமியார் வீட்ல ஏதோ நிகழ்ச்சியாம். கணவர் வேற ஒரு கேம்ப்லந்து வந்து சேந்துப்பாராம்.. ."

"இது ஒண்ணும் பெரிய விஷயம் இல்ல. . ."

"இல்ல. இனிமே தான் பெரிய விஷயம் சொல்லப் போறேன். அவங்க ரயில்ல, முதல் வகுப்புலப் போறாங்க. நீ சம்மதிப்பேங்கற எண்ணத்துல உனக்கும் டிக்கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கியாச்சு. அதாவது நீயும் அந்தப் பெண்ணும் முதல் வகுப்பு அறையிலே தனியா. முதல் வகுப்புப் பெட்டி எப்படி இருக்குமாம், தெரியுமா? கதவைத் தாழ் போட்டுக்கற தனித்தனி அறையா, அதுல ஒரு அறையில நீயும், அந்தப் பெண்ணும். இன்னும் ரெண்டு பெர்த்தை வேற யாராவது வாங்கி இருப்பாங்க. . ."

"அய்யோ, இது என்னம்மா என் கற்புக்குச் சோதனையா?"

"அப்படி எல்லாம் இல்ல. எங்க அண்ணா, உத்தமர்னு எனக்குத் தெரியாதா? ஆயிரம் பெண்கள் நிர்வாணமா நின்னாக்கூட என் அண்ணன் அவங்க கால் கட்டைவிரலைப் பாக்கக் கூடக் கூசுவார்னு சொன்னேன். . ."

ஆயிரம் - நிர்வாணம்! அய்யோ, எப்படிப்பட்ட காட்சி அது! சிவப்பாவுக்கு மனசுள் ஏதேதோ ஆயிற்று.

மேற்படித் திட்டத்திற்கு ஒப்புக் கொண்டு சிவப்பா திருநெல்வேலி வரைப் போய் வந்ததில் இவனைப் போல உத்தமன் உண்டா என்று பேர் ஆயிற்று.

"எங்கண்ணா ஒழுக்க சீலர்" என்று தங்கை பெருமையாகப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் சிவப்பா புதுவையில் ஒரு லாட்ஜில் தன் கற்பை, விரும்பி ஒரு பெண்ணிடம் பறி கொடுத்துக் கொண்டிருந்தான்.

சிவப்பா குடி இருக்கும் பகுதியில் அவன் எந்தப் பெண்ணையும் நேருக்கு நேர் பார்ப்பதில்லை. கும்பிடுதான், அம்மா வணக்கம்தான். என்ன சொல்றீங்க சிஸ்டர் தான். பொம்பளைங்கன்னா இப்படிக் கூச்சப்பட்றார்ரீ!

"சிந்தையில் கள் வேண்டி, சிவ சிவ என்பார்னு பாரதி பாடினது நம்மைப் பத்தி தானோ? எந்தப் பெண்ணையும் மனசாலக் கற்பழிக்கிறோம். ஓரக் கண்ணால விழுங்கறோம். ஆனா, கற்புக்கரசன்னு நமக்கு வந்து குவியற பாராட்டைப் பாத்தியா?. . ." என்றான் சிவப்பா, ஒரு நாள் நாக கணேஷிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய், நான் உன்னைப் போல இரட்டை வேடக்காரன் இல்ல. வெளிப்படையாவே பொம்பளைப் பொறுக்கின்னுப் பேர் வாங்கிட்டவன் நான்..." என்றான் நாகம்.

"மனசைக் கட்டுப்படுத்தவே முடியலையேடா? நமக்கெல்லாம் முடிவு என்ன? எய்ட்ஸா?"

"அய்யோ சொல்லாத, பயமா இருக்கு..."

"அதிலே வேடிக்கை, நம்மையே கூப்பிட்டு ஜனங்களுக்கு அறிவுரை சொல்ற எயிட்ஸ் சினிமாலயும் நடிம்பான்."

"கண்கள் தான் மனசுல விகார எண்ணங்களை உண்டாக்குது. நம் கண்களைக் குருடாக்கச் சொல்லி விடலாமா?"

இவர்கள் ரெயில்வே ஸ்டேஷன் பெஞ்சில் அமர்ந்து மேற்படிப் பேசியதை ஒரு பெரியவர் கேட்டார். சொன்னார்: "தம்பி, இதய நோயாளிகளுக்கு டாக்டர்கள் அறிவுரை சொல்றத நான் கேட்டிருக்கேன். மனைவி கூட சேந்தீங்க, அவ்வளவுதான். உங்க உயிருக்கே ஆபத்தும்பாங்க. அவ்வளவுதான், மனைவி முகத்தை அவங்க ஏறிட்டும் பாக்கறது இல்ல..."

"ஊஹூம், இது எங்களுக்குச் சரிப்படாது. பாண்டு மகாராஜாவுக்குக் கூட இப்படி ஒரு முனிவர் சாபம் குடுத்தாரு. நீ உன் மனைவி மேல ஆசை வெச்ச, அவ்வளவுதான் ஃபட்டுனு. காட்டுல திடீர்னு ரெண்டாவது மனைவி மாத்ரி மேல ஆசை வந்தது. அடி என் கண்ணேன்னு நெருங்கினான். ஹான்னு அலறி விழுந்து செத்தான். செத்தாலும் பரவாயில்லன்னு நாங்க காதலுக்கு முக்கியத்துவம் குடுத்துடுவோம்..." என்றான் நாக கணேஷ்.

"அப்ப, துருப்பிடிச்ச கத்தி கொண்டு வரேன். இதே இடத்துல நாளை சந்திப்போமா?..." என்றபடி பெரியவர் நிமிர சிவப்பாவும் நாக கணேஷும் ஓட்டம் பிடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தி மூன்று

அருணின் பலகாரக் கடைக்கு அன்று அரைநாள் விடுமுறை. முன்பு வாரத்தின் ஏழு நாட்களும் திறந்துதான் இருந்தது. அருணின் மனைவி வந்த பிறகே ஞாயிறுகளில் பிற்பகலில் விடுமுறை விட ஆரம்பித்தனர். முழு நாளுமே விட்டுவிடலாம். ஆனால் அருணின் மனைவி வைக்கும் சாம்பார் ஜனங்களை மிகவும் கவர ஆரம்பித்திருந்தது. அதனால் ஞாயிறு காலைகளில் இட்லி சாம்பாருக்காகவே கூட்டம் கூடத் தொடங்கியது. வியாபாரத்தை விடுவானேன்?

அருணின் மனைவி மளிகைக் கடைக்குப் போயிருந்தாள். அந்த நேரம் சந்திரன் வந்தான்.

"டேய், புது நாடக வசனம் மனப்பாடம் பண்ணிட்டியா?. ..அப்படியே அழுது நடிக்கிற சீன் ரெண்டு மூணு அமைஞ்சுப் போச்சு..."

"ஆமாண்டா. அழுகை சீன்ல தான் நடிப்பை நல்லா வெளிப்படுத்த முடியும். என் வசனம். சொல்றேன், கேக்றியா?..."

முதலில் சந்திரன் அவன் பாடத்தைச் சொல்லி முடித்தான். பிறகு அருணின் முறை. அருண் வசனம் பேச, கதாநாயகிக்குரிய வசனத்தை சந்திரன் படித்தான். 'அன்பே, கண்ணே' என்றெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு சந்திரனின் கன்னத்தை முகவாயைத் தடவினான் அருண்.

சாமான் பையைச் சுமந்து ஏற்கெனவே உள்ளே வந்துவிட்ட அருணின் மனைவி பையை ஒருபுறம் வைத்து தரையில் அமர்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள். ஆனால் சந்திரனும், அருணும் இவளைக் கவனிக்கவே இல்லை. தங்கள் நாடக ஒத்திகையில் முற்றிலும் தங்களை மறந்திருந்தனர் ஓர் அரை மணி. படபடவென்று கை தட்டினாள் அவள். பிறகே அவர்கள் அவளைக் கவனித்தனர். சந்திரன் கை கூப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படி அண்ணி, எங்க நடிப்புத் தேவலையா?"

"சரி, இப்படித்தான் உலகத்தையே மறந்துடுவீங்களா? எவனாவது வீடுப்புகுந்து எதையாவது அபேஸ் பண்ணினாக்கூட கவனிக்கமாட்டீங்க போலிருக்கே? சரி இருங்க, உங்க ரெண்டுப் பேருக்கும் டீ கொண்டுவரேன். குடிச்சிட்டுத் தெம்பா ரெண்டுப் பேரும் கட்டி அணைச்சுக்குங்க..." என்று சமையலறைப் பக்கம் சென்றாள்.

"டேய், அண்ணியையும் கூட்டிப் போவோம்டா. கட்டாயம் வருவாங்க. நான் சொல்றேன். அண்ணி, எம்.ஜி.ஆர் சினிமா வந்திருக்குது. சாயங்காலம் போவோமா?..." என்றான் சந்திரன்.

"என்ன படம்?"

"ஆயிரம் தலைவாங்கிய அலிபாபா."

"அப்படி ஒரு படமும்... த பாருங்க, என்னை ஏமாத்தி ஏதாவது சிவாஜிப் படத்துல கொண்டு உக்காத்தி வெச்சீங்க, எனக்குக் கெட்ட கோவம் வரும்... பொல்லாதவளா மாறிடுவேன்.."

"அது ஏன் அண்ணி சிவாஜிப் படம் பாக்க மாட்டேங்றீங்க? எப்பேர்ப்பட்டநடிகன்! உலகத்துலேயே இப்படி ஒரு தலைசிறந்த நடிகன் இதுவரை தோன்றியது மில்ல, இனி... இப்பத் தெரியாது அந்த மேதை அருமை! இன்னும் கொஞ்ச காலம் போகட்டும்.."

"நீங்க ஏன் எம்.ஜி.ஆர் படங்கள் பாக்கமாட்டேங்றீங்க?"

"அது ... வந்து..."

"இல்லடா, எங்களுக்குள்ள ஒரு ஒப்பந்தம். அவகூட நான் ஒரு எம்.ஜி.ஆர் படம் போகணும். அதுபோல அவளும் எனக்காக விட்டுக் கொடுத்து ஒரு சிவாஜிபடம் வரணும். இன்னிக்கு அவள்முறை. நம்கூட சினிமாவுக்கு வர்றா..."

"பகவானே. நீ தான் என்னைக் காப்பாத்தணும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அருணோடு சினிமாவுக்குப் போயும் தான் என்ன? இரண்டாவது காட்சியிலேயே குறட்டைவிட ஆரம்பித்து விடுவாள். அருணுக்குக் கோபமாக வரும். இதைப் போய் ரசிக்க மறுக்கிறாளே, தண்டம்!

அதே போல எம்.ஜி.ஆர் படத்தில் பெயர்கள் காட்டும் போதே அவன் தூங்கிவிடுவான். இடைவேளையில் அவள் அவனை எழுப்பும் போது என்ன படம் முடிஞ்சிடுத்தா, வீட்டுக்குப் போவமா என்பான். அவளுக்கு ஆத்திரம். ஜடம்! இதை எல்லாம் ரசிக்கத் தெரியவில்லை. நடந்து வீடு திரும்பும் போது இருவரும் சண்டைப் போட்டுக் கொள்வார்கள். “அய்யோ, நான் என்னப் பண்ணுவேன்? அறுவை தாங்க முடியலையே!” என்பதே இருவரின் பதிலும்.

காசை வீண் ஆக்குவானேன்? பிடிக்காத படத்திற்குப் போகாமலே இருந்துவிடலாம்.

அருணும் அவன் மனைவியும் முதல் இரவன்றே தங்களுக்குள் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி பரஸ்பர ரசனைக்கு மரியாதை கொடுப்பது, அடுத்தவரின் ரசனையை விமர்சனம் செய்யாதிருத்தல்...

அருணின் மனைவிக்கு பத்திரிகைகளில் வாசகர் கடிதம் எழுதுவதுப் பொழுதுபோக்கு. வானொலியில் சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்பார்கள். அதில் பரிசுகள் பெற்றிருக்கிறாள். பத்திரிகைகளிலும் கேள்வி பதில் பகுதியில் கேள்விகளை கேட்பது உண்டு. அதிலும் சிறந்த கேள்விக்குப் பரிசுகள் பெற்றிருக்கிறாள். சமையல் குறிப்புகள் எழுதிப் பரிசுப் பெற்றிருக்கிறாள்.

அவ்வப்போது அவளுக்கு மணி ஆர்டர்களும், பத்திரிகைகளும் வரும். அவளின் உலகமே தனி. அவளும் சுறுசுறுப்பாக இயங்கினாள். அவளையும் தேடி ஆண், பெண் சக துணுக்கு எழுத்தாளர்கள் வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்குத் தான் பாவம், பரிசு ஏதும் வரவில்லை. கைக் காசு தான் நஷ்டம்..." என்பாள்.

"திடீர் என்று ஒரு நாள் எங்களைத் தேடி எவனாவது வந்து பாராட்டி சால்வை அணிவித்து பெரும் தொகைப் பரிசை நீட்டப் போகிறான் எல்லோரும் பிரமிக்க."

சீமந்த வளைகாப்பின் போதும் அருண் தம்பதிகளுக்குள் விவாதம். "என் குழந்தையாவது என் ரசனையைக் கொண்டிருக்கட்டும்!"

ஒன்பதாவது மாதம் அருணின் மனைவியை அழைத்துச் செல்ல சம்பந்திகள் வந்தனர். பஸ் ஸ்டாண்டில் வழி அனுப்ப வந்த அருணிடம், "சனியன் ஒழிஞ்சதுன்னு நிம்மதியா இருங்க. ஆறுமாசத்துக்கு உங்க பிரிய நடிகர் படமாப் பாத்துத் தள்ளுங்க..." என்று சிரித்தாள்.

அவளின் கை வளையல்களை ஏற்றி இறக்கி விஷமம் செய்த அருண், "ச்சீ, ஏன் அப்படிச் சொல்ற? நம் ரசனைகள் தனி. வாழ்க்கை அது ஒருபக்கம்..." என்று கண் கலங்கினான். பஸ் புறப்பட்டுச் சென்றதும் அவள் நினைவாக ஒரு எம்.ஜி.ஆர் படம் பார்க்கச் சென்றான்.

# இருபத்து நான்கு

"**நா**னும் கடலூர்ல எல்லா ஓட்டல்லயும் சாப்பிட்டுப் பாத்துட்டேன். நம்ம ஜெய் அருண் கடை மசால் வடை ருசி எங்கயுமே இல்லப்பா..." என்றபடி இரண்டு நண்பர்களுடன் கடையினுள் வந்தான், அதே தெரு முனையில் இருந்த ஸ்ரீ சீதளாதேவி அச்சக முதலாளி. ஒரு பெஞ்சில் அமர்ந்து "அருணா, சூடா ஆளுக்கு ரெண்டு மசால்வடை வித் சாம்பார்." என்றான்.

"தரேன் அண்ணா" என்றான் அருண்.

"இந்த வருசம் தேர்தல் நடத்தப் போறது இல்லியா? நம்மகிட்ட நோட்டீஸ் அடிக்கக் குடுக்கலியே?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து ஆண்டுகள் முன்பு துவக்கப்பட்டது கடலூர் சிவாஜி ரசிகர் மன்றம். அருண் தலைவர். சந்திரன் துணை. செயலாளர், பொருளாளர், உறுப்பினர் பதவிகள் வேறு நபர்களுக்கு. காலப்போக்கில் ஆங்காங்கே நிறைய சிவாஜி ரசிகர் மன்றங்கள் ஏற்பட்டன. வித்தியாசம் காண்பதற்காக சிவாஜி நடித்த படங்களின் பெயர்களை தங்கள் மன்றங்களுக்குச் சூட்டிக் கொண்டனர். ஊரில் ஆயிரம் மன்றங்கள் இருந்தாலும் நாங்கள் தான் தலைமை ரசிகர் மன்றம், யார் ரசிகர் மன்றம் துவங்கினாலும் எங்களிடம் பதிவு செய்து கட்டணம் செலுத்தி பதிவு எண் பெற வேண்டும் என்று அருணும், சந்திரனும் பேப்பரில் விளம்பர எச்சரிக்கை செய்தனர். ஒரு தடவை ஈஸ்வரமூர்த்தியின் துணையோடு சென்னை சென்று சிவாஜியையும் நேரில் சந்தித்து தாங்கள் தான் உண்மையான ரசிகர் மன்றம் என்கிற அத்தாட்சிக் கடிதமும் பெற்றனர். கிளை மன்றத்தினர், தலைமைச் சங்கத்திற்கு ஆண்டுச் சந்தா கட்ட வேண்டும். தலைமை மன்ற உறுப்பினர் மற்றும் குடும்ப நபர்கள் சிவாஜி படங்களைப் பார்க்க டிக்கட் கிடைக்கவில்லை என்று அலைமோத வேண்டியது இல்லை. புதிய சிவாஜி சினிமா ரிலீஸ் ஆகும்போது மன்ற உறுப்பினர்களுக்கு சினிமா டிக்கட் இரண்டு, கட்டணம் இல்லாமல் வழங்கப்படும்.

மன்றத் தேர்தல் ஆண்டுதோறும் நடத்துவது குறித்து பேச, சந்திரனைத் தேடி நேற்று சென்றான் அருண். வீட்டில் ஒரு கிழவி மட்டுமே இருந்தாள். சந்திரனுக்குத் திருமண நிச்சயதார்த்தம் மதுரையிலாம். சந்திரனும், பெற்றோரும் மதுரை சென்றிருந்தனர்.

'அட திருடா, என்னிடம் சொல்லவே இல்லையே!' சைகிளில் ஏறி, கடலூர் பழைய நகர் பாதையில் செலுத்தினான் அருண். இதயம் வலி கண்டது. எப்படி உயிருக்குயிராய்ப் பழகும் நண்பன். தன் வாழ்வின் முக்கியமான தருணங்களில் சொல்லாமலே இருந்து விடுகிறானே! சென்ற மாதம் பெண் பார்த்துவிட்டுத் தகவல் சொன்னான். அப்போதும் கோபம் வந்தது. "ஏண்டா, என்னை எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக்கிட்டுப் போறது இல்லியா?. . .’’ என்றான் அருண்.

“இல்லடா. மதுரை மாமா திடீர்னு காரைக் கொணாந்து வீட்டு வாசல்ல நிப்பாட்டி, இந்த க்ஷணமே கார்ல ஏறுடா கம்மனாட்டின்னு அதட்டினாரா, எனக்குக் கையும் ஓடல, காலும் ஓடல. சாரிடா. . .”

மனிதர்கள் என்னதான் தாயாய் பிள்ளையாய் நகமும், சதையுமாகப் பழகினாலும் முக்கிய சந்தர்ப்பங்களில் சாமர்த்தியமாக வெட்டி விடுகிறார்கள். சாதாரண சமயங்களில் வெளிப்படையான சிரிப்பு, அன்புச்சாயம் கலந்தப்பேச்சு, இவன் என் உடன் பிறவா உறவு என்றெல்லாம் பசப்பினாலும் மனதின் உள் ஆழத்தில் நம்மீது எரிச்சல், இவன் ஒன்றும் பெரிய மயிரான் இல்லை என்கிற அலட்சியம், காலம் வரும் போது நான் யார் என்று காட்டுகிறேன் இருடா என்கிற பொறுமல் எல்லாம் இருக்கும் போலும்.

கடலூர் பழைய நகர் செல்லும் சாலையில் சைகிளை நிறுத்தி ஒரு கால்வாய் மதகின் மீது இரவு ஏழு மணிப் பொழுதில் தனியாக அமர்ந்து தவிக்கும் உள்ளத்துடன், இப்படிச் செய்துவிட்டான் பார் என்று வருந்தினான் அருண். எனக்கு இப்படி எல்லாம் கெட்டிக்காரத்தனமாக நடந்து கொள்ளத் தெரியலையே! ஜாதகம் கொடுக்க மயிலாடுதுறைக்காரன் வந்துப் போனதுமே இவனைத் தேடி ஓடி வந்து எல்லாவற்றையும் கொட்டி அளந்தேனே! ஓட்டைவாய்!

அவனாகத் தேடி வந்து தகவல் சொல்லும் வரை அவனை நாம் தேடிப் போகக் கூடாது.

பத்து நாட்கள் ஆயின. இருவருமே சந்திக்கவில்லை. அருண் தான் விட்டுக் கொடுக்க நேர்ந்தது. தேடிப் போனால் சந்திரன் கிடைக்கவில்லை. புதிய சூட் தைக்க, ஷுஸ் வாங்க, பத்திரிகை அடிக்க குல தெய்வத்திற்குப் படையல் போட, முக்கிய உறவினர்களுக்கு நேரில் பத்திரிகை வைக்க என்று படு பிசியாகிவிட்டான்.

“என்ன சந்திரா, உன் நண்பனை ஒரேயடியா மறந்துட்டியே! கல்யாணப் பத்திரிகையாவது குடுப்பியோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டியோன்னு நினைச்சோம். தப்பு இல்லப்பா, கல்யாணமோ, கார்த்தியோன்னு அந்த நேரம் ஒரு பரபரப்பு வந்து ஒட்டிக்கும். பக்கத்துல யாரு நிக்கறாங்கன்னு கண் தெரியாது. அவசரத்துல அண்டாலக் கை நுழையாது. . ." என்று பத்திரிகை கொடுக்க வந்த சந்திரனைக் கிண்டல் செய்தாள் அருணின் அம்மா.

சந்திரனின் திருமணத்திற்கு முழுநிலா நாடக மன்றக் கலைஞர்கள் எல்லோருமே மதுரை சென்றனர். திருமணத்திற்கு முதல்நாள் இரவு பிரபல இசைக் குழு தன் ஆர்கெஸ்ட்ராவுடன் பிரகாசமாக விளக்குகள் கண்களைப் பறிக்க தூள் பரத்தியதை இபுராகீம் குழுவினர் பிரமிப்புடன் பார்த்தனர். இந்த மாதிரி நாமும் ஒருநாள். . .

சந்திரனின் மனைவி ஒரு கறுப்பு பீப்பாய். ஆயிரக்கணக்கில் போட்டு வாங்கிய பட்டுச்சேலையும், உடம்பு முழுக்க நகைகளும், பியூட்டி பார்லரில் செய்து விடப்பட்ட ப்ரைடல் மேக்கப்புமாக வீடியோ ஒளியில் பார்க்க சுமாராக இருந்தாள்.

பழையபடி அருணும் சந்திரனும் ஆர்வமாய் சந்தித்து நாடகங்கள் பற்றிப் பேச முடியவில்லை. சிவாஜி படம் வந்தால் சேர்ந்துப் போக முடியவில்லை. அருணுடன் கொத்தமல்லி தான் சினிமாவுக்கு கம்பெனி கொடுத்தான். முன்பு போல சந்திரன் நடிக்க வருவானா?

திருமணத்திற்குப் பிறகு சந்திரன் சட்டையை பாண்டினுள் இன் பண்ணிக் கொள்ள ஆரம்பித்தான். தலை, முன்பு மாதிரி காற்றில் பறக்கவில்லை. முகத்திலும் எண்ணெய் வழியாமல் ஏதோ க்ரீம். மணிக்கட்டில் ரூபாய் ஆறாயிரம் மதிப்புள்ள வாட்சு.

புதுமனைவி சினிமாப் பார்க்க விரும்பினாள் என்று கடலூரில் இருந்து பாண்டிச்சேரி போய் வர டாக்சி. சிவாஜி படம் பார்த்தார்களா? இல்லை. சிந்தியா ரோத்ராக், மிக்கேல் கான் என்கிற இரண்டுப் பெண்கள் பாய்ந்து பாய்ந்து சண்டை போடும் விஜய சாந்தி டைப் ஆங்கிலப் படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலூரில் சிவாஜி வாரம் வந்தது. ஒரு தியேட்டரில் சிவாஜியின் ஏழு படங்கள் தினம் ஒன்றாக. ஏதாவது ஒன்றிற்கு சந்திரன் வருவானா?

சந்திரனின் வீட்டில் வீடியோ டேப் ஓடியது.

"வா, அருண். மங்கோல்ஸ்ங்ற இந்தப் படத்தைப் பாரு. மங்கோலியர்கள் அடிக்கடி கூட்டம் கூட்டமாப் படை எடுத்து வர்றாங்க. அந்த கூட்டத் தலைவன் அடிக்கடி தன் குடுமியைத் தட்டி முடியற கம்பீரத்தைப் பாரு. மக்களைப் பெற்ற மகராசில நம்ம சிவாஜியும் இப்படி குடுமிய. . ."

"நிறுத்து சந்திரா. நம் சிவாஜி, யாரைப் பாத்தும் காப்பி அடிக்க மாட்டாரு. அவரு ஸ்டைலைப் பாத்து தான் உலகமே பாடம் கத்துக்கணும். நான் அப்புறம் வரேன். . ." வருத்தத்துடன் வெளியேறினான் அருண்.

## இருபத்தி அய்ந்து

ஆற்காடு உட்லண்ட்ஸ் ஓட்டல் வளாகத்தில் சைகிளில் இருந்து இறங்கினார் வெங்கு. சைகிளைப் பூட்டி சாவியை ஜிப்பாப் பையினுள் போட்டுக் கொண்டார். மார்பில் வட்டமாக ஒரு பேட்ஜை குண்டூசி கொண்டு குத்தி இருந்தார். காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினர். மாடிப்படியில் ஏறும்போது இன்னும்சில ஜிப்பாக்கள் சேர்ந்து கொண்டன.

ஒரு மணி நேரம் கழித்து ஜிப்பா பைகளில் கைவிட்டபடி வெங்கு படி இறங்கினார். ஓர் இளைஞன் கும்பிட்டான்.

"காபி சாப்பிடுவோமா?. . ."

"டிபனே சாப்பிடுவோம். . ."

ஆனியன் ஸ்பெஷல் ஊத்தப்பத்திற்கு ஆர்டர் கொடுத்து காத்திருந்தனர். இளைஞன், வெங்குவின் ரசிகனாம்.

"நீங்க காங்கிரசா?. . ."

"ஆமா, தேர்தல் வருதே! யாரை, எங்கே நிறுத்தலாம்னு விவாதிச்சாங்க. . ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு சம்பந்தமே இல்லாத கூட்டம்ங்க இது."

"ஆமா. ரொம்ப அறுத்தது. எதுக்குக் கத்தறானுங்க, ஏன் அடிச்சுக்கறானுங்க, ஒரு எழவும் புரியல"

"ஏன் இதுக்கெல்லாம் வர்றீங்க?.."

"தம்பி, நடக்கிறது காங்கிரஸ் ஆட்சி. எனக்கோ வருஷத்துக்கு ஒரு தடவை கைத்தறி வார விழால நாடக சான்ஸ்.."

"இந்தக் கட்சியை ஆதரிச்சா தான் உங்களுக்கு வாய்ப்புங்றீங்க. காங்கிரஸை நம்பிப் பிரயோஜனம் இல்லீங்க. அது அஸ்தமனத்துல இருக்குது.."

"அப்ப என்ன செய்யலாம்? ..."

"தி.மு.க.வுக்கு மாறிடுங்க. முழுநிலா நாடகமன்றம் எங்கயோப் போயிடும். காலம் மாறுதுங்க. நாமளும் மாறணும்."

"அந்தக் கட்சீல ஏற்கெனவே நிறைய எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர். நாம கடல்லக் கரைச்ச பெருங்காயம்.."

"அதுதான் இல்ல. கலைஞர்களுக்கு மதிப்புக் குடுக்கிற கட்சி அது. வேண்ணா, இன்னி ராத்திரி தேரடில நடக்கிற அந்தக் கட்சிக் கூட்டத்துக்கு வாங்களேன்? உங்களுக்கு கிடைக்கிற வரவேற்பைப் பாத்து அசந்துடுவீங்க.."

அன்றிரவு ஏழு மணிக்கு அரசியல் கட்சிக் கூட்டத்திற்கு வெங்கு சென்றார். பிற்பகலில் சந்தித்த இளைஞன் வந்து கை குலுக்கினான். குலுக்கிய கையை விட்டு விடாமல் அவரை மேடைக்கு அழைத்துச் சென்று வட்டம், மாவட்டம் என்று யார் யாருக்கோ அறிமுகப்படுத்தினான்.

"பெரிய நாடக ஆசிரியருங்க. முப்பது, நாப்பது நாடகம் அரங்கேத்தி இருக்காரு."

அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் உள்ளூர் ஆசாமிகள் தான். "அட, இவரைத் தெரியாதா?" என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக் முன்னால் ஓர் இளைஞன் பேசிக் கொண் டிருந்தான். சென்றவாரம் இதே மேடையில் பேசிய எதிர் கட்சிப் பேச்சாளனுக்குப் பதில் கொடுத்துக் கொண் டிருந்தான். அடே குக்கல் நாயே! விருந்தாளிக்குப் பிறந்தவனே! எங்கள் தங்கத் தலைவனையா விமர்சனம் செய்கிறாய்? மேடை ஏறுமுன் கண்ணியமாய்ப் பேசுவது எப்படின்னு தெரிஞ்சுக் கிட்டு வீட்டுப்படி இறங்குடா கபோதிப் பயலே!

வெங்குவிற்கு வெட்கமாக இருந்தது. "யப்பா, நா போகட்டா? அரசியல் எனக்கு சரிப்படாது. . ."

"இல்லீங்க. இவனுங்க உள்ளூர் பசங்க. தண்ணிப் போட்டு மேடை ஏறி ஏதோ கத்துவானுங்க. டைம் அட்ஜஸ்ட்மெண்ட். பெரிய தலைவர்கள் பேசறதத்தான் நீங்க கவனிக்கணும். . ."

வெளியூரில் இருந்து வந்த பிரபல பேச்சாளர் மைக் அருகில் வந்து, வெங்குவை மேடைக்கு அழைத்தார்.

"இதோ பாருங்கள் உங்கள் ஊரின் தலைசிறந்த நாடக ஆசிரியர். இவரை இந்த அரசாங்கம் எப்படி வைத்திருக்கிறது? இதுதானா தமிழ் நாடகக் கலைஞனின் தலை எழுத்து? கிழிந்த ஜிப்பா. அழுக்கடைந்த வேட்டி. ஒட்டிய வயிறு. உருக்குலைந்த தோற்றம். இந்த அறிஞர் இன்று நம் கட்சியில் சேர்கிறார். நம் கழகம் செய்யவேண்டிய முதல்பணி, இந்தக் கலைஞருக்கு நிதி திரட்டித் தருவது தான். அரசு செய்யத் தவறிய பணியை நம் கட்சி செய்யும். வெகு விரைவில் நாடக அறிஞர் வெங்குவிற்கு நிதி அளிக்கும் விழா நடத்துவோம். வாழ்க தமிழ், வெல்க கலைஞர்கள்!. . ."

யார் யாரோ மேடை ஏறிப் பேசினார்கள். ஒவ்வொருவர் பெயருடனும் அவர்களே சேர்த்து வணக்கம் சொல்லி முடிப்பதற்கே பத்துப் பத்து நிமிடம் ஆயிற்று. கொடுமைடா சாமி. . . நைசாக நழுவினார் வெங்கு.

அடுத்த காலையில் வெங்கு தன் கடையில் அமர்ந்து தையல் மெஷினை ஓட்டியபோது அருணும், சந்திரனும் சைகிள்களில் வந்து இறங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன வாத்தியாரே, திடீர்னு நிறம் மார்றீங்க? அந்தக் கட்சி மேடையில உங்களைப் பாத்ததும் தூக்கிவாறிப் போட்டது. இன்னிக்கு ஊர் பூரா உங்கப் பேச்சுத்தான்..."

"அந்தக் கட்சில சேர்றதா சொன்னதுமே நிதி திரட்டித் தாரன்னாம்பா. காங்கிரஸ்காரன் சொன்னானா அப்படி?..."

"திரட்டித்தந்த அன்னிக்குப் பாத்துக்கலாம். வாயால சொல்றதுக்கு என்ன? உங்க பேரைச் சொல்லி வசூல் பண்ணி வாயிலப் போட்டுப்பான்..."

"அப்படி நிதி உங்களுக்குக் குடுக்கட்டும் நாங்களும் அந்தக் கட்சீல சேந்துட்றோம்..." என்றான் சந்திரன்.

அப்போது, முன்தினம் சந்தித்த அதே இளைஞன் இன்னும் இரண்டு மூன்று பேரோடு வந்து கும்பிட்டான்.

"கட்சிப் பிரச்சார நாடகம் எல்லாம் எழுத மாட்டீங்களா? ஒரு நாடகத்துக்கு ஆயிரம் ரூபா வாங்கித் தரோம்..."

"செவி இனிக்கப் பேசறீங்கப்பா. இது தான் தமிழ் நாடகக் கலைஞனின் துர்பாக்யம். ரூபாயைக் கண்லக் காட்டுங்களேன் முன்ன? ஒரு சிறு தொகையாவது..." என்றான் அருண்.

"நாடகம் எப்படி எழுதணும்னு நாங்க சொல்றோம். கவனமாக் கேட்டுக்கிட்டு எழுதுங்க. எங்க வட்டம், மாவட்டத் தலைவருக்கு எல்லாம் பிடிக்கணும்..." என்றான் ஒருவன்.

"வேண்டியது தான். பதினைந்து நாடகம் அரங்கேத்தின எங்க வாத்தியார் உன்கிட்ட நாடகம் எழுதறது எப்படின்னுப் பாடம் கத்துக்கணுமா?" என்றான் சந்திரன் கோபமாக.

"இவங்களை அனுப்புங்க ஆசிரியரே, இவங்க உங்களை மேலே போக விடமாட்டாங்க. இல்ல, நாங்க அப்புறம் வர்றோம்..." என்று எழுந்தனர் கட்சித் தொண்டர்கள்.

"இதப்பார், ஒரு கலைஞனைத் தலை குனிய வெக்காத. இவரைக் கூட்டிப் போய் வட்டம், மாவட்டம் வீட்டு வாசல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை கட்டி நிக்க வெச்சு நாடகக் கலையையே இழிவுப் படுத்தாத. நாடகம் தேவைன்னா, நீ தான் எப்பவும் இவரைத் தேடி வரணும்..." என்றான் அருண் கண்டிப்புடன்.

# இருபத்தி ஆறு

"சலாம்பாய்!" என்றார் வெங்கு, திருப்பாதிரிப் புலியூர் லாரென்ஸ் ரோடில் சைகிளை நிறுத்தி ஒதுங்கி நின்றவர். அந்தப் பக்கம் சைகிளில் சென்ற இப்ராஹீம், "அடேடே!" என்று இறங்கினான். "வாங்க, பீம விலாஸ்ல காபி சாப்பிடு வோம்..." என்று சைகிளைப் பூட்டினான். ஸ்கூட்டரில் (ஆமாம், சந்திரனுக்கு மாமனார் சீர்!) அங்கே டபுள்ஸ் வந்த அருணும், சந்திரனும், "நாங்க கிடையாதா?" என்று சேர்ந்து கொண்டனர்.

"வாத்தியாரே, சூர்யன், சந்திரன் ரெண்டு பேரையும் நீ பக்கத்துலயே வெச்சிருக்கறதுனாலத்தான் இருட்டுலயே இருக்க..." என்று ஒற்றைக் கட்டை விரலால் மேசை மீது தாளமிட்டான் இபுராகீம்.

"அடாடா, என்ன ஆராய்ச்சி! வடை சொல்லப்பா..." என்றான் சந்திரன்.

"என்ன விஷயம் பாய்? இந்தப் பக்கம் எங்கே?" என்றார் வெங்கு.

"நான் ஒரு விஷயம் சொன்னா உங்களுக்கு எல்லாம் வயித்திலேப் புளியைக் கரைக்கும். முதல்ல வடை சாப்பிடுங்க..."

"அய்யோ, என்னப்பா சஸ்பென்ஸ் வெக்கற?..."

"சரி வாத்தியார், சொல்லிட்டேனே... நம்ப மஞ்சக் குப்பம் மைதானம் ஒரு வாரத்துக்கு வாடகைக்கு வேணும். பிரும்மாண்டமான நாடக விழா நடத்தப் போறேன். முனிசிபல் கமிஷனரா, கலக்டரா பர்மிஷன் குடுக்க வேண்டியவரு? தெரிஞ்சவர் ஒருத்தர் கலெக்டர் ஆபீஸ்காரர் - சன்னதித் தெருவுல இருக்காரு. அதான் போறேன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடக விழாவா, பாட்டுக் கச்சேரியா பாய்?"

"பில்ல இப்படிக் குடு. நான்தான் குடுப்பேன். நாடகம், நாடகம், நாடகமே! வசூல் பயங்கரமா ஆகப்போகுது. பணத்தை மூட்டை மூட்டையா அள்ளப்போறேன்.."

"பாயி! எங்களுக்கு சிரிப்பு மூட்டாத. வடையும், காபியும் வாங்கிக் குடுத்த. அதுக்காக இப்படிக் கிச்சு கிச்சுப் பண்ணாத. தமிழ்நாட்டுல, தமிழன் காசு குடுத்து, டிக்கட் வாங்கி நாடகம் பாப்பானா? அதிலும் கடலூர் தமிழன்! கைத்தறி வாரத்துல ஓசி நாடகம் பாத்தே பழக்கப்பட்டவன்பா. பத்துப் பைசா வையேன் டிக்கட் வாங்குவானா?"

"நீ இருபதாம் நூற்றாண்டுத் தமிழனை ரொம்ப மட்டம் தட்டிப் பேசற. நல்ல மன்சு உள்ள தமிழனும் இருப்பான்..." என்ற இப்ராஹீம் 50 ரூபாய் நோட்டை பில்லுடன் வைத்தான்.

"தமிழ் நாடகக் கலை, ஆதரிப்பார் இல்லாம கிடக்கிற பரிதாப நிலையைப் பாரு!"

"சரி, என் பெரியப்பா மகன் காசிம் திருநெல்வேலில நாடக காண்ட்ராக்டர். ஒவ்வொரு ஊர்லயும் ஏழு நாடகம் போடுவாரு. பெரிய கொட்டாப் போட்டு, நிறைய ட்யூப் லைட்டுகள் எரியவிட்டு டிக்கட் விலை ஒரு ரூபா. நிறைய வசூல்.."

"புரிஞ்சுப்போச்சு. பரிசு நாடகம்?"

"அதேதான். குலுக்கல்லப் பரிசு..."

"சரிசரி. இது நாடகம் இல்ல. வியாபாரம். லாட்டரிச் சீட்டுப் போலத்தான் இதுவும். ஜனங்க ஒண்ணும் நாடக ஆர்வத்தின் காரணமா வந்து கூடிடப் போறது இல்ல. பரிசு விழாதாங்ற ஆசை..."

சொன்னபடி இப்ராகீம், தன் உறவுக்கார காசிமுக்காக பார்க்க வேண்டிய அதிகாரிகளைப் பார்த்து, 'கவனித்து' மஞ்சை நகர் மைதானத்தை வளைத்துவிட்டான். கிற்றுக் கொட்டகை. திரும்பிய பக்கம் எல்லாம் ட்யூப் லைட்டுகள். ஊர் சுவர்கள் எல்லாம் நாடகத் திருவிழா நோட்டீசுகள். இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது மணி ஆனால் ஒலி பெருக்கி மூலம் காற்றில் தவழ்ந்து வரும் சினிமாப் பாடல்கள்.

நாடக விழா துவங்குவதற்கு முதல் நாள் அந்திப் பொழுதில் வெங்குவின் வீட்டு வாசலில் ஒரு மாருதி கார் வந்துநின்றது. இபுராகீம் முன்னால் வர, மாமிசமலை போன்ற பெரும் உடம்பு அசைத்து காசிம் வந்தான். சன்னதித் தெருவில் வெங்குவின் கடை மூடி இருந்ததில் வீட்டுக்கு வந்திருந்தனர்.

காசிம், வெங்குவின் கையில் ஸ்வீட் பாக்கெட்டைக் கொடுத்து வெங்குவைக் கட்டி அணைத்துக் கொண்டான். “உங்க வாழ்த்தும், ஆசியும் வாங்க வந்தோம். உங்க ஊர்ல ஒரு குறையுமில்லாம நாடகங்கள் நடத்தி, நல்லப்பேர் வாங்கோணும்!” காசிம், வெங்குவின் கையைக் குலுக்கிய போது கூடவே ஒரு கவர். இரண்டாயிரம் ரூபாய்.

“தயவு செஞ்சு மறுப்பு சொல்லாம ஏத்துக்கணும். உள்ளூர் கலைஞர்கள் வயிறெரிய நாங்க சம்பாதிக்க கூடாது!”

அடுத்த நாள் காலை முதல், நாள் முழுவதும் ஒலி பெருக்கி கட்டிய ஆட்டோக்கள் கடலூர், நெல்லிக்குப்பம், பண்ருட்டி, கடலூர் பழைய நகர், திருவேந்திபுரம், தேவனாம்பட்டினம், செம்மண்டலம், மஞ்சகுப்பம் தண்ணித்தொட்டி, ஆனைக்குப்பம் எல்லா இடங்களிலும் நாடகம்காண வாரீர் என்று அலறின. டிக்கட் ஒரே ரூபாய். குலுக்கலில் தினம் பல பரிசுகள். புத்தம் புதிய சைகிள், வெள்ளிக்குடம், பெரிய சாம்பார் அண்டாக்கள், ஒரு பவுன் தங்கச் சங்கிலி. . .

இரவு பத்து மணி நெருங்க, கடலூரில் மக்கள் வெள்ளம். டவுன் பஸ்களை விட்டு இறங்கி, கூட்டம் கூட்டமாக . . . ஒவ்வொருவரும் நாலு டிக்கட், அய்ந்து டிக்கட் வாங்கினர். நாடகம் ஆரம்பித்த பிறகும் டிக்கட் விற்பனை. நாடகத்தின் இடைவேளை வரை டிக்கட் விற்கப்பட்டது.

டிக்கட்டின்மேல் பகுதி, கீழ் பகுதியில் ஒரே எண் அச்சிடப்பட்டிருந்தது. நாடக அரங்கின் நுழைவாயிலில் மூடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத தகர டின்கள். ரசிகர்கள் டிக்கட்டின் ஒரு பகுதியை தாங்களே கிழித்து டின்னில் போட்டு உள்ளே சென்றனர்.

நாடக அரங்கைச் சுற்றி நிறைய காஸ் லைட்டுகளுடன் தள்ளு வண்டி கடைகள்.

"அடேயப்பா, நாடகத்தின் மீது ரசிகர்களுக்கு இவ்வளவு காதலா!..." என்று சிகரெட் ஊதினான் அருண்.

"உள்ளே பார், ரசிக மகா ஜனங்கள் புல் தரையில் படுத்துக்கிடப்பதை!" என்று பீடி உறிஞ்சினான் நாக கணேஷ். "நாமும் இப்படி விழா நடத்தினா என்ன? வெங்கு ஒத்துக்கமாட்டாரு!"

ஏதோ ஒரு பழைய சினிமாக் கதையையே மேடையில் மறுபடி நடித்தனர். என்ன கதை ஆனால் தான் ரசிகர்களுக்கு என்ன? கல்யாணக் கச்சேரி போலத்தான். சிலர் மேடைக்கு முதுகு காட்டி, முழங்கால் கட்டி, கும்பல் கும்பலாக அரட்டை.

"ரசிகர்களே, உங்களுக்கு தேவையான டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்!" மைக் அலறியது."

இரவு ஒரு மணிக்கு நாடகம் முடிந்தது. பிறகு ஒரு மணி நேரம் பரிசுக் குலுக்கல். முதல், இரண்டாம், மூன்றாம் மற்றும் பத்து ஆறுதல் பரிசுகள். ஒரே சந்தோஷ ஆரவாரம். ஏழுநாளும் (இரவும்) இப்படியே கழிந்தது.

# இருபத்தி ஏழு

"கூப்பிட்டீங்களா வாத்தியார் அய்யா? உங்க பக்கத்து வீட்டுப் பொடியன் வந்து சொன்னதும் கடையில என் சம்சாரத்தை உக்காத்தி வெச்சிட்டு வர்றேன்..." என்றான் அருண்.

"வா, ரெண்டு சாக்லேட் எடுத்துக்கோ. சந்தோஷ சமாச்சாரம். பாண்டிச்சேரீல இருக்கிற ஒரு முதியோர் இல்லத்துக்கு நாம் ஒரு நிதி நாடகம் நடத்தணுமாம். டிக்கட் போட்டு, வசூல் பண்றது எல்லாம் இல்லத்தின் பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு 1500 ரூபாக் கொடுக்கிறேங்றாங்க. நான் ரூபா வேணாம்னேன். கேக்கல. வாங்கிக்கத்தான் வேணும்னு வற்புறுத்தறாங்க. நாமும் இதுவரை பாண்டிச்சேரீல நாடகம் போட்டதில்ல. சரின்னுட்டேன். நீ என்ன சொல்ற?" என்றார் வெங்கு, தையல் மெஷினில் இருந்தபடி. "ரெண்டு டீ அனுப்பு!" என்றார் எதிர்க்கடையைப் பார்த்து.

"சந்தோஷம் தான் குருவே. நாடகம்?..."

"எழுதிட்டேனே! ரெடியா இருக்குது, இட்லிக் கடை இந்துன்னுப் பேரு. ஆனா ஒரு மாசம்தான் டயம் இருக்குது. அதுக்குள்ள ரெடிப் பண்ணணும்."

"கதாநாயகி?..."

"இந்தத் தடவை பாண்டி மீனாட்சி. ஆள் நல்லா இருக்கும். அம்சமாவும் நடிக்கும். ஆனா அவ புருஷன் ஜெகதீஷ் மகா முரடன். அவனை சமாளிக்கறது கஷ்டம். முன் கோபக்காரன். சட்னு கையைத் தூக்கி பட்னு ஒரு அறை விடுவான். அவன் நம்ம இப்ராஹீமுக்கு தோஸ்த். நீ இப்ராஹீமக் கூட்டிக்கிட்டு பாண்டிபோய் வந்திடு.."

அருண் சைகிளில் உடனே கெடில நதிப் பாலம் கடந்து புதுப்பாளையம் மெயின் ரோடு வக்கீல் வீட்டுக்கு வந்தான். அப்போது இப்ராஹீம் வாசல் நடையில் பாய் போட்டு அமர்ந்து "நான் கேட்ட தொகைக்குச் சம்மதம்னாக் கிட்ட வா. இல்ல, வேற வக்கீல் பாத்துக்க" என்று கேஸ் கட்டை தெரு நடைபாதை மீது எறிந்தான்.

"பாய், தொழில் நேரத்துல வந்து தொந்தரவு குடுக்கறதுக்கு மன்னி. நீயும் நானும் உடனே பாண்டி போகணும்.."

"அய்யருப் பய்யன் இப்படிக் கெட்டுப் போறியேன்னு வருத்தமா இருக்கு. அவ்வளவு அவசரமா? வேணும்னா குவாட்டர் பாட்டில் இருக்குது. அவசரத்துக்கு அடி..." என்று காலுக்கடியில் இருந்து ஒரு பாட்டிலை எடுத்தான் இப்ராஹீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அய்யோ பாடகரே, விஷயமே வேற. நீ உடனேக் கிளம்பு சொல்றேன்..."

"அடாடா, உனக்குயோகம் தான் போ. பாண்டி மீனாட்சி கிடைக்கணுமே தொட்டுத் தழுவி ஆனந்தமா காதல் பண்ண? பக்கத்துல சும்மா நடந்துப் போறவன் கூட அவளை ஒரு தடவைக் கட்டி அணைச்சி கிஸ் பண்ணமாட்டமான்னு நினைப்பான். அப்படி ஒரு செமித்தியான உடம்பு..." என்று கதையைக் கட்டினான் இபுராஹீம்.

கடலூரில் இருந்து பாண்டிச்சேரிக்கு பஸ்அய்ந்து நிமிடத்திற்கு ஒன்று. சைகிளில் டபிள்ஸ் ஏறி தலைமை அஞ்சலகம் வந்து நாக கணேஷ் ஆபீசில் சைகிளை விட்டு பஸ் ஏறினர்.

பாண்டியில் ஒரு சந்தில் சைகிள் கடை வைத்திருந்தான் ஜெகதீஷ். நல்ல உயரமும், பருமனுமாக ஒரு காண்டாமிருக முகம். ஒரு கண்ணாடி கறுப்பு, மறு கண்ணாடி வெள்ளை. பைஜாமாவும் முண்டா பனியனுமாக, "வா பாய் வா, ரொம்ப நாள் ஆச்சே பாத்து?" - தங்கப்பல் காட்டிசிரித்தான்.

பாவம். அவனுக்கு ஒரு கண் இல்லை. அங்கே ஆட்டுவிழி வைத்திருக்கிறது என்றான் இப்ராஹீம் ரகசியமாக.

வீட்டினுள் பயங்கர குண்டு, கறுப்பி ஒருத்தி அடுப்பில் ஏகத்திற்குப் புகையைக்கிளப்பி இருந்தாள்.

"பாப்பாவைக் கூப்பிடுங்க..." என்றான் அருண்.

"இதுதான் பாப்பா" என்றான் இப்ராஹீம்.

அய்யோ! இவளா! இவளோடா நான் ஓடி ஆடி டூயட் பாடணும்? மேடை தாங்குமா?

"போய்யா போ. அரிதாரம் பூசி மேடையிலே ஏத்திவிட்டா கருநாவல் பழம் மாதிரி இந்த உடம்பு எப்படி மயக்கும் தெரியுமா? பாண்டி மீனாட்சின்னா படுத்துக் கிடக்கும் கிழவனுக்கும் ஒரு முறை உடம்பு சிலிர்க்கும். சரோஜாதேவி போல பிரமிக்க வைப்பா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காபி சாப்பிட்டுப் போ பாய்!" ஜெகதீஷ் வாசலில் இருந்து குரல் கொடுத்தான்.

"ஆங், ஆங்..." என்ற இபுராகீம் அருகில் சென்று "மீனா, எப்படி கண்ணு இருக்க?" என்று அவள் கன்னத்தை நிமிண்டினான்.

"இருக்கறேன். தினம் ஒரு சூடு வாங்கிக்கிட்டு..." என்று சிரித்தபடி அவள் புடவையையும், பாவாடையையும் விலக்கி சூடுபட்ட தொடையைக் காட்டினாள். அய்யோ, படுபாவி ஜெகதீஷ்!

"இதாம்மாப் பாடம். அட்வான்ஸ் நூறு ரூவா வாங்கிக்க" என்றான் அருண். "நீ தான் என் காதலனா? ஷோக்கா இருக்கியே ராஜா!" என்று அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள் மீனாட்சி. அருகில் தெரிந்த அவளின் கறுப்பு வயிறு கிள்ளத் தூண்டியது. "வந்துட்றேன் கண்ணு. நல்லா நடிச்சுக் குடுக்கறேன்.." என்று சிரித்தாள் வரிசைப் பற்களுடன் ஈறுகளும் சிவப்பாக.

திரும்பிப்போகும்போது தான் மீதி விபரம் சொன்னான் இபுராஹீம். ஜெகதீஷ் புருஷன் தானே தவிர, முடியாதவன். அந்த இயலாமை, அவ்வப்போது அவளை வதைக்கச் சொல்லும். எவனைப் பாத்து சிரிக்கற? எவனை மனசுல நினைச்சிருக்க?...

அவள் நாடகத்தில் நடித்துக் காசு சம்பாதிக்கலாம். மற்றப்படி உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடுவதாக இவனுக்குத் தெரிந்தால் சிகரெட்டால் தொடையில் சூடு வாங்க வேண்டியது தான். ஆனால் இவளும் சமிக்ஞையைப்புரிந்து கொண்டு வருகிறவள் தான். வருகிறவன், ஜெகதீஷை அப்புறப்படுத்தும் உபாயம் தெரிந்தவனாக இருக்க வேண்டும். இல்லையோ ஜெகதீஷிடம் சைகிள் செயின் அடிப்பட வேண்டியதுதான்.

அய்யோ, அப்படியானால் நாடகம் முடிந்த பிறகு நாக கணேஷும், சிவப்பாவும் சைகிள் செயின் அடி வாங்க வேண்டியவர்கள் தானா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்லிக் கடை இந்து சூப்பர் நாடகமாக அமைந்து விட்டது. கதைப்படி பாண்டி மீனாட்சி நவீன பாஞ்சாலி, அவளுக்கு ஏழு கணவர்கள். ஏழு பேருக்கும் திருப்தியான மனைவியாக அவள் எப்படி நடந்துக் கொள்கிறாள் என்பதை நகைச்சுவையாக சித்தரித்திருந்தார் வெங்கு. நல்ல சிரிப்பு நாடகம்.

நாடகம் முடிந்தபிறகு திரை மறைவு நாடகம் ஒன்று ஆரம்பம் ஆயிற்று. பாண்டி மீனாட்சியோடு நடித்த காதல் காட்சிகளால் உண்மையிலேயே உள்ளம் கிறுகிறுத்துப் போயிருந்தான் அருண். தாராளமாக அவளே அவன் மீது விழுந்துப் புரண்டு அவனை சூடேற்றி இருந்தாள். நாடகம் முடிந்த பிறகு அவனே அவளை எப்படியாவது தள்ளிச் சென்று விட நினைத்தான். அதே நினைப்புத்தான்சிவப்பா, நாக கணேஷ் , இப்ராஹீம், கொத்தமல்லிக்கும்.

ஆனால் ஜெகதீஷுக்கு மிக உயர்ந்த ஒயின் பாட்டிலைப் பரிசாக அளித்துவிட்டு அவளை, வெங்கு எங்கோ டெம்போவில் ஏற்றிக் கொண்டு பறந்துவிட்டார். அவரும் மனிதர்தானே!

# இருபத்தி எட்டு

வெங்கு தையல் மெஷினை ஓட்டினார். காலை அசைத்து, கையால் சக்கரத்தை உருட்டி அந்தப் பட்டுத் துணியை ஊசியின் அடியில் செலுத்தி ஜாக்கெட் தைப்பதில் மும்முரமாக இருந்தார். அது அவர் மனைவி சுஷ்மாவுக்கு அவர் தர இருந்த அன்புப் பரிசு. பாண்டிச்சேரியில் மீனாட்சியை ஓர் இரவு முழுவதும் அவர் சந்தோஷமாய்ப் பயன்படுத்தியதை யாரோ சுஷ்மாவிடம் வத்தி வைத்து விட்டார்கள். அவள், கடந்த நான்கு நாட்களாகவே சிடுசிடுக்கிறாள். அவளைத் தாஜா செய்யவே அந்தப் பட்டு ஜாக்கெட்.

"வணக்கம் வாத்தியார்!" நாக கணேஷும் சிவப்பாவும் கடை முன்னால் சைகிள்களில் இருந்து இறங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீட்டுக்குப் போனோம். நீங்க இல்ல. ஞாயிற்றுக்கிழமை கூட லீவு விடாத இந்த கர்மவீரருக்கு கெடிலம் பாலத்து ஆரம்பத்துல ஒரு சிலை வெச்சா என்ன?. . ."

"அது தொழிலாளர் சட்டப்படி குற்றம். வாரத்துல ஒருநாள் லீவு விட்டே ஆகணும். . ." என்று படி ஏறி வந்தான் சிவப்பா "ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு இவ்வளவு சுறுசுறுப்பாக ஜாக்கெட் தைக்கிற டெய்லர்இவர் ஒருத்தர் தாம்பா!..."

"மூணு கப் டீ!" என்று எதிர் கடைக்கு சைகை காட்டினார் வெங்கு. "நான் வாங்கிட்டே வந்துட்றேனே. ." என்று சிவப்பா புறப்பட்டான். இரண்டு இரண்டு பிஸ்கட்களையும் காகிதத்தில் பொதிந்து கொத்தில் மூணு கிளாஸ் டீயையும் எடுத்து வந்தான். "இதுக்கு நான் தான் காசு குடுப்பேன். வாத்தியார் தரக்கூடாது!"

"எங்கே வந்தீங்க பி.எஸ். வீரப்பாவும், எம்என். நம்பியாரும்? ஏதாவது புது நாடகம் போடணுமா?. . ."

பார்த்துக் கொண்டிருந்த தினத்தந்தியை மடித்து வைத்தான் நாககணேஷ். "சும்மாத்தான் கே.ஏ. தங்கவேலுவைப் பாத்துப் பேசிட்டுப் போவம்னு. . ."

"பேசுங்க"

"வாத்தியாரே, வாழ்க்கைன்னா லட்சியம் வேணும். ஒண்ணு பணம் சம்பாதிக்கணும். இல்ல, புகழ் பெறணும். ஒரு ஆசையும் இல்லாம தண்டப் பொழுதுப் போக்கறோம். . ." என்றான் நாகம்.

"இதுவரைக்கும் நம் சாதனை என்ன குருவே?. . ." என்றான் சிவப்பா.

"நீங்களே சொல்லுங்க" என்றார் வெங்கு.

"கடலூர்ல முழுநிலா நாடக மன்றம் பதினைந்து நாடகங்கள் போட்டிருக்கு. இந்த ஊரின் எந்த நாடக மன்றத்திற்கும் இல்லாத பெருமை நமக்குண்டு. நம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNI... 20-8-2001 ...LIBRARY ...YA



நாடகம்னா எள் போட்டா அது தரையிலே விழாத அளவுக் கூட்டம் வரும்..."

"அதுவும் ஓசியில் பாக்க."

"அதைவிடுங்க. முழுநிலா நாடகம்னா நடிப்பு நல்லா இருக்கும்னு ஜனங்க மத்தியிலேப் பேர் ஆயிடிச்சி. வெங்கு திறமையான இயக்குனர்னு ஒரு இமேஜ் உண்டு. ஆனா, நாடகம் முடிஞ்ச மறுநாள் மூணாவது நாள் அடுத்த வாரம் அல்லது எப்பவாவது ஜனங்க நம்ம நாடகம் பத்தி நினைக்கிறாங்களா, பேசறாங்களா?..."

"எவனுக்கு என்ன தெரியும்? எவன் என்னப் பேசிடப் போறான்? எல்லாம் தத்திப் பயலுங்க" என்றார் வெங்கு.

"நீங்க ஒரு அவநம்பிக்கை ஆசாமி வாத்தியார். நம்ம நாடகத்தப் பத்தி மக்களைப் பேச வைக்கணும்..."

"காசு குடுத்து மீட்டிங் பேச வெக்கலாம்கிறீங்க. பண வசதி இல்லையே..."

"அடடா, அப்படி இல்லை. ஜனங்க, அவங்களே இயல்பாப் பேசணும். அப்படி அறிவுப் பூர்வமான நாடகங்களை நடத்தணும். திரும்பத் திரும்ப காதல், மோதல்,பிரச்னை, கல்யாணம் இதானா?"

"அப்படி எல்லாம் நாடகம் போட்டா நாலு பேர் கூட பாக்கமாட்டான். போர், போர்னு எழுந்துப் போயிடுவான்."

"இந்த சமுதாயத்துக்கு ஏதாவது மெசேஜ் சொல்லணும்க. அப்படி இல்லாம ஏதோ நாடகம் போட்டா பத்தோடு பதினொண்ணு, அத்தோட இது ஒண்ணுன்னுப் பூடும்..."

"என்னத்த வெச்சு எழுதணும்கிறீங்க? எல்லா பிரச்னைகளையும் ஏற்கெனவே உள்ள எழுத்தாளர்கள் எழுதித் தீத்துட்டாங்க. வரதட்சணைக் கொடுமை, ஜாதிப் பிரிவினைகள், தீண்டாமை, மாமியார் கொடுமை, வேலை இல்லாத் திண்டாட்டம், லஞ்ச லாவண்யம் எல்லாத்தையும் அரசியல்வாதிகள் நிறையவே மேடை ஏத்திட்டாங்க..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க புஸ்தகங்கள் படிக்கிறதே இல்ல வாத்தியார். லைப்ரரி எந்தப் பக்கம் இருக்குன்னாவது தெரியுமா? ஏதாவதுப் படிச்சாத்தானே புது ஐடியாத் தோணும்?. . ."

"இந்த வாழ்க்கையைப் படிக்கிறேம்பா. . ."

"கிழிச்சீங்க. இப்போ இட்லி இந்துன்னு ஒண்ணு எழுதினீங்க. அதையாவது ஹாஸ்யமா இல்லாம சீரியஸ் நாடகமா எழுதி இருக்கலாம் இல்ல? ஒரு பெண், ஏழுப் பேருக்கு மனைவி, நவீன பாஞ்சாலின்னீங்க. அந்தக் குந்தியும், அவ மருமக திரௌபதியும் ஆண்களால எப்படி எல்லாம் காம வெறியால சிதைக்கப்பட்டாங்க. அவங்க வெளில சொல்ல முடியாம மனசுக்குள்ளயே புழுங்கின வேதனைகள், அதேபோல இன்றைக்கும் பெண்கள் ஆண்களால் போகப் பொருளா மட்டுமே கருதப்படும் நிலை இப்படி எல்லாம் சிந்தனையைக் கிளற வேணாமா?. . ."

அப்போது தெருவில் இரண்டுப் பெண்கள் சுடிதார் உடுத்தி நடந்துப் போனார்கள். நாக கணேஷ் பார்வையால் வெகுதூரம் வழி அனுப்பினான்.

"நம் முன்னேறாததுக்குக் காரணமே நம்மக்கிட்ட புலன் அடக்கம் இல்லாதது தாம்பா. செக்ஸ் உணர்வுலயே அழிஞ்சுப் போறோம். . ." என்றார் வெங்கு. தொடர்ந்து, "நமக்கு யார்பா ஆதரவு குடுக்கறாங்க? நாம் அரசியல்வாதி இல்ல. சினிமா நடிகர்ங்ற ஸ்டார் வேல்யூவும் இல்ல. சென்னையில் இருப்பது போல இந்த ஊர்ல சபாக்களும் இல்ல. டிக்கட் போட்டு வசூல் பண்ண முடியுமா? ஒரு பயலும் காசு கொடுத்து டிக்கட் வாங்கமாட்டான். நாமாவது வாழ்க்கையில் வசதியானவங்களா இருக்கமா? நம் கைக்காசைப் போட்டு நாடகம் நடத்தவும் வழி இல்ல. ஏதோ வருஷத்துல ஒரு நாடகம் போட்டு நம் ஆசையைத் தீத்துக்கறோம். அதுலயும் நமக்கு வருமானம் ஏதாவது உண்டா? ஒவ்வொருத்தருக்கும் ஐநூறு ரூபாய் சொந்தக் காசு நஷ்டம்தான். . ." என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மற்ற மொழிகள்ள நாடகக் கலை எப்படி வளர்ச்சி அடைஞ்சிருக்குன்னு நீங்க ஸ்டடிப் பண்ணலாம். பத்திரிகை நிருபர்களைக் கூப்பிட்டு ஒரு நாடகம் போட்டுக் காட்டி அவங்களை முழுநிலா நாடகம் பத்தி பத்திரிகைகள்ள எழுத வெக்கலாம். ஒண்ணுமே செய்யமாட்டேங்றீங்க. கிழ நோயாளிப் பூனை மாதிரிப் பதுங்கறீங்க. . ."

"சரி, இதை எல்லா நீ செய், பாப்போம்?"

"செஞ்சுக் காமிக்கறேன். செஞ்சுடர் நாடக மன்றம்னு ஆரம்பிக்கப்போறோம். அதை சொல்லத் தான் வந்தோம். . ." என்றான் நாகம்.

"என் வாழ்த்துக்கள் குழந்தைகளா!" என்றார் வெங்கு.

# இருபத்தி ஒன்பது

**ம**ணி பன்னிரெண்டு. உச்சிவெயில் கொளுத்தியது. நாக கணேஷும், சிவப்பாவும் தங்கள் சைகிள்களில் புறப்பட்டனர். வெங்குவுக்கு குட் பை. இவன் உருப்படமாட்டான். நாமாவது இனி முன்னேறும் வழிகளைப் பார்ப்போம். வெங்குவிடமிருந்து விடுபட்டதைக் கொண்டாட ஓர் அய்ஸ்கிரீம் சாப்பிட்டனர் இருவரும்.

கடலூர் பழைய நகர் செல்லும் பாதையில் பிரிந்து சென்றான் சிவப்பா. மஞ்சக் குப்பம் நோக்கி சைகிளை பெடல் செய்தான் நாகம். ஓர் அய்ம்பது வயதுக் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் உள்ள நாடகம் எது? சாணக்கியன்? சே, அதில் சிவப்பா, சந்திரகுப்த மௌரியனாக நடித்துப் பெயர் தட்டிச் சென்று விடுவான். யோசிப்போம்.

வீடு திரும்பினான். சாப்பிட்டு ஈசிசேரில் சாய்ந்தான். உம்? உம்? உம்? ஆ! துள்ளி எழுந்தான். ஒரு பழைய இரும்புப் பெட்டியில் சில நாவல்கள் மஞ்சள் படிந்த காகிதங்களாக. புரட்டினான். 'மந்திரவாதி' எழுதிய மகாபலி மாளிகை. ஏற்கெனவேப் படித்த நாவல்தான். சாய்வு நாற்காலியில் சாய்ந்து மறுபடி படித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பகல் மணி மூணரை. டிபன் வேணாம். காபி போதும் என்று மகளிடம் சொன்னான். முகம் அலம்பி, புறப்பட்டான்.

ஈஸ்வர மூர்த்தி வீட்டில் தான் இருந்தார். டிவியில் ஏதோ மலையாளப்படம்.

"சாருக்கு தொந்தரவுக் குடுக்றேனோ?"

"அதெல்லாம் இல்ல."

"கொஞ்சம் வெளியே போய் வரலாமா?"

அவர் ஸ்கூட்டரை எடுத்தார். நாகம் பின்னால்.

"எங்க ஆபீஸ் பக்கம் ஒரு நாயர் புது கேன்டீன் ஆரம்பிச்சிருக்காரு. ச்சீப் அண்டு பெஸ்ட். அங்கப்போவம்..."

"நாயர், ஸ்வீட் என்ன? காஜா அல்வாவா? ரெண்டு பிளேட் கொண்டா. அப்படியே முந்திரி பகோடா..."

"எதுக்கு சார் இதெல்லாம்? நமக்கு வீடு இருக்கு. வீட்லயே செய்யச் சொல்லலாம்..."

"மூர்த்தி சார், வீடு எங்கே ஓடிடுது? அப்பப்ப இப்படி வெளீலயும் சாப்பிட்டுக்கணும். எடுத்துக்குங்க பாருங்க, காலைல அந்த ஆளுக்கும் எனக்கும் பெரிய சண்டை. எஸ். ஆல்டர்கேஷன், டிபேட், டிஸ்பூட், டிஸ்கஷன் எப்படி வேண்ணா வெச்சுக்குங்க. போய்யா, உன் திக்குக்கே நமஸ்காரம்னு வந்துட்டேன். இனி, மூஞ்சியிலேயே முழிக்கமாட்டேன். ஆமா, தீந்தது கணக்கு."

"யாரு, என்ன சண்டை?"

"அந்த ப்ளடி... அவன் பேரு என்ன, வெங்குவோ, சங்குவோ?"

"எது விஷயமா சண்டை?..."

"அட, உங்க விஷயமாத்தான். உங்க நாடகம் ஒண்ணு அவர் கிட்ட இருக்குது, அடுத்து அதைப்போடணும்னு நா சொல்றேன் முடியாது, தன் நாடகத்தையே தான் மேடை ஏத்தணும்னு அவர் பிடிவாதம். இவரு நாடகங்களைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலூர் ஜனங்க பாத்துப் பாத்து சலிச்சுக் கெடக்கறாங்களே! புது நாடக ஆசிரியர்களை அறிமுகப்படுத்தற நல்ல எண்ணமே கிடையாது. தான், தான், தானேதான். பெரிய சண்டையாப் போட்டுட்டேன். நாங்க சிலபேர் பிரிஞ்சு செஞ்சுடர் நாடகமன்றம்..."

"உங்க கதாசிரியர்?..."

"நீங்கதான். உங்க கதையை எங்க மன்றத்தின் ரெண்டாவது நாடகமா அரங்கேத்தறேன். இப்ப ஒரு உதவி..."

"இதப்பாருங்க, எனக்கு கதை எழுதத் தெரியாது. ஏதோ இங்லீஷ் கதையை காபி அடிச்சு, தமிழ்ல ஒண்ணு எழுதினேன்..."

"உலகத்திலே யார்தான் ஒரிஜினல் எழுத்தாளன்? மந்திரவாதி எழுதின நாவல் கதையைச் சொல்றேன். நீங்க வசனம் எழுதுங்க. அமக்களப்படுத்திடுவோம்..."

"அய்யய்ய! திருச்சி ரேடியோல வேலை பாக்கற மந்திரவாதி தானே? சகிக்காது அவர் கதை எல்லாம். கிழத்தனமான கற்பனை"

"சரி. நான் வேற கதைப் படிச்சிட்டு வந்து உங்களைச் சந்திக்கிறேன். ப்ளீஸ் சார், என் மானத்தக் காப்பாத்தணும்."

ஈஸ்வரமூர்த்தியின் வீட்டில் இருந்து சைகிளில் புறப்பட்ட போது மனதில் எரிச்சல் மண்டியது.மயிராண்டி, அவனவனும்... இந்தக் கதைக்கு என்ன ஓட்டையாம்?

வீடு திரும்பி, தரையில் அமர்ந்து, ட்ரங்க் பெட்டிமீது வைத்து, பேனாவை உதறி, உதறி... என்ன இழவு? யார் பேனா இது? கையெல்லாம் லீக் ஆகி... தலையில் தடவித் தடவி நாற்பது காட்சிகள் திரைக்கதையாக அதேமகாபலிபுர மாளிகைக் கதையையே எழுதி முடித்தான். இரண்டு காட்சிக்கு ஒருமுறை ஒரு ரிடையர்டு ஜட்ஜ் வருகிறார். நாக கணேஷுக்கு ஏற்ற சூப்பர் பாத்திரம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவே மறுபடி ஈஸ்வரமூர்த்தியைப் பார்த்து, "சார் வசனம் மட்டும் எழுதினாப்போதும்" என்றான். அதே கதை தான். அட, கண்றாவியே!

அப்பாடா, கதை ரெடி. சிவப்பா, நீ கோபிக்காத. இதிலும் உனக்கு வேலைக்காரன் வேஷம்தான். யார் மந்திரிசபை அமைச்சாலும்சில பேருக்கு அதே ரெண்டாவது இடம் தான்ங்ற மாதிரி. பாடல் ஆசிரியர்? ஒரு தெரிந்த தமிழ் வாத்தியார் இருந்தார்.புலவர் அய்யா. . .

கதாநாயகி நெல்லிக்குப்பம் கலைமணியின் ஒல்லி உருவம் மனதில் நிழல் ஆடியது. மகளே, மகளே என்று மேடையிலேயே கட்டி அணைக்கலாம். ஜட்ஜின் சம்சாரமாக, பாண்டி ஆல் இண்டியா ரேடியோ நிகழ்ச்சித் தயாரிப்பாளர் காடாத்தூர் தம்பியின் இரண்டாவது மனைவி. அவளும் ரேடியோ நாடக நடிகை. "என் ஆத்துக்காரி உம்ம சம்சாரமா நடிக்கும்போது அதிகம் 'அடி' போடாதீர்" என்றார் காடாத்தூர். "மன்னிமேல் மனசுக்குள்ள ரொம்ப மரியாதை நேக்கு!" என்றான் நாகம்.

கதாநாயகன் மற்றும் உள்ள வேடங்களுக்கு ஆல் இண்டியா ரேடியோ நாடக நடிகர்களே கிடைத்தனர். பாண்டி ஜெகதீஷ், இப்போது சைகிள் கடையை விட்டு விட்டு இசைக்குழு வைத்திருந்தான். அவனே பாடவும் வல்லவன். ஆக இசைக்குழுவும் ரெடி.

முக்கியமான விஷயம் டிக்கட் விற்பனை. டிக்கட்டுகள் எப்படி விற்கும்? யார் தமிழ் நாடகம் பார்க்க ஆவலுடன் டிக்கட் வாங்குவார்கள்? இப்போதுதான் நாக கணேஷுக்கு வெங்கு அடிக்கடி தமிழனின் கலை ஆர்வம் இல்லாத வறட்டுப்போக்குக் குறித்து எரிச்சலுடன் பேசுவது உறைத்தது.

எப்படியாவது வெங்குவின் கண் எதிரே உடனடியாக ஒரு நாடகத்தை அரங்கேற்றிக் காட்டணுமே?

"ஒரு யோசனை சொல்லவா? எங்க ஸ்கூல் பிரின்ஸ்பாலை வந்துப்பாரு. உன் நாடகம் ஜோரா நடக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள் நாக கணேஷின் மூன்றாவது மகள். பார்த்தான். அடுத்த நாளே "ஸ்ரீ கலைமகள்" பள்ளி வளர்ச்சி நிதிக்காக செஞ்சுடர் மன்றம் நடிக்கும் ஒளிபடைத்த கண்ணினாய் வா நாடகம் என்கிற போஸ்டர்கள் ஊர் முழுவதும். ஒரு டிக்கட்விலை ரூபாய் அய்ம்பது. ஒவ்வொரு மாணவ மாணவியரும் தலா ஒரு டிக்கட் வாங்கியே தீர வேண்டும். பெற்றோர்கள் பிரின்சியை சாபமிட்டபடி தண்டம் அழுதனர்.

நாடகக் கொட்டகை நிரம்பி வழிந்தது.

## முப்பது

"**பா**த்தியா அவன்க பண்ண வேலையை? ஏதோ சகிக்காத ஒரு நாடகத்தை அவசரமா அரங்கேத்திட்டானுங்க, இதுல அரங்கம் நிறைந்ததாப் பெருமை. எல்லாம் ஸ்கூல் பசங்க. வயித்தெரிச்சலோடு காசைக்குடுத்துட்டு எப்படா அறுவை முடியும்னு கொட்டாவி விட்டுக் கிடந்ததுங்க..." என்றான் அருண்.

"இதைவிட அற்புத நாடகத்தால் நாம் கடலூர் மகாஜனங்களை அசத்த முடியும்" என்றான் சந்திரன்.

"நம் ஆசிரியரை நம்பினா நடக்காது. ஒரு தீவிர நாடகம் அரங்கேத்துவோம். ஜனங்களைத் திடுக்கிட வெக்கணும். நாடகங்களில் இன்றைய நாட்டு நடப்பை விவரிக்கணும்..."

"அதிலும் பெண்களின் பிரச்னையைத் தொடணும். அதுதான் மக்கள் மனதை உலுக்கும்..."

"அட, திரும்பத் திரும்ப விதவா விவாகம், மாமியார்-மருமகள்..."

"ஊஹூம். நீங்க சொல்றது மேல்தட்டு சமூகம். கொஞ்சம் இறங்கி வாங்க. கூலித் தொழிலாளர் பிரச்னை, பெண்களை போலீஸ் ஸ்டேஷனில் மானபங்கப்படுத்துதல், கொலையைத் தற்கொலைன்னு அறிவிக்கிறது. யாரை வேணா சந்தேகம்கறப் பேர்ல லாக்அப்லத் தள்ளி சித்ரவதை. . ." என்றாள் பொய்யாமொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி, சந்திரனின் ஆபீஸ். மாநிறமாக, சுமாராக, பார்க்கும்படி இருந்தாள். அவளின் ஆபீஸ் கொண்டு செல்லும் பையில் எப்போதும் ஏதாவது ஓர் ஆங்கில நாவல் கிடக்கும். ஒருநாள் தற்செயலாக மேடை நாடகங்களை விமர்சிக்க ஆரம்பித்தாள். பிறகு அதுவே வழக்கம் ஆயிற்று. சந்திக்கும் இடம் அருணின் பட்சணக்கடை வியாபாரம் இல்லாத இரவு ஏழு மணிப் பொழுது.

"நீ தான் ஒரு நாடகம் எழுதேன் பொய்யி"

"எழுதுவேன். ஆனால் காதல், ஆடல், பாடல் எல்லாம் இருக்காதே! ஜனங்க ரசிப்பாங்க. ஆனா உங்களுக்கு நடிக்கப்பிடிக்கணுமே? ஒரு யதார்த்த நாடகம் எழுத ஆசை தான்..."

"எழுது. அப்படி ஒரு நாடகம் போட்டு பாத்தாப் போச்சி. நாடகத்தில் சோதனை முயற்சிகள் தேவைதான்..."

"சரிப்பா. நம்ம குரு ஒத்துப்பாரா?..."

"அவனுங்க சண்டைப் போட்டுப் பிரிஞ்சானுங்க. நாம் சமாதானமாப் பிரிவோம். குருஜி கால்ல விழுந்து ஆசி வாங்கிப்போம். ரெண்டு மூணு நாடகம் நாங்க புதுமையா செஞ்சுப் பாக்க ஆசை, குரு கொஞ்சும் ஒதுங்கி இருங்கன்னுக் கேட்டுப்போம்..."

"நம்ம மன்றத்துக்குப் பெயர்?..."

"உதய காலத்தில் நம் கண்ணில் வானில் படுவது விடிவெள்ளி. சுக்கிரன் நாடக மன்றம்!..."

ஒரு பௌர்ணமி இரவில் வெங்குவோடு பாடலீஸ்வரர் கோவில் பிரகார மண்ணில் அமர்ந்துப் பேசினார்கள்.

பொய்யாமொழி பத்து நாட்களுக்குக் காணாமல் போனாள். இரவெல்லாம் கண் விழித்து நாடகம் எழுதி முடித்தாள். "எங்கே என் கணவன்?" என்பது நாடகத்தின் பெயர்.

முதலில் நாடகப் பிரதியை கலெக்டருக்கும் போலீசுக்கும் அனுப்பி அனுமதி கேட்டார்கள். அனுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்பட்டது என்று போலீஸ் துறை பதில் எழுதியது. போலீசை இழிவுப்படுத்தி இப்படி ஒரு நாடகம் தேவையா?

கம்யூனிஸ்டு பார்டி அலுவலகத்தில் ஒரு வக்கீல் நண்பன் இருந்தான். சந்திரன் அவனைப் பார்க்கச் சென்றான். அங்கே சிவப்பா இருந்தான். “என்ன சந்திரா, உனக்கு என்ன உதவி வேணும்?”

முழு நிலா நாடக மன்றத்தோடு தொடர்பை முறித்துக் கொண்ட இந்தப் பயலோடு எனக்கு என்னப்பேச்சு?

அங்கிருந்த வக்கீல் அஸ்வகோஷ-ும் , வக்கீல் செல்வி நயனதாராவும் நாடக ஸ்கிரிப்டைப் படித்தனர். குட்! உடனே தங்கள் ஸ்கூட்டர்களில் டி.எஸ்.பி அலுவலகம் சென்றனர்.

இதிலே போலீசை இழிவுப்படுத்து வசனம் எங்கே வருகிறது, காட்டுங்கள்?. . .

“வசனம் இல்லை. காட்சிகள். . .”

“நடந்தவை தானே? விசாரணைக்காக சேரியில் இருந்து அழைத்துச் செல்கிறார்கள், இரவில் தூக்கத்தில் எழுப்பி. இரவு முழுவதும் விசாரிக்கிறார்கள். காலையில் அவன் இறந்துவிடுகிறான். கணவனைப் பார்க்க காலையில் வரும் மனைவியிடம், உன் கணவன் வயிற்றுவலியால் தற்கொலை செய்து கொண்டான் என்கிறார்கள். உன்னையும் சோதனைப் போடணும் என்று அவள் புடவையை இழுத்து நிர்வாணம் ஆக்குகிறார்கள். மிருகங்கள் அவள் மீதுப் பாய்ந்து கற்பை சூறையாடுகிறார்கள். செய்வதையும் செய்துவிட்டு அவளை விபச்சாரி என்கிறார்கள். அவள் கதையை மகளிர் மன்றம் எடுத்துக் கொள்கிறது. ஊர்வலம் போய், உண்ணாவிரதம் இருந்து வழக்குத் தொடுத்து, ஈராண்டுக்குப்பின் நீதி ஜெயிக்கிறது. அக்கிரமக்காரர்களை நீதிமன்றம் தண்டிக்கிறது. ஒரு தூய உள்ளம் கொண்ட உத்தமன் அவளுக்கு மறு வாழ்வு கொடுக்கிறான். சுபம். இதில் ஆட்சேபகரமாக என்ன உள்ளது போலீஸ் நண்பர்களே?. . .”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்திற்கு அனுமதிக் கிடைத்தது. சரி. இந்த நாடகத்தை அரங்கேற்ற பணத்திற்கு எங்கே போவது? வக்கீல் நயன தாராவே இதற்கும் யோசனை சொன்னாள்.

குடிசை வாழ் மக்களிடமே இது உங்களின் கதை என்று சொல்லி நபருக்கு இரண்டு ரூபாய் வீதம் வசூல் செய்யப்பட்டது. அந்தப் பகுதியிலேயே இந்த நாடகத்தை அரங்கேற்றினர். நடிகையைத் தனியாகத் தேடிப் போக வேண்டியதில்லை. சற்றே படிப்பு வாசனையுள்ள அப்பகுதிப் பெண்ணொருத்தி கதையைக் கேட்டதும் ஆர்வம் கொண்டு பாதிக்கப்பட்ட பெண்ணா நடிக்க முன் வந்தாள்.

நாடகத்தில் அருணுக்கும், சந்திரனுக்கும் முக்கியத்துவம் இல்லை. வக்கீலாகவும், ஜட்ஜாகவும் சிறு பகுதி. மாதர் சங்கத் தலைவியாகப் பொய்யாமொழி, நாடகத்தில் பெரும் அளவில் வந்தாள். பாதிக்கப்பட்ட பெண், கிழிந்த அழுக்குச் சேலையுடன் அழுது, பதறித் துடித்து பாத்திரமாகவே வாழ்ந்து காட்டினாள்.

மதுரையில் இருந்து சந்திரன் வரவழைத்த புதிய இசைக்குழு பொருத்தமான அதிர்ச்சி ஓசைகளை அவ்வப்போது எழுப்பி ரசிகர்களை காட்சிகளில் ஒன்ற வைத்தது. ரசிகர்கள் அழுதனர். கொந்தளித்தனர். நீதிமன்றத் தீர்ப்பில் கரகோஷம் செய்தனர்.

"நாடகம் வெற்றி!" என்று மேடை ஏறிப் பாராட்டினார் வெங்கு. அவர் கழுத்தில் மாலையிட்டு, "இந்த வெற்றியை எங்கள் குருநாதர் காலில் சமர்ப்பிக்கிறோம்!" என்று பணிந்தனர் அருணும் சந்திரனும்.

## முப்பத்தி ஒன்று

"**சா**ர் வணக்கம்!" என்றார் வெங்கு கையில் எடுத்த அர்ச்சனைத் தட்டைத் திரும்ப வெற்றிலைப் பாக்குக் கடையிலேயே வைத்துக் கும்பிட்டு. யார் என்று புரியாமல் விழித்தான் ஓவியன் தியாகராஜன். "டைரக்டர் சார், வணக்கம். மக்கள் நாடகம் ஒன்று அரங்கேற்றி கடலூர் மாநகரையே ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்குக் கலக்கிட்டீங்களே! ஊர் பூரா உங்களைப் பத்திதான் பேச்சு. வெங்கு சாரால் இப்படியும் ஒரு சமுதாயப் பார்வையுடன் அழுத்தந்திருந்தமாய் எழுத முடியுமான்னுப் பிரமிச்சுப் போயிட்டாங்க போங்க. . ." என்றார் ஈசுவரமூர்த்தியும் கரம் கூப்பி.

திருவகீந்திரத்தில் தேவநாதசுவாமி கோயில் வாசலில் தேங்காய் தட்டு வாங்கும் கடை முன்னால் இப்படி ஒரு சந்திப்பு.

"தேவநாத பெருமாள் தரிசனமா? கோவில் உள்ளே போறீங்களா?" என்றார் மூர்த்தி.

"இல்லீங்க. மலைமேல இருக்கிற ஹயக்ரீவ பெருமாளைப் பாக்கணும். இன்னக்கி பௌர்ணமி புனர்பூச நட்சத்திரம் வேற. ஹயக்ரீவருக்கு வெள்ளை மாலை அணிவிச்சா குழந்தைகளுக்குப் படிப்பு நல்லா வரும். கலைஞர்களுக்கு கலைத் திறமை பொங்கிப் பூரிக்கும். அதான் நான் புனர்பூசத்தன்னிக்கும், பௌர்ணமி அன்னிக்கும் மல்லிப்பூ மாலையோடு மேல இருக்கிறவரைக் கண்டுக்கத் தவர்றது இல்ல. நீங்க எப்படி?. . ." என்றார் வெங்கு.

"எனக்கு இதெல்லாம் ஒண்ணும் தெரியாதுங்க. இதோ இருக்கிறது என் மைத்துனி. அம்ருதேஸ்வரி. டெல்லி வாலி. அவளுக்குத் தெரிஞ்சிருக்குது நம் ஊர் ஹயக்ரீவர் பெருமை. பௌர்ணமி அன்னிக்குத் திருமஞ்சனம் செஞ்சா, நினைச்ச காரியம் நடக்குமாம். கடலூர் வந்து மூணுநாள் ஆச்சு. என்னை அரி அரின்னு அரிச்சுட்டா. அபிஷேகத்துக்குப் பணம் கட்டி இருக்கு. அதான் மலைமேலப் போய் கிட்டிருக்கோம். வாங்க, நீங்களும் எங்களோட சேந்துக்குங்க." என்றார் மூர்த்தி.

திருமஞ்சனம் முடிந்த பிறகு மலை மீதே புல்வெளியில் அமர்ந்துப் பேசினார்கள். அப்போது அமிர்தா பற்றி அதிகம் தெரிந்துக் கொள்ள முடிந்தது.

அம்ருதா டெல்லியில் சி.ஏ. படித்த ஆடிட்டர். கணக்குகளைத் தணிக்கை செய்து ஏராளமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதிக்கிறாள் என்றாலும் அவளுக்கு ஆங்கிலத்தில் கதை, கவிதைகள் எழுதுவதில் ஆத்ம திருப்தி. ஆங்கிலப் பத்திரிகைகளில் அவள் எழுதும் நூல் விமர்சனம், பேட்டிக் கட்டுரைகள், தமிழில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் கதைகள் என்று அவள் தனக்குத் தானே அமைத்துக் கொண்ட சுவாரஸ்யமான உலகத்தில் வாழ்கிறாள். ஒரு மாறுதலுக்காக இரண்டு மாதம் கடலூர் வந்தாள். வந்தவள் வெங்கு பற்றி ஈசுவரமூர்த்தி சொன்னதில் வியப்பு அடைந்தாள். அடடா, ஒரு மாபெரும் கலைஞன் குடத்தில் இட்ட தீபமாக. . இன்று தற்செயலாக அந்த மகா கலைஞனையும் சந்தித்தாயிற்று.

"மிஸ்டர் வெங்கு, இன்று தெருவுக்கு மூன்று கலைஞன். நூற்றுக்கு ஒருவன் கலாமேதை. கலைஞர்கள் ஜனத்தொகை நிரம்ப. அத்தனைப் பேரில் தனியாகத் தெரிபவனே ரசிகர்களின் பாராட்டைப் பெறுகிறான். வித்தியாசமாக எதையாவது செய்து உலகம் நம்மைத் திரும்பிப் பார்க்கச் செய்ய வேண்டும். அதற்காக பிரபல அரசியல் தலைவர்களை சுடுவதற்குத் துப்பாக்கியை எடுக்க வேண்டாம். அது அழிவுப் பாதை. வேண்டாம். ஆக்க பூர்வமாக, நல்ல வழியில். . ." என்றாள் அம்ருதா.

"சொல்லுங்க."

"இங்கிலீஷ் சினிமாப் போல உங்கள் நாடகம் $1^1/_2$ மணி நேரம் நடந்தால் போதும். தரமான கதையை நாடகமாக சுருக்கமாக நடத்தலாம். உலகம் அறிவுப் பாதையில் முன்னேறியபடி இருக்கிறது. உங்கள் கதைகளில் புதுமை வேண்டும். . ."

"மேற்கொண்டு சொல்லுங்க. ."

"தரமான அங்கத்தினர்கள் இருநூறுப்பேர் மட்டுமே நாடகத்திற்கு ஒரே கட்டணம் ரூபாய் நூறு. மூடிய அரங்கினுள் உறுப்பினர்களுக்காக மட்டும் ஒரு நாடகம் பரீட்சார்த்தமாக. ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருநூறுப் பேரை எப்படித் தேட?..."

"அந்தக் கவலை என்னுடையது. சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, கடலூர், விழுப்புரம், பாண்டிச்சேரி ஆடிட்டர்களைச் சந்திப்பேன். அவர்களின் க்ளையன்ட்ஸ் எத்தனையோ பணக்காரர்கள். இருநூறுப் பேர் என்பது சாதாரண விஷயம். நடிக, நடிகையர் பற்றிய கவலையும் வேண்டாம். நடிக்க ஆர்வம் உள்ள, சன்மானம் எதிர் பார்க்காத வசதி உள்ள குடும்பப் பையன்கள், பெண்கள் தேவை என்று தினசரியில் விளம்பரம் கொடுப்பேன். வருகிறவர்களில் நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். சரியா?..."

"நீங்க பெரிய 'சிடி'ல இருக்கிற நல்ல படிப்பாளி. உங்க சிந்தனை சரி இல்லேன்னு சொல்ல முடியுமா?..."

"என் திட்டத்துக்கு சம்மதிச்சீங்கன்னா, வீட்டுக்கு வாங்க. ரெண்டு மூணு கதை வெச்சிருக்கேன். பேசுவோம்..." எழுந்தனர்.

மலை இறங்கி வந்ததும் கெடில நதிப்பக்கம் ஈஸ்வரமூர்த்தி ஏறி வந்த டாக்சி நின்றது. "வாங்க, நீங்களும் கடலூர் தானே போகணும்?..." என்று கார் கதவைத் திறந்து சிரித்து நின்றாள் அம்ருதா. "பெஸ்ட் ஆஃப் லக் வெங்கு. நாடகத்தில் இப்படி சோதனை முயற்சிகள் தேவை தானே? ஸ்டாண்டர்டு தியேட்டர் ஆரம்பிச்சு மூணு நாடகம் நடத்தி கடலூர் ரசிகர்களைத் திக்குமுக்காட வையேன்?" என்று முதுகில் தட்டினான் தியாகு.

மறுநாள் முதல் பத்து நாட்களுக்கு வெங்குவின் தையல் கடை பூட்டிக் கிடந்தது. ஈஸ்வரமூர்த்தியின் வீட்டில் மூடிய அறையில் உட்புறம் மின் விளக்கு எரிய, விசிறிகள் சுழல வெங்கு மூன்று புதிய நாடகங்கள் எழுதினார். கதை உபயம் அம்ருதா. இருதய மாற்று அறுவை சிகிச்சைக் கதை ஒன்று. இறந்த நல்லவனின் இதயம், கொடூரம் ஆனவனுக்குப் பொருத்தப்படுகிறது... இரண்டாவது கதை க்ளோனிங் முறையில் ஆண் பெண் உற்பத்தி. ஒரிஜினலும், டூப்ளிகேட்டும் இடம் மாற்றிக் கொள்கிறார்கள். ஒரிஜினல் காதலன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டூப்ளிகேட் காதலி இருவரும் காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். அதே போல டூப்ளிகேட் காதலன் - ஒரிஜனல் காதலி மயக்கத்தில் ஆழ்கிறார்கள். காலம் செல்ல யார் ஒரிஜினல், யார் டூப்ளிகேட் ஒரே குழப்பம். ஒன்றை மற்றது கொன்றுவிட . . . மூன்றாவது கதை வெடிகுண்டு கலாச்சாரம். வெடிகுண்டு வைத்தே பழகிவிட்ட ஒருவன், காதல் வசப்பட்டு, தலைவனால் காதலியின் வீட்டிற்கும் குண்டு வைக்க உத்தரவிடப்பட . .

கதைகள் திருப்தியாக அமைந்துவிட்டன. நடிகர்கள் தேர்வும் பாண்டிச்சேரி ஒன்றில் வைத்து முடிவாயிற்று. புதுப்பாளையம் மெயின் ரோடு ஆடிட்டர் ஒருவர் நாடக ஒத்திகைக்குத் தன் வீட்டைக் கொடுத்து உதவினார். வெங்கு பயிற்சி கொடுத்தார். சீன்கள் மட்டும் தியாகராஜனே எழுதினான். சென்னையில் இருந்து இசைக்குழு வரவழைக்கப் பட்டது. பாட்டு ஏதும் கிடையாது. அவ்வப்போது இசைக்கருவிகள் ஒலி மட்டுமே.

கடலூர் மக்கள் ஒருநாள் தினசரியில், 'கடலூரில் 3 நாட்களுக்கு கிராண்ட் நாடக விருந்து, 200 உறுப்பினர் களுக்கு மட்டும், தினசரி கட்டணம் ரூ 100. இயக்கம் (திருப்பாதிரிப்) புலியூர் வெங்கு' என்கிற விளம்பரத்தைக் கண்டு திகைத்தனர். பத்திரிகை நிருபர்கள், கலெக்டர், ஜட்ஜ். டி.எஸ்.பி மட்டும் மூடிய ஒரு திரை அரங்கினுள் முன் வரிசையில் இலவசமாக அனுமதிக்கப்பட்டனர்.

எல்லாத் தினசரிகளும் விமர்சனத்தில் வெங்குவைப் புகழ்ந்து எழுதின. டெல்லிப் பத்திரிகைகளுக்கு அம்ருதா வெங்குவின் புகைப்படங்களை அனுப்பினாள். "நம்ம குரு எங்கயோப் போயிட்டார்பா!" என்றனர் அருணும், சந்திரனும்.

## முப்பத்தி இரண்டு

நியூ சினிமா எதிரே கெடிலம் பால இறக்கத்தில் லாலா கடையில் சோன்பப்டியும், காராசேவும் வாங்கினான் கொத்தமல்லி. பையில் ஒரு மல்லிகைச் சரப் பந்து வைத்திருந்தான். சைகிளில் ஏறி வீடு நோக்கிப் புறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இனிப்பும், காரமும், பூப்பொட்டலமும் மருதாணியின் மனத் துயரை மாற்றப் போதுமானதா என்று தெரியவில்லை. உடனடியாக தம்பதிகள் இருவரும் ஒரு தமிழ் சினிமா பார்க்கவும் கிளம்பிச் செல்வதாகத் திட்டமிட்டிருந்தனர். கொத்தமல்லிக்கும், மருதாணிக்கும் காதல் திருமணம் முடிந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. காலப்போக்கில் அவன் பஸ் கழுவும் பணியாளில் இருந்து ப்யூன் ஆகி, அட்டெண்டர் பதவி உயர்வும் பெற்றிருந்தான். ஆண் ஒன்று, பெண் ஒன்று குழந்தையும் பிறந்தாயிற்று. அவ்வப்போது அவன் பல மேடை நாடகங்களில் நடிப்பதையும் விட்டு விடவில்லை. அவனைப் பொறுத்தவரை வாழ்க்கை அமைதியாகவே சென்றது.

மருதாணியின் மனத்துயர் தான் ஆற்ற முடியாததாக இருந்தது. ஆண்டுகள் பத்து கடந்தாலும்அவளை அவளின் பெற்றோர் மன்னிப்பதாக இல்லை. அவள் வீட்டவர்கள் எவருமே அவளை வந்துப் பார்க்கவில்லை. சுத்தமாகக் கை கழுவிவிட்டனர். அதுமட்டும் அல்ல. தம்பிக்கு, தங்கைக்குத் திருமணம் ஆயிற்று. தபாலிலாவது ஒரு பத்திரிகை? ஊஹும். பக்கத்து வீட்டில் ஒருவரை அழைக்க வந்த இவளின் அப்பா, வீட்டு வாசலில் இடுப்பில் குழந்தையோடு இவள் நின்றதைப் பொருட்படுத்தவே இல்லை. இவள் பக்கமே திரும்பாமல் காரில் ஏறிப் போய்விட்டார்.

இன்று மருதாணியின் கடைசி தம்பிக்குத் திருமணம். வீட்டில் நடக்கும் மூன்றாவது கல்யாணம். இதற்கும் கொத்தமல்லி தம்பதிக்கு அழைப்பு இல்லை. "இப்படி எப்படிங்க கல்நெஞ்சோட நடந்துக்றாங்க? என் அம்மாவுக்குக் கூடவா என்னைப் பற்றின நினைப்பு இருக்காது?" என்று குமுறி அழுதாள் மருதாணி. "இந்த உலகில் நான்தான் உனக்கு எல்லாமே" என்றான் கொத்தமல்லி.

காலையில் சொன்னபடி மருதாணி சலவைப்புடவை உடுத்தி தயாராக இருந்தாள். குழந்தைகளும். அவளின் கூந்தலில் பூச்சரத்தைச் சூட்டிய கொத்தமல்லி, ஸ்வீட், காரப் பொட்டலங்களைப் பிரித்து வைத்தான். "இது தான் உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி கல்யாண பட்சணம் எடுத்துக்கோ. சந்தோஷமாப் புறப்படு. எதையும் நினைக்காத. நல்ல சினிமாப்பாத்து கவலையை மறப்போம்..."

சினிமாவிலும்மருதாணியின் மனம் லயிக்கவில்லை. முகம் வாடியே இருந்தது.

வீடு திரும்பிய கொத்தமல்லி தீர்மானமாகக் கேட்டான்: "அவங்களோ நம்மை சொப்பனத்திலும் நினைப்பதாக இல்லை. சரி, என்ன செய்யலாம், சொல்லு. நான் செய்யறேன்..."

"இந்த ஊர்லயே நாம் இருக்க வேண்டாம்க. சென்னைக்கு மாற்றிப் போயிடுவோம்..."

கொத்தமல்லிக்கும் இது பிடித்தது. கேரளத்திலும், ஆந்திரத்திலும், கர்நாடகாவிலும் எப்படியோ? ஒரு தமிழ் கலைஞனின் தலைவிதி, அவன் முன்னேற வேண்டுமானால் கடலூர் மாதிரி சிறிய ஊரில் இருந்தால் முடியவே முடியாது. சென்னைக்குப் பெயர வேண்டியதுதான்.

ஆக, கொத்தமல்லி, குடும்பத்துடன் சென்னை வந்தும் ஆறுமாதம் ஆயிற்று. சென்னையின் பரபரப்பான வாழ்க்கை மருதாணிக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆனால் கொத்தமல்லியின் கலை அரிப்புத் தீர் என்ன வழி?

சென்னையில் ஆங்காங்கே நடந்த மேடை நாடகங்கள் வெறும் சிரிப்புத் தோரணங்களாக இருப்பதில் வெறுப்பு அடைந்தான். ஜனங்கள் எப்படி இதை எல்லாம் ரசித்துக் கை தட்டுகிறார்கள்? ஆரவாரம் செய்கிறார்கள்? கதையில் ஆழம் இல்லை. நடிப்பும் பாராட்டும்படி இல்லை. சென்னை மாநகரமே, உன் ரசனை இவ்வளவுதானா? மூன்றாம் தர நாடகங் களுக்குத்தான் உன் ஆதரவா!

தொலைக்காட்சி நாடகங்களில் நுழைய நினைத்தால் யார் சிபாரிசைப் பிடிப்பது என்று தெரியவில்லை. நிலைய நிகழ்ச்சிக்குத் தயாரிப்பாளர்கள் தங்களை தெய்வமாகவே கருதி தலைக்கனத்துடன் நடப்பவர்களாம். அவர்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கவே முடியாதாம். டி.வியில் வாய்ப்புப் பெறுவது என்பதே தனிக் கலையாம். நடையாய் நடந்து, துதிபாடி, அண்ணா, அண்ணா, நீங்க மனசுவெச்சா. . . இதெல்லாம் நமக்கு ஒத்துவராது. நாடக ஆசையை மூட்டை கட்டி வைத்து மருதாணியின் நல்ல கணவனாக, குழந்தைகளுக்குப் பொறுப்புள்ள தகப்பனாக, இன்று சாப்பிட்டோமா, தூங்கினோமா, இன்றையப் பொழுது கழிந்ததா சரி. கலைவாணியின் அருள் இருந்தால் மட்டும் போதுமா? அதிர்ஷ்டமும் வேணும் அய்யா!. . .

ஒருநாள் பக்கப் பகுதிக் குடியிருப்பில் இருந்து ஒரு சிறுவன் வந்து "அப்பா, திருப்பதி லட்டு கொடுத்து வரச் சொன்னாங்க. . ." என்றான். "நன்றி அய்யா. தாங்கள் எங்கே பணிபுரிகிறீர்கள் என்று சொல்லலாமா?. . ." எவர்சில்வர் கிண்ணத்தைத் திருப்பச் சென்ற கொத்தமல்லியின் விசாரிப்பு.

"எங்க பிழைப்பும் ஒரு பிழைப்புங்களா? மேஸ்திரியா, கொத்தனாரா, சித்தாளா காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கோம் சினிமாக்காரங்க பகுதியிலே. .."

"அண்ணே, இதுதாங்க எங்க பரம்பரைத் தொழில். இது எனக்கு ரொம்பப் பிடிக்கும். நானும் சுண்ணாம்பு அடிக்க அப்பப்ப உங்க கூட வரேன். என்னையும் கூட்டிப் போங்க அண்ணே..." என்று அவரின் கைகளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான் கொத்தமல்லி.

ஓர் ஆண்டு சித்தாளாக, சினிமாக்காரர்கள் வீட்டுச் சுவர்களில் சுண்ணாம்பு அடித்தான் கொத்தமல்லி. வீட்டுப் பெண்களிடம் நகைச்சுவை பேசி சிரிக்கவைத்தான். ஒரு பிரபல சினிமா இயக்குநர் ஜுரம் என்று இரு வாரங்களுக்கு ஸ்டுடியோப் பக்கம் செல்லாமல் வீட்டிலேயே இருந்தார். அப்போது கொத்தமல்லி, மருந்துக் கடைக்குச் சென்று மருந்துகளும் வாங்கி வந்தான். எஜமானியிடம் ஜோக் அடித்து குலுங்கக் குலுங்க சிரிக்க அடித்தான். உதவி இயக்குனருக்கு ஃபோன் பண்ணியும் அவர் வந்த பாடில்லை. இயக்குநருக்கு புதிய திரைக்கதை எழுதும் மூடு வந்தாயிற்று. அய்யோ, நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் டிக்டேஷனை இந்த நேரம் எழுத ஆள் இல்லையே. . .

பேப்பரும், பேனாவுமாக டைரக்டரின் கட்டில் காலடியில் தரையில் பவ்யமாக வந்து அமர்கிறான் கொத்தமல்லி. "சொல்லுங்க அய்யா, நான் எழுதறேன். . ."

"மீனாட்சி! எவனோ சித்தாளும், வெத்தாளும் என்னை இப்படி நெருங்கிப் பேச நீ எப்படி அனுமதிக்கலாம்? இவனுக்கு எல்லாம் என்ன தெரியும் கலை உலக மேன்மை? போகச் சொல்லு இந்த ஆளை வெளியே!. . ." இயக்குனர் சிம்மம் உறுமியது.

"அடடா, என்னங்க இந்த தம்பியைச் சாதாரணமா நினைச்சுட்டீங்க? அடேயப்பா, என்ன தமாஷ் பேசுது" என்று திருமதி சிபாரிசுக்கு வந்தாள்.

கடலூர் முழுநிலா நாடகம், தன் காமெடி நடிப்பு, பத்து வருட அனுபவம் பற்றிச் சொல்ல கொத்தமல்லிக்கு அருமையான வாய்ப்பு. . .

"அடப்பாவி, நீ ஏன் சுண்ணாம்பு அடிக்கணும்?" சினிமா டைரக்டருக்கு வியப்பு.

"பின்ன உங்க தரிசனம் கிடைக்கும்களா? பிச்சைக்காரன் கணக்கா உங்க பி.ஏ. விரட்டி அடிப்பாரே!. . ."

இயக்குநர் முகம் மலர்ந்தார். சரி, தமிழ்த் திரைவானுக்கு ஒருபுதிய சிரிப்பு நடிகன் கிடைத்துவிட்டான்!

## முப்பத்தி மூன்று

இப்ராஹீம், பேனாவை மூடி வைத்து, வெற்றிலைப் பொட்டலத்தைப் பிரித்தான். "சலாம்!" என்றபடி எதிரில் வந்து அமர்ந்தார் மிகவும் கன சரீரியான ஒரு முஸ்லீம் பெரியவர். "வாங்க. எந்த ஊரு? என்ன கேசு?" என்றான் இப்ராஹீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேஸ் இல்ல. உங்க நிக்காஹ் விஷயம் பேச வந்தோம்... பரங்கிப்பேட்டையில் இருந்து வரோம்..." என்று குல்லாவைக் கழற்றி மடியில் வைத்துக் கொண்டார் பெரியவர்.

"அண்ணனைப் பாத்துப் பேசுங்க."

"அவர்கிட்டப் பேசி எல்லாம் முடிவுப் பண்ணி ஆச்சு. அவரு இன்னி மத்தியானம் உங்ககிட்டப் பேசுவாரு. போறபோது உங்களைப் பாத்துட்டுப் போக எண்ணி.."

"வாங்க, சேது ஓட்டல்ல நாஷ்டாப் பண்ணிட்டுப் போவீங்க. .." என்று எழுந்தான் இப்ராஹீம்.

"வேணாம். இப்பத்தான் அண்ணன் டிபன் வாங்கிக் குடுத்தாரு. நாங்க கிளம்பறோம்..." பெரியவர் புறப்பட்டார்.

இப்ராஹீமுக்கு அண்ணன் மீது கோபம் வந்தது. இந்தப் பெரியவர் வந்த உடனே தம்பியையும் அழைத்து அல்லவா திருமண விஷயங்கள் பேசி இருக்க வேண்டும்? இப்போதும் இந்தப் பெரியவர் வந்து சொல்லித்தானே தெரிகிறது? இருக்கட்டும். அண்ணனாக வந்து சொல்லாத வரை நாமாக அவரைத் தேடிப் போகக்கூடாது.

"தம்பீ. . ." - என்று அழைத்தபடி அண்ணியே வந்துநின்றாள். "முபாரக்! உனக்கு கல்யாணம்பா. அண்ணன் உன்னை உடனே கையோடு இட்டாரச் சொன்னாரு.."

"நீங்க ஏன் அண்ணி வந்தீங்க?..." என்று பதறி எழுந்தான். இப்ராஹீம். "வாங்கபோவாம்..." தெருவில் நின்றிருந்த சைகிள் ரிக்ஷாவில் அண்ணியை ஏற்றி, தான் சைகிளில் ஏறினான்.

"வாடா தம்பி, பரங்கிப்பேட்டை இஸ்மாயில் சாகேப் வந்தாரு. அவர் மூத்தப் பொண்ணு ஜமீலாவை உனக்குக் கட்டிக் குடுக்கறதுப் பத்திப் பேசினோம். அவர் போட்றதா சொல்லும் பவுன்,மத்த சீர் வரிசை விஷயம் எல்லாம் திருப்தியா இருக்குது. ஒத்துக்கலாம் இல்ல? நாளை நானும், அண்ணியும் பரங்கிப் பேட்டை போய் அவர் வீட்டு நிலவரம் எல்லாம் பாத்துட்டு வந்திட்றோம்.." என்றார் அண்ணன், தம்பி உட்கார பாய் எடுத்துப்போட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப கல்யாணத்துக்கு என்ன அண்ணா அவசரம்?"

"இப்ராஹீம், கல்யாணம் ஆகாதப் பையன் கட்டுப் பாடா இருக்கணும். நீ அப்படி இல்லன்னுக் கேள்விப் பட்றேன். வேணாம், கண்டபடி அலையாத. கல்யாணம் பண்ணிக்கிட்டு கௌரவமா இரு. உனக்கு 35 வயசு ஆவுது. இன்னும் எவ்வளவு வயசு ஆகணும்கற?" என்றார் அண்ணன் கண்டிப்புடன்.

தான் லாட்ஜுக்குப் போவது அண்ணனுக்குத் தெரியாது என்று நினைத்திருந்தான் இப்ராஹீம். அவர் அப்படிப் பேசியதில் வெட்கமுற்றான். "சரி அண்ணா."

"தம்பி, பொண்ணு நல்லசிவப்பா, அழகா இருக்குமாம். உயரமும் உன் காதளவு வருமாம். இஸ்மாயில் ஏற்கெனவே உன்னை வக்கீல் வீட்டு வாசல்லப் பாத்திருக்காராம். ஜோடிப் பொருத்தம் பிரமாதமா இருக்கும்கறாரு. அப்புறம் தயக்கம் என்ன? இப்படி ஒரு பெண்சாதி வந்தா உனக்குக் கசக்குதாக்கும்!" என்று கிண்டலில் இறங்கினாள் அண்ணி.

"போங்க அண்ணி" என்று வெட்கப்பட்டான் இப்ராஹீம். ஆனாலும் அவன் மனம் ஜமீலாவைக் கற்பனையில் காணத் துவங்கிவிட்டது.

முழுநிலா நாடகமன்றம், செஞ்சுடர் நாடகம் மற்றும்அருண்-சந்திரன்கோஷ்டிக்குப் பத்திரிகை வைத்தான் இப்ராஹீம். "பாயி, உன் கல்யாணத்துல நீயே பாட ஆரம்பிச்சுடாத..." என்று கேலி செய்தான் நாகு கணேஷ்.

பரங்கிப் பேட்டைக்கு முழுநிலா நாடக மன்றத்தினர் எல்லோரும் சென்றனர். ஆர்மோனியக்காரனும், தபேலாக்காரனும் தங்கள் வாத்தியத்துடன் சென்றனர். மாப்பிள்ளை இப்ராஹீம் நன்றாகப்பாடுவான் ஏன்று யாரோ பெண் வீட்டாரிடம் சொல்லிவிட, "பாட்டு, பாட்டு" என்று சம்பந்தி வீட்டுப் பெண்கள் நச்சரிக்கத் தொடங்கிவிட்டனர். "நாங்க எங்க வாத்தியங்களோடு வந்தது வசதியாப் போச்சு பாரு" என்றனர் இப்ராஹீமின் வாத்தியக் கோஷ்டியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ராஹீம் பாடினான் ஒரு மணி நேரம். விசில் ஒலியும் கரவொலியும் பலத்தது. பிறகு பெண் வீட்டார் பக்க வாத்தியங்கள் கொண்டு வந்து வைத்தனர்.

"இது எதுக்கு?"

"எங்கப் பொண்ணுப் பாட்றத நீங்க கேக்க வேணாமா?"

ஜமீலாவும் ஒரு மணி நேரம் பாடினாள். இனிய குரல். கூட்டம் மெய்மறந்து கேட்டது. இப்ராஹீம் பிரமித்தான். இசைத்தட்டுப்பாடுகிறதா, ஜமீலாவா!

"பாய், ஆண்டவன் சரியான ஜோடி சேர்த்திருக்கான்..." என்று வெங்கு இப்ராஹீமிடம் கை குலுக்கினார்.

திருமணம் முடிந்ததும் இப்ராஹீம் நாகூர், நாகப் பட்டினம், மதுரை, காயல்பட்டினம் என்று மனைவியோடு ஒரு வாரம் சுற்றி விட்டு வந்தான். பிறகும் குடிசையைக் கல்வீடாகக் கட்ட முனைந்தான். மூன்று மாதங்கள் ஆகட்டும் என்று நண்பர்களும் விட்டு வைத்தனர். "புது மாப்பிள்ளைக்குத் தொந்தரவு கூடாது!"

பிறகு வந்தனர். கலை மாளிகை என்று ஒரு குடிசையை அப்படியே விட்டு வைத்திருந்தான் இப்ராஹீம். அங்கே பழையபடி ஹார்மோனியமும், தபேலாவும் முழங்கின. பாட்டுப்புத்தக ஃபைலைப் பிரித்து லேலல்லல்லலேலலே. . . என்றான் இப்ராஹீம்.

"டீ சாப்பிடுங்க. . ." சிரித்தபடி ஜமீலா டீட்ரே ஏந்தி வந்தாள்.

"அண்ணியார் பாடணும்!"

ஜமீலா தயங்க, "உம்!" என்றான் இப்ராஹீம்.

ஜமீலா மூன்று பாட்டுகள் பாடினாள் பக்க வாத்தியங்கள் முழங்க.

"ஃபர்ஸ்ட் கிளாஸ்! இனி அண்ணியாரும் எங்க கூட நாடகங்கள்ளப் பாட வரலாம்!. ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செருப்பால அடி! யாரைப் பாத்து என்ன வார்த்தைடா சொல்ற? இதெல்லாம் குடும்பப் பெண்கள் செய்யற காரியமா? வாயைக் கழுவுடா பெட்டால் விட்டு!" - எரிந்து விழுந்தான் இப்ராஹீம்.

"அப்படின்னா, நாடகத்துல பாட்றவங்க நடத்தை கெட்டவங்களா?..."

"ஆமா அப்படித்தான்!"

ஆர்மோனியக்காரனும் தபேலாக்காரனும் உடனே எழுந்தனர். தங்கள் வாத்தியங்களோடு புறப்பட்டனர் புண்பட்ட மனதோடு.

அடுத்து அடுத்துஞாயிற்றுக்கிழமைகள் வந்தன. ஆனால் அவர்கள் வரவில்லை. வேறு இசைக்குழுவில் சேர்ந்தனர்.

காலப் போக்கில் இப்ராஹீம் பாடுவதையே விட்டுவிட்டான். இரண்டு குழந்தைகள். தொப்பையும், பெரும் உடம்புமாக வக்கீல் குமாஸ்தாவாகவே காலம் தள்ளினான்.

## முப்பத்தி நான்கு

"அடேயப்பா, நம் குருநாதரை ஜெயிக்க யாராலப்பா முடியும்? நாடக உலகில் அவர் ஒரு சிங்கம்கறதை நிரூபிச்சுட்டாரே! அவரின் சிஷ்யர்கள் நாம்கறது எவ்வளவுப் பெருமையான விஷயம்!" என்றான் அருண் தரம் நாடகக் குழுவின் மூன்று நாடக ஆல்பங்களையும் புரட்டி முடித்து.

"சரிப்பா. அந்த மூன்று நாடகங்கள்ள ஒண்ணைப் பாக்கறதுக்குக் கூட நமக்கு அழைப்பு இல்லையே! அதை நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்குது. நம்மளையும் நாக கணேஷ், சிவப்பா மாதிரி துஷ்டப்பயல்களா நினைச் சுட்டாரே வெங்கு?" என்றான் சந்திரன்.

"அப்படிச் சொல்லக்கூடாது. 200 உறுப்பினர்கள். ஒவ்வொரு நாடகத்திற்கும் டிக்கட் கட்டணம் ரூ 100ன்னாங்க. நம்மால 100ரூபா செலவழிக்க முடியாதா? நம்ம வெங்கு சாருக்காக, நாம் 300 ரூபா செலவுப் பண்ணி இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாஜி மன்ற செலவு 1000 ரூபான்னாலும் செய்யலையா? கோட்டை விட்டுட்டம்..." என்றாள் பொய்யாமொழி.

"அப்புறம் ஏம்பா அவர் ஒரு நாடகமும் போடல? வருஷம் மூணு ஆச்சு. தையல் மெஷினை அமைதியா ஓட்றாரே...?"

"அந்த வெற்றியே போதும்னு மனசுக்குள்ள பழைய நினைவுகளை அசைப்போட்டுக்கிட்டிருக்கார். சில எழுத்தாளர்கள் ஏதாவது இலக்கியப் போட்டியில் பரிசு கிடைச்சதும் எழுதுவதையே நிறுத்திடுவாங்க. அந்த மாதிரி..."

"அட, நாமளும் தான் சுக்கிரன் நாடக மன்றம் துவங்கி, மூணு நாடகம் மேடை ஏற்றினோம். அப்புறம் ஓஞ்சுட்டமே?..."

"நம்ம சாதனையையும் ஒண்ணும் குறைச்சி மதிப்பிட முடியாது. போலீஸ் ஸ்டேஷன் கற்பழிப்புகள் பற்றி, கீழ் வெண்மணியில் கீழ்த்தட்டு மக்கள் மேல் சாதியினரால் உயிரோடு கொளுத்தப்பட்டது பற்றி, ஆட்டோசங்கர், சந்தன வீரப்பனை எல்லாம் சில பத்திரிகைகள் பெரிய ஹீரோக்களாக வழிபடும் மர்மம் பற்றி எல்லாம் நாடகம் நடத்தி கடலூர் நகர மக்களை வாய் ஓயாமல் பேச வைத்தோமே?..."

"பிறகு? நாம் ஏன் தொடரவில்லை?..."

"நம் கதாசிரியை பொய்யாமொழி அவர்கள் ஏனோ பேனாவை மூடி வைத்துவிட்டார்கள்..." என்று பொய்யா மொழியின் துணி மூடாத புஜத்தில் கிள்ளினான் சந்திரன்.

"அய்யோ, என்ன தொந்தரவு! கடலூர் மகா ஜனங்கள் நம் நாடகங்கள் பற்றி நல்ல விதமாகவோ, தப்பாகவோ எதுவுமே வாய் திறப்பதில்லை என்கிற எரிச்சல் தான் காரணம். கண் இரண்டும் இல்லார் முன் ஓவியம் வைத்தார், இருகாது இல்லார் முன் கானம் இசைத்தார்னு இந்த மக்கள் வெறும் மக்குகள்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானால் தங்கள் நோக்கம் பாராட்டுப் பெறுவதுதான். சமுதாய சீர்திருத்தம் அல்ல?. . ." என்றபடி சந்திரன், கீழே விழுந்துவிட்ட அவளின் சல்லாத் துணியை எடுத்து அவள் மார்பின் மீது போர்த்தும் சாக்கில் -

"ஏய்!" என்று அவனைத் தள்ளிவிட முயன்ற பொய்யா மொழி சூடிதார் அணிந்தவள் தடுமாறி, கால்களைப் பரத்திக் கொண்டு மல்லாந்து விழுந்தாள். "பார்த்து, பார்த்து" என்று அவளைத் தாங்கிக் கொண்டான் சந்திரன்.

இதுபோன்ற காதல் காட்சிகளைப் பார்த்ததில் அருணின் உடல் சூடேறியது. இந்த பொய்யாமொழி ஏன் இப்படி கொய்யாக்கனிகளை ஒழுங்காக மூடுவதில்லை? பிறகு, இந்த ஆண்களே மோசம் என்று சிணுங்குவார்கள். நீங்க தாண்டி படு மோசம்.

"அடடா, மறந்தே போனேன். இன்று எனக்கு ஒரு ஃபைனல் ரிகர்சல் இருக்கு, புறப்பட்றேம்பா" என்று அருண் எழுந்தான்.

மூன்று வருடங்கள் ஆயின முழுநிலா நாடக மன்றம் ஒரு நாடகம் மேடை ஏற்றி. வெங்கு அமைதியாக இருந்தார். நாக கணேஷும், சிவப்பாவும் இரண்டு நாடகங்கள் நடத்தியதோடு சரி, அருணால் சும்மா இருக்க முடியவில்லை. ஏதாவது நாடகக்குழுவில் இணைந்து அரிதாரம் பூசிக் கொள்ளத் துடித்தான்.

உள்ளூர் நாடகக்காரர்கள் இவனை ஏற்றுக் கொண்டனர். ஆனால் கதாநாயகனாக அல்ல. அங்கே ஏற்கெனவே கதாநாயகர்கள் இருந்தனர். இவனுக்கு இரண்டாவது கதாநாயகன் அல்லது வில்லன் வேடம் தான் கொடுத்தார்கள். ஆனால் நூறுரூபாய் சன்மானமும் உண்டு. ஒன்றும் இல்லாததற்கு ஏதோ ஒன்று,

அருணைப் பார்த்ததும் நாடக மன்றத்தினர் "வாங்க, சரியான நேரத்துக்கு வந்தீங்க. இப்ப உங்க சீன்தான். வசனத்தை நெட்டுருப் பண்ணி ஆச்சு இல்ல. . ." என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகியை வில்லன் கற்பழிக்கும் சீன். சற்று முன்புதான் அருண், பொய்யாமொழியின் எடுப்பான தேகத்தில் சந்திரன் குறும்புகள் செய்வதைப் பார்த்திருந்தான். உள்ளம் ஒரு மாதிரி பரபரத்தது. "அடியேய்! உன்னை சின்னா பின்னம் ஆக்காமவிடமாட்டேண்டி!" என்று பாய்ந்து கதாநாயகியை இறுகத் தழுவினான். அவளின் கனத்த உதடுகளில், தன்னை மறந்து 'பொச், பொச்' என்று முத்தங்களும் தந்துவிட்டான். போச்சு, போச்சு!

"உடுய்யா, உடு! சரியான காட்டானா இருக்கியே? மூச்சுத் திணறுதுய்யா, அட, உடுன்னா!" கதாநாயகி திமிறி, உதறி, விடுவித்துக் கொண்டாள். "இந்த ஆளை எல்லாம் எவன்யா நாடகத்துல சேத்தது? இப்பவே என்னை கர்ப்பம் ஆக்கிடுவான் போல!"

கதாநாயகியின் கணவன் தான் அந்தக் கதையின் நாயகன். அவன் பட்டை சாராயம் குடித்து ஏற்கெனவே 'மூடில்' இருந்தான் முன்பே சிவந்த கண்கள் மேலும் சிவக்க, "டாய்!" என்று தலை சிலிர்த்து அவன் அருண் மீதுப் பாய்ந்தான்.

"கலை உலக காலிப் பசங்களை நாம் விட்டு வெக்கக்கூடாது. காலிப்பண்ண வேண்டியதுதான். . ." என்று இன்னொருவன் பாய்ந்து அருணின் தலைமுடியைப் பற்றி சுவரில் மோதினான். கன்னத்தில் அறைந்தான் வேறொருவன். எட்டி உதைத்தான் இன்னொருவன். நிறையப்பேர் பாய்ந்து அடித்தனர். "சாவ அடிச்சிருவோம்டா மவனே!"

"நீ இங்கேந்து பொணமாத்தான்போவ!. . ."

ஆத்திரம் தீர அடித்துப்போட்டுவிட்டுப் போய் விட்டனர். முக்கி, முனகிப்படுத்துக் கிடந்தான் அருண். பூட்ட வந்த வாட்சுமேன், சைகிள் ரிக்ஷாவில் ஏற்றி அவனை வீட்டுக்கு அனுப்பினான்.

அடி, உதைபட்டு வந்த அருணைப் பார்த்துப் பதறினாள் அவன் மனைவி. படுக்கை விரித்து வெந்நீர் ஒத்தடம் கொடுத்தாள். ஜுரமும் வந்துவிட்டது. டாக்டர் வந்து சென்றார். பதினைந்து நாட்கள் படுக்கையில் இருந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண். வெங்குவும், சந்திரனும் வந்துப் பார்த்தனர். "நாடகம் தந்த பரிசைப் பாத்திங்களா?" என்று அழுதாள் அருணின் மனைவி "நாடகக் கலையைத் திட்டாதேம்மா..." என்றார் வெங்கு. "மனசு தறிகெட்டு ஓடினா, செருப்படி பட வேண்டியதுதான்!"

"டேய், ரெண்டு வாரம் நீ இந்த ஊர்லயே இருக்க வேணாம். எங்கேயாவது வெளியூர் போ" என்றார் அருணின் அப்பா.

வேறு போக்கிடம்? மாமனார் ஊர்தான். பதினைந்து நாட்களுக்கு அருணுக்கு மயிலாடுதுறையில் ஆனந்தமாகப் பொழுதுப்போயிற்று.

## முப்பத்தி அய்ந்து

"இன்னிக்கு பாண்டிச்சேரி போறியாப்பா? வரும்போது எனக்கு நல்ல பேனா வாங்கி வாயேன்!" என்றாள் மகள்.

"ஷ்யூர்!" என்றான் நாக கணேஷ் கை இடுக்குகளில் சென்ட் ஸ்ப்ரே பண்ணியபடி.

"இன்னக்கி ரேடியோ நாடக ரெகார்டிங்ல நீ என்ன பாத்திரம்பா?..."

"தேவேந்திரன்மா. நம்ம சிவப்பா பிரும்மா."

"ஹ்க்" என்று சமையல் அறையில் விக்கல் கேட்டது.

'தேவேந்திரன் மூஞ்சியையும், முகரையையும் பாரு!' என்று நினைத்து நாக கணேஷின் மனைவிக்கு சிரிப்பு வந்தது. சிரிப்பை, விக்கலாக, இருமலாக... இது நாக கணேஷுக்கும் தெரியாமல் இல்லை. நக்கலா? கிடக்குநாய்! இதுக்கு என்ன தெரியும் கலை உலக மேன்மை!

கிணிங்! சைகிள் மணி ஓசை. 'நாகம்!'

"பிரும்மா வந்துட்டார்பா. போ, போ!"

"இன்னக்கி உன்கூட இந்திராணியா நடிக்கப் போறது யாரு? பவுனாத்தா தானா? என்னவோ நீ அவளையே உனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோடியா போடச் சொல்லி காடாத்தூர் தம்பியை வற்புறுத்தறே.. . " என்றான் சிவப்பா பஸ்சில் பாண்டி சென்றபோது.

"அவளுக்கு ஸ்வீட் வாய்ஸ்பா. காடாத்தூர் தம்பி தான் தயாரிக்கிற ஒவ்வொரு நாடகத்திலும் அவளுக்கு வேஷம் தர்றார்..."

"ஆனா, ரெகார்டிங் போது அவ நாற்காலியை ஒட்டி அண்ணன் நாற்காலியைப் போட்டுக் கொள்ளும் மர்மம் என்ன?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லப்பா. . ."

அன்று ரெகார்டிங்கிற்கு இந்திராணி பவுனாத்தா வரவில்லை. நாக கணேஷுக்கும் சரியாகவே நடிக்க முடியவில்லை. என்னங்க இப்படிக் கஷ்டம் குடுக்றீங்க? என்றார் காடாத்தூர் தம்பி. சரிசரிஅவங்க முகவரி வேணாத் தரேன்...

நாக கணேஷும் சிவப்பாவும் வழக்கமான பிராந்தி கடைக்குச் சென்றனர். பானம் அருந்தியதும், சிவப்பா கடலூர் பஸ்சில் ஏறிவிட்டான். நாக கணேஷ் சைகிள் ரிக் ஷாவில்.

"பவுனு, பவுனு, உன்னப் பாக்காம என் கண் பூத்துப் போச்சுடி. ஊட்டுக்குள்ள என்னப் பண்ற?. .."

லோ இன்கம் ஹவுசிங்போர்டு குடியிருப்பு அது. அழுக்குப் படுதா தொங்கியது.

"வாங்க, வாங்க. ஏது இம்புட்டுத்தூரம்?. . ." பவுனு கும்பிட்டு வரவேற்றாள்.

"சிரிச்சு சிரிச்சே ஆளை மயக்கிடுவியே!" - தடுமாறிய நாக கணேஷ் அவள் தோள்களைப் பற்றிக் கொண்டான். பளிச், பளிச் என்று மின்னல் வெட்டியது. "அய்யோ, இது என்ன?"

"ஒண்ணும் இல்ல. எங்க அண்ணன் ஃபோட்டோ எடுத்தாரு. உக்காருங்க. தோசை சுட்றேன். தோசை சாப்பிடுங்க. . ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசையாப் பேச வந்தேன். தோசை குடுக்றியா? சரி. ஊட்டிவிட்டாலும் சந்தோஷம்..."

"சார் யாரு?..." என்றான் அண்ணன், கடுமையான குரலில். அவன் பாண்டியில் பத்திரிகை நிருபராம். கையில் ஃபிளாஷ் காமிரா. அவனும் அந்த நேரத்தில் தண்ணீரில் தான் மிதந்து கொண்டிருந்தான். பவுனு, சிரித்து அவனை சமாதானப்படுத்தினாள். 'சரி சரி...' என்று அவன் வெளியில் போய்விட்டான்.

வீட்டில் எவரும் இல்லை என்றதும் நாககணேஷின் போதை அதிகரித்தது. "பவுனு, பவுனு, நீ என் உயிரு. என் கலை உலக ராணி நீ தான். நீ சம்மதிச்சா..." கட்டிக்கட்டி அணைத்தான். கன்னத்தில் இச்இச். "அச்சோ! இது என்ன தொல்லை?..." அவள் அழகாக நாணினாள்.

ஒருமணி நேரம் கழிந்தது. நாக கணேஷ் புறப்பட்டுச் சென்றான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலையில் குஷியாக விசில் அடித்தபடி முகத்திற்குப் பவுடர் தடவினான் நாகம். நியூ சினிமாவில் மோசமான காதல் காட்சிகள் மலிந்த ஆங்கில சினிமா காலைக்காட்சியாகப் போட்டிருந்தான். அதற்கு சிவப்பாவும் அவனும் போவதாக பிளான்.

ஜன்னல் வழியாக தெரு தெரிந்தது. "இந்த வீடுதான்" என்று சொல்லிக் கொண்டு நாற்பது பேர் வந்தனர். எல்லோரும் வீட்டினுள்ளும் நுழைந்துவிட்டனர்.

"நாககணேஷ்ங்கறது யாருடா?"

"இருங்க, இருங்க. உங்களுக்கு என்ன வேணும்? யார் நீங்க? இப்படி உக்காந்துப் பேசுவோம்..."

"பேச என்னடா இருக்கு நாயே? எங்க வீட்டுப் பெண்களுக்கு என்னடா வழி?" என்று சில ஃபோட்டோக் களை விசிறி அடித்தான் ஒருவன்.

நாக கணேஷ், பவுனாத்தாவைக் கொஞ்சும் பல படங்கள். "எங்கவூட்டுப் பொண்ணு மேல எப்படிடா நீ கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடலாம்? உன்னைக் கண்டதுண்டமா வெட்டிப் போடத்தான் வந்தோம். எங்கடா உன் சம்சாரம்? நீயாம்மா? இவன் பண்ணின அக்ரமத்துக்கு நீ என்னம்மா சொல்ற? . ."

"உங்க வீட்டுப் பெண்ணைக் கூட்டி வந்தீங்களா?. . ." என்றாள் திருமதி நாகம். "இவதானா? நல்லாத்தான் இருக்கா. இவருக்குப் பொருத்தமானவ தான். சரி. ரெண்டுப் பேரும் விரும்பறாங்க இல்லியா? திருட்டுத்தனமா சந்திக்க வேணாமே? இந்த நிமிஷமே இவர், இந்தப் பொண்ணுக் கழுத்துல மஞ்சக் கயித்தைக் கட்டி மனைவி ஆக்கிப்பாரு. இவங்க ரெண்டுப் பேரும் இந்த வீட்டிலேயேக் குடித்தனம் நடத்துவாங்க. . ."

"அம்மா, உங்களுக்குப் பெரிய மனசு. நீங்க எல்லாரும் இதே வீட்ல ஒண்ணா இருக்கப் போறீங்களா?. . ." என்றான் பவுனுவின் அண்ணன் - புகைப்படக் கலைஞன். "நாங்க பிற்படுத்தப்பட்ட இனம்கறத நீங்கப் பொருட்படுத்தாதது ஆச்சர்யம்."

"அதெல்லாம் பேசக்கூடாது. ஜாதீல என்ன இருக்கு? ஆசைப்பட்டவங்க சேந்து வாழ அனுமதிக்கணும். உங்க மாப்பிள்ளையும், உங்க வீட்டுப் பெண்ணும் இந்த வீட்டில் இருப்பாங்க. நானும் என் குழந்தைகளும் இப்பவே புறப்பட்டு என் தம்பி வீட்டுக்குப் போறோம். இவர் கிட்டேந்து எங்களுக்கு விடுதலை கிடைச்சதுக்கு கடவுளுக்கு நன்றி சொல்றோம். . ."

"அம்மா, நீங்க இவர் மேல கோவிச்சுக்கிட்டு இந்த வீட்டை விட்டு வெளியேர்றது சரி இல்ல. . ."

"அது என் பிரச்னை. உங்கப் பெண் சம்பந்தப்பட்ட பிரச்னை சுமுகமா முடிஞ்சுது இல்லியா? நீங்க புறப்படுங்க. உங்க பெண்ணைப் பத்திக் கவலைப்படாதீங்க. மாப்பிள்ளை பிரியமாவே நடந்துப்பாரு. . . எல்லாரும் போகலாம். . ." என்று வணங்கினாள் திருமதி நாககணேஷ்.

கூட்டம் கலைந்தது. நாக கணேஷின் மூத்த மகள் வெளியில் சென்று தாய் மாமனை ஃபோனில் அழைத்ததில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரு மாக்சி கேப் எடுத்துக் கொண்டு வந்துவிட்டான். "அக்கா, புறப்படு!"

அம்மாவின் ஆணைப்படி குழந்தைகள் தங்கள் உடைமைகளை எடுத்து வைத்தனர். "புதுமாப்பிள்ளைக்கு வாழ்த்துக்கள்! எங்களுக்கு விடை கொடுங்கள்!" என்ற மைத்துனன், "எல்லாரும் அவங்க அவங்க பொருட்களோடு போய் வண்டியில் ஏறுங்க, சீக்கிரம்!" என்றான்.

## முப்பத்தி ஆறு

"**ப**த்மினி! முன்னூறு ரூபா கொண்டா!" என்றான் சந்திரன் பாண்டினுள் 'இன்' செய்த சட்டைச் சுருக்கங்களை நிலைக் கண்ணாடி எதிரே நின்று நீவிவிட்டபடி.

"இதோ வந்துட்டேங்க..." என்று விரைவாக அருகில் வந்து 500 ரூபாய் தந்தாள் பத்மினி. "எதுக்கும் கைச் செலவுக்கு இருக்கட்டும்க" என்று கழுத்து வியர்வையை சேலை முந்தானையால் ஒற்றி நின்றாள்.

நல்ல கறுப்பு நிறம். குண்டு உரல். நாடகம் பற்றி ஏதாவது சொன்னால் அக்கறையோடு கேட்பாளா? நீண்ட கொட்டாவியாக விட்டு, "அதெல்லாம் எனக்குப் பிடிக்காதுங்க. எதுக்குக் கூப்பிட்டீங்க? அதை மட்டும் சொல்லிட்டு என்னை ஆளைவிடுங்க..." என்பாள்.

சமையலறை தெரியும். எப்போது பார்த்தாலும் படுத்துத் தூங்கப் பிடிக்கும். கணவன் 500 ரூபாய் கேட்டால், காரணம் கேட்காமல் உடனே 1000 ரூபாயாகக் கொடுப்பாள். "வெச்சுக்குங்க. போதும்,போதாமலும் எதுக்கு அவஸ்தைப் படணும்?..."

அவன் எது வாங்கிக் கொண்டாலும் விலை உயர்ந்ததாக வாங்கிக் கொள்ள வேண்டும் என்பாள். சட்டை, பான்ட் எல்லாம் ரொம்ப அருமையாக இருக்க வேண்டும். கோல்டு பிரேம் மூக்குக் கண்ணாடி. மணிக்கட்டில் 6000ரூபாய் மதிப்புள்ள கைக்கடிகாரம். விரலில் நவரத்தினத் தங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதிரம். வலக்கையில் தங்க பிரேஸ்லெட். கழுத்தில் மைனர் செயின். காலுக்கு ஷுஸ் நாலு விதம். வெளியில் புறப்பட்டாலே கும் என்று சென்ட் வாசம். பளபளவென்று புத்தம் புதிய ஸ்கூட்டர் வீட்டு வாசலில் நின்றது.

சந்திரனின் மைத்துனர்களும் "அத்தான், அத்தான்" என்று உயிராக இருப்பார்கள். அடிக்கடி மதுரையில் இருந்து வந்துப் போவார்கள். "அவருக்கு எந்த விதப் பணக்கஷ்டமோ, மனக்கஷ்டமோ இருக்கக்கூடாது. அவர் எப்ப, எவ்வளவு பணம் கேட்டாலும் நீ தயங்காமக் குடுக்கணும். பத்தலேன்னா எங்களைக் கேள்..." என்று அண்ணன்கள் பத்மினியிடம் சந்திரனின் எதிரிலேயே சொல்வார்கள்.

எல்லாம் சரிதான். பத்மினிக்கும் சரி, அவளின் சகோதரர்களுக்கும் சரி, கலை விஷயங்களில் ஞானம் பூஜ்யமாக இருக்கிறதே! நடக்கும் பாதையில் ஒரு பத்திரிகையோ, புத்தகமோ கிடந்தால் அதை எட்டி உதைத்து நடப்பார்கள். அல்லது அதன் மீதே ஏறி நின்று பேசுவார்கள். பளார் என்று ஓர் அறை விடத் தோன்றும்.

பொய்யாமொழி தான் சரி. என்ன அறிவு தீட்சண்யம்! எந்த ஒரு சினிமாவோ, நாடகமோ அவளோடு பார்க்க வேண்டும். எப்படி ரசிக்கிறாள். சிரிக்கிறாள், நாள் இரண்டு ஆனாலும், பார்த்த காட்சியை நினைவு வைத்து எப்படி விவாதிக்கிறாள்! தினமும் அவளைச் சந்தித்தாலும் அவளோடுப் பேசுவதற்கு நிறைய விஷயம் இருக்கிறதே!

இருவரும் ஒரே போஸ்ட் ஆபீஸ் என்பதால் மாலையில் வேலை முடிந்து அவரவர் ஸ்கூட்டர்களில் புறப்பட்டு சூப்பர் மார்க்கெட் வந்துவிடமுடிகிறது. கப் அய்ஸ்கிரீம் வாங்கிக் கொண்டு புல்லில் அமர்ந்துப்பேசும்போது உலகமே சொர்க்கமாக மாறி விடுகிறது.

நான்கு மாதங்களுக்கு முன்பு இப்படி அய்ஸ்கிரீம் சுவைத்தபோது திடீர் காற்றில் அவளின் சல்வார் துணி பறந்து சென்றுவிட, அவள் கப் அய்ஸ்கிரீமை அவனிடம் கொடுத்து துணியை எடுத்து வரச்சென்று திரும்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருவள்ளுவருக்கு நன்றி. இவள் பல்லில் ஊறிய நீர் தேன் என்று அழகாகப் பாடி வைத்தார்" என்றான் சந்திரன்

"ச்சீ! அதுக்குள்ள கப்பை மாத்தியாச்சா! இப்ப நான் உங்க கப்பை எடுத்துக்கணுமா? கஷ்டகாலம்" என்று ஒருமுறை சுவைத்த பொய்யாமொழி, "வாசுகிக்கும் கவிதை எழுதத் தெரிஞ்சா அவளும், இவன் உமிழ்நீர் பாலோடு தேன் கலந்தது என்று இதையே எழுதி இருப்பா!" என்று சிரித்தாள். சந்திரன் அவள் முகத்தையே ஆசையோடு பார்த்தான். 'பொய்யாமொழி தான் எனக்கு மனைவியா வந்திருக்கணும்.'

அப்போது அருகில் இருந்த ட்ரான்ஸ்ஃபார்மர் தலைக்கு மேல் பூ வாணம் சொரிந்து அந்தப் பிரதேசத்தையே இருளில் ஆழ்த்தியது. சந்திரன் ஒரு திடீர் வெறியில் அவள் மீது பாய்ந்து அவளைக் கீழே தள்ளினான். அவள் மீது பரவி, அவளின் உடைகளைத் தளர்த்தினான். அவளுக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது. "வாடா. என்னை எடுத்துக்கோ. எனக்கு அந்த சந்தோஷத்தைக் கொடு. எப்போ, எப்போன்னுக் காத்திருக்கேன். என் தேகம் அனலாய்க் கொதிக்குது!..."

"இப்போ எங்கே கரன்ட் வரப்போகுது? இனி நாளைக் காலையில்தான்..." என்று பேச்சுக்குரல்கள் கேட்டன.

ரொம்ப நல்லதாப் போச்சு, போ!

அடுத்த அரைமணியில் அவர்கள் தங்கள் ஸ்கூட்டர் களில் புறப்பட்டனர். மௌனப் பயணம்.

பிரிய வேண்டிய திருப்பத்தில் அவன் கேட்டான்.

"பொய்யி, என் மேல கோவமா?..."

"பேசாமப் போங்க!" - டர்ரென்று அவளின் ஸ்கூட்டர் போய்விட்டது. சே, ஏன் இப்படிச் செய்தேன்? அவன் கலவரமானான்.

அவளுக்கு அந்த அனுபவத்தை நினைத்து சந்தோஷம் ஏற்பட்டது. 40 வயது ஆகியும், வீட்டில் திருமணம் பற்றியப் பேச்சே எழவில்லை. என் உடம்பு என்னையும் அறியாமல் 'அதற்கு' இணங்கிவிட்டதே! ஆனால் என்ன தான் ஆனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணும் அறிவுப்பூர்வமாக நண்பர்கள் என்றாலும் இப்படி ஓர் அபாயம் உண்டு தான் போலும்!

அடுத்த சில நாட்களுக்கு நேருக்கு நேர் நின்று பேசுவதையே இருவரும் தவிர்த்தனர். ஆனாலும் மறுபடி பழகத் துவங்கி -

மறுபடி ஒருமுறை சினிமா பார்க்கும்போது உணர்ச்சிவசப்பட்டு விட்டனர். சீச்சீ, இது தப்பாச்சே!

மூன்று மாதங்களுக்குப் பிறகு பொய்யாமொழி தனியார் மருத்துவமனையில் தானே அட்மிட் ஆகி கருக் கலைப்பு செய்து கொண்டாள். அந்த விஷயம் தெரிய வந்ததும் பொய்யாமொழியின் அம்மா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். புறப்பட்டு சந்திரனின் வீட்டுக்கு சென்றாள்.

"இப்படி ஒரு காரியம் செஞ்சிருக்கியே, நீ உருப்படுவியாடா பாவி? எங்க மக எதிர்காலம் எப்படி?..."

பத்மினியின் அப்பா வந்திருந்தார் அப்போது. "இப்படி வாம்மா." செக் ஒன்று கிழித்தார் இருபதாயிரம் ரூபாய்க்கு. "போ, அநாவசிய ரசாபாசம் கூடாது!"

அடுத்த நாளே அவர் போஸ்டுமாஸ்டர் ஜெனரலோடு எஸ்.டி.டி.யில் பேசினார். பொய்யாமொழி சென்னைக்கும், சந்திரன் மதுரைக்கும் மாற்றப்பட்டனர்.

"மாப்பிள்ளை, நாடகமும் நாட்டியமும் நமக்குத் தேவை இல்ல. ஒழுங்கா குடும்பம் நடத்தி எனக்குப் பேரனையோ, பேத்தியையோ பெத்துக் குடுங்க!"

அருணுக்குத் தான் ரொம்ப வருத்தம். "என்னடா இப்படி பண்ணீட்ட? உன்னைப் பிரிஞ்சு நான் எப்படிடா இருப்பேன்?" கடலூர் ரயில் நிலையத்தில் இரு நண்பர்களும் கட்டிப்பிடித்து கண்ணீர் வடித்தது பரிதாபமாக இருந்தது.

வெங்குவும் வருத்தத்துடன் தலை குனிந்து பெரு மூச்செறிந்தார்.

"கடலூர் முழுநிலா நாடக மன்ற நினைவுகள் என் நெஞ்சில் பசுமையா இருக்கும்டா..." தழுதழுத்தான் சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பத்தி ஏழு

“சூடா இட்லி கிடைக்குமா அண்ணே?...” என்று ஓர் அழுக்கு கைலிக்காரன் படி ஏறி வந்து சாப்பிடும் மேசை எதிரே பெஞ்சில் அமர்ந்தான். “ஆங், உக்காருங்க” என்றபடி திரும்பிப் பார்த்த அருணுக்கு கண்கள் சிவந்து, உடம்பு கொதித்தது. இருப்பினும் கோபத்தைக் கட்டுப்படுத்தி கும்பிட்டான். “தயவு செஞ்சு உடனே போயிடுங்க. என் கோபம் உச்சநிலை அடைஞ்சா, கொதிக்கிற எண்ணெயை ஒரு கரண்டி எடுத்து மூஞ்சிலக் கொட்டிடுவேன்” என்று எண்ணெய் சட்டுவத்தின் மீது கை வைத்தான்.

“அண்ணே, உங்ககிட்ட மண்டியிட்டு மன்னிப்புக் கேக்கத்தான் வந்தேன். அன்னிக்கு அப்படிக் கும்ப கூடி ஒரு கலைஞனை அடிச்சது எவ்வளவு பெரிய பாவம்னு நினைச்சு நான் வருந்தாத நாளே இல்ல. நீங்க ஒண்ணும் பிரமாத தப்புப் பண்ணிடல. எல்லா மனிதனுக்கும் உள்ள பலஹீனம் தான், நீங்க அன்னிக்கு உணர்ச்சிவசப்பட்டது. நாங்க அவசரப்பட்டு முட்டாள்தனம் செஞ்சோம். அதனோடப்பலன், எங்க நாடகமன்றம் க்ஷீணிச்சேப் போச்சி. நீங்க பெரிய மனசு வெச்சி மறுபடி எங்க நாடகங்கள்ள நடிக்க வரணும்...”

‘ஹுக்கும்!’ என்று கனைத்தபடி படி ஏறி வந்தார் அருணின் மாமனார். “மாப்பிள்ளே, இப்பத்தான் வரேன். வழீல பஸ் பிரேக் டவுன்...” என்று உள்ளே சென்றார்.

“வாங்கப்பா. நல்ல நேரத்துக்கு வந்தீங்க. மாப்பிள்ளை மறுபடி நாடகப் பேச்சுகள் பேச ஆரம்பிச்சுட்டார் பாத்தீங்களோ இல்லியோ?” என்று மகள் வரவேற்றாள்.

“கடந்த நாலு மாசமா - என்னிக்கு மாப்பிள்ளை ரிகர்சல் மேடையில அடி வாங்கி அவமானப்பட்டாரோ அன்னீலேந்தே எனக்கு ஒரு யோசனை தாம்மா. இவரை நாடகத்தை மறக்க வெக்கணும். அதுக்கு என்ன வழி? நமக்கு மயிலாடுதுறைல இருந்த சாகுபடி நிலத்தை வித்து பணத்தை மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்திருக்கேம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோபார்..." என்று ஒரு ஸிப் பையை மகளிடம் கொடுத்தார் தந்தை. பை முழுவதும் கரன்சி நோட்டுகள்.

"சம்பந்தி, இந்தப் பணத்தை வெச்சு என்ன செய்யப் போறீங்க?..." என்றார் அருணின் தந்தை.

"இந்த ஊர்லயே பெரிய சேட் யாரு?..."

"வட்டிக்கு விடவா?..."

'சிவசிவா! சேட்னாலே வட்டி தானா! இனிப்பான விஷயம். லாலா கடை சேட் யாரு?..'

"இருக்காரு. கெடிலம் பால இறக்கத்துல ஒரு சூப்பர் சைஸ் லாலா. அவர் கடைல பயங்கர சேல்ஸ்..."

"அவர் ஆசியும், அறிவுரையும் நமக்குத் தேவை. அவரை அப்புறம் சந்திக்கலாம். முதல்ல மார்க்கெட் ப்ளேஸ்ல பரபரப்பான எடத்துல நமக்கு எடம் தேவை..."

"வெங்கு கிட்டச் சொல்லலாம்..."

"உடனடியா நா அவரைப் பாக்கணுமே?"

அருண், மாமனார் சிரமப்படலாகாது என்று ஓர் ஆட்டோ வைத்தான். வெங்கு வீட்டில் இல்லை. வழக்கம் போல தையற் கடையில் இருந்தார். "வாங்க, வாங்க..."

"காய்கறி மார்க்கெட் பக்கத்துல தான் ஒரு இடம் இருக்குது. ஆனா... சொன்னா தப்பா நினைக்கக்கூடாது. அங்க ஒரு பொதுக் கழிப்பிடம் இருக்குது. அது அங்கே மார்க்கெட் பக்கத்துல இருக்கக் கூடாதுன்னு வியாபாரிகள் எதிர்க்கிறாங்க. கழிப்பிடத்தை ரெயில்வே கேட்டுக்கு அந்தப் பக்கம் தூக்கிடலாம். இந்த இடத்தை தூர்த்து ... அந்த இடத்தை முனிசிபாலிடி கிட்டக் கேக்கலாம்..."

"ஒண்ணும் தப்பான அய்டியா இல்ல..."

பொது கழிப்பிடம் தரை மட்டம் ஆக்கி, சுத்தப்படுத்தப் பட்டது. பிராமணர்களைக் கொண்டு இருள் பிரியா அதிகாலையில் அங்கே கணபதி ஹோமம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டே மாதத்தில் ஒரு கட்டிடம் எழுப்பபட்டது. பளிங்குக் கற்கள் பளபளக்கும் தரை. கண்ணாடிக் கதவுகள். கண்ணைப் பறிக்கும் மின் விளக்குகள்.

புதிதாகத் துவங்க இருந்த இனிப்புக் கடைக்கு என்ன பெயர் வைப்பது? வெங்கு ஸ்வீட் ஸ்டால்? வெங்குவும் வேணாம், சங்குவும் வேணாம். மக்களைக் கவரும் வகையில் ஸ்வீட்டானப் பெயரா வைங்கப்பா...

சிவாஜி இனிப்பகம்?

நோ, நோ! எம்.ஜி.ஆர் ஸ்வீட்ஸ்!

ஒத்துக்கமுடியாது. மாப்பிள்ளை பெயரையும், மனைவிப் பெயரையும் இணைச்சாப் போச்சு,

ஏன் இப்படி செஞ்சா என்ன? எம்.ஜி.ஆர். சிவாஜி ஸ்வீட்ஸ்! இது எப்படி? பேஷ், பேஷ்!

அடுத்த காலையில் வெங்குவும், அருணும் திருவகீந்திர புரம் சென்றனர். நதி ஆர்ட்ஸ் தியாகராஜனைப் பார்த்து எம்.ஜி.ஆர் சிவாஜி ஸ்வீட்ஸ் என்று பத்து போர்டுகள் எழுதக் கேட்டுக் கொண்டனர். திரும்பி வரும்போது வெங்கு ஒரு யோசனை சொன்னார். நாக கணேஷின் மூத்த மனைவி ரொம்ப அருமையாக இனிப்பு - கார வகைகள் செய்வாங்க, தெரியுமோ? உனக்குப் புண்ணியமாப்போகும். ஒரு குடும்பத்தை வாழ வைப்பா. அந்த அயோக்யன் நாககணேஷ் செய்த படு பாதகத்திற்கு நாமாவதுப் பரிகாரம்தேடுவோம்... குருவே, உங்கப் பேச்சுக்கு நான் என்னிக்காவது மறுப்பு. . .

பௌர்ணமி அன்று திருவகீந்திரபுரம் மலைமேல் கோயில் கொண்ட ஸ்ரீ ஹயக்ரீவ பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடத்தினர். அன்றே ஸ்ரீ பிரஹன்னாயகித் தாயார் சமேத பாடலீசப் பெருமானுக்கும் அர்ச்சனை. கடலூர் முதுநகர் வெள்ளிப் பிள்ளையாருக்கு அபிஷேகம். வண்டிப்பாளையும் முருகன் கோவிலுக்கு வெள்ளிவேல் காணிக்கை. கெடிலக்கரை ஆஞ்சநேயருக்கு வடைமாலை, திருவகீந்திரபுரம் தேவநாத பெருமாளை மனதில் நினைத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் பிரபல சேட் தன் ராசியான கைகளால் திறந்து வைக்க வெற்றிமீது வெற்றி வந்து என்னைச் சேரும் என்று ஒலி பெருக்கியில் எம்.ஜி.ஆர் பாட எம்.ஜி.ஆர்.சிவாஜி இனிப்பகம் பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் விற்பனைத் துவங்கியது.

காசு வாங்கும் கல்லாவில் ஜெய் அருண். பட்டுவேட்டி சலவை மடிப்புக் கலையா சட்டை. தலையையும் சினிமா ஸ்டார்போல அழகாகத் திருத்தி அமைத்திருக்கிறான். முகத்தில் எண்ணெய் கசிவு இல்லை. தக்காளிப் பழமாக ஜொலிக்கிறது. விரல்களில் மோதிரங்கள். ஒளி வீசுகின்றன. கையில் தங்க செயினுடன் வாட்ச். பரம்பரை முதலாளி போலவே அவன் முகத்தில் மிடுக்கு.

கடையில் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள் அருணின் மைத்துனர்கள். ஒரு எம்.ஜி.ஆர் படப்பாடல், அடுத்து ஒருசிவாஜி படப்பாடல் என்று மாற்றி மாற்றி ஒலிக்கிறது.

மாப்பிள்ளை, முதலாளி ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் அழகைப் பார்த்துப் பார்த்துப் பூரிக்கிறார் மாமனார். வீட்டில் இருந்து மகளையும் அழைத்து வந்து காட்டுகிறார். அய்யோ, என் கண்ணேப் பட்டுடும் போலிருக்குப்பா!

காலை எட்டுமணி முதல் இரவு ஒன்பது மணி வரை வியாபாரம் மும்முரமாக நடக்கிறது.

இனி, அருணுக்கு நாடகமேடை நினைவு வருமா?

# முப்பத்தி எட்டு

'**மா**யவரம் மாலதி' என்று அவள் தன் பெயரை நாடக நோட்டீசுகளில் அச்சிடக் கொடுத்தாளே தவிர அவளின் ஊர் மயிலாடுதுறையை அடுத்த மஞ்சளூர் தான். உத்தியோகம், உள்ளூர் பள்ளிக்கூட ஆசிரியை. தகப்பனின் மூன்றாம் தாரத்து மகள். இப்படியா ஒரு தகப்பன் பொறுப்பு இல்லாமல் ஒன்பது பெண்களைப் பெறுவான்? இவ்வளவுப் பேருக்கும் திருமணம் செய்து வைக்க வேணுமே? அந்தத் தகப்பன் படவேண்டிய கவலையை ஏழாவது மகளாகிய இவள் பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகத்தான் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தாள். நாடகங்களில் நடித்து நடித்து சினிமாவில் நுழைந்து ஏராளப் பணம் சம்பாதித்து, சகோதரிகளுக்குத்திருமணம் செய்து வைக்கும் லட்சியத்தில் மேடைகளில் தோன்ற ஆரம்பித்தாள்.

அவளும் நடிக்கத் துவங்கிப் பன்னிரெண்டு ஆண்டுகள் ஆயின. முன்னேற்றம் என்பதே இல்லை. எத்தனையோக் கதாபாத்திரங்களாக நடித்துவிட்டாள். 50 ரூபாயில் ஆரம்பித்த சன்மானம் இன்று 100 ரூபாய் ஆகி இருக்கிறது. கதாநாயர்களும், வில்லன்களும் அவளின் கறுப்பு மேனியை சுவைக்க ஆசைப்பட்டு அலைந்தது உண்டு. ஆனால் அவள் எவருக்கும் சரி என்று சொன்னதே இல்லை. நாடகம் முடிந்ததா, நூறு ரூபாயைக் கறாராக வாங்கிக் கொண்டு மயிலாடுதுறை பஸ்சில் ஏறி வந்து கொண்டே இருப்பாள். அடப்போ! இதில் எல்லாம் ஒன்றும்பிரமாதமாக சம்பாதித்து விட முடியாது போல் இருக்கிறதே! நடிப்பதை விட்டு விடலாமா?

அப்படி விட்டுவிட்டால் சகோதரிகளின் கதி என்ன என்று கதி கலங்கி யோசனையுடன் திருச்சியில் ஒரு நாடகத்தில் நடித்துவிட்டு பஸ்சில் மயிலாடுதுறை திரும்பினாள். பஸ்,மயிலாடுதுறையை நெருங்கிக் கொண்டிருந்தது. பையில் இருந்து கண்ணாடி சீப்பு எடுத்து தலை சீவ நினைத்து பையினுள் கைவிட்டாள். பையில் இருந்த ரிவால்வர் கையில் தட்டுப்பட்டது. ஆம். முன் இரவு நாடகத்தில் இவளுக்கு போலீஸ்காரி வேடம். நாடகப் பொருட்களை வாடகைக்கு விடும் கடையில்திருச்சியில் கைத்துப்பாக்கி இல்லை. இவளையே மயிலாடுதுறையி லிருந்து வாங்கி வருமாறு கடிதம் எழுதினார்கள். இவளும் இங்கிருந்து வாடகைக்கு எடுத்துச் சென்றாள். திருப்பித் தர வேண்டும்.

அப்போது முன் ஆசனத்தில் தூங்கிய பயணியிடம் இருந்து இவள் காலடியில் விழுந்தது ஒரு ரீடர்ஸ் டைஜஸ்டு பத்திரிகை. இவளும் எடுத்துப்புரட்ட, அதில் ஒரு கடிதம் இருந்தது உறையுடன். பிறர் கடிதங்களைப் படிக்கலாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிற நாகரீகம் பார்ப்பவள் இல்லை மாலதி. படித்தாள். திடுக்கிட்டாள்.

பையில் இருந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு துள்ளி எழுந்தாள். டிரைவரை நெருங்கி டிரைவரின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்தாள். "நான் போலீஸ்காரி. மரியாதையாக பஸ்சை போலீஸ் ஸ்டேஷனுக்கு விடு!"

போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததும் பஸ் சிலிருந்து குதித்து ஸ்டேஷனுள் ஓடினாள். "இன்ஸ்பெக்டர், சீக்கிரம் இந்த லெட்டரைப் படிங்க."

"டியர் சோபன்ராஜ், சீட்டுக்கம்பெனி நடத்தி மக்களை ஏமாற்றியது போதும். பெரிய பூட்டாகப் பூட்டி, உடனே வந்து சேர். சிங்கப்பூருக்கு விசாவும், விமான டிக்கட்டும் ரெடி, மயிலாடுதுறையில் வழக்கமான லாட்ஜில் நம் ஆளை சந்தி..."

"அடப்பாவி! டெபாசிட்தாரர்கள் அத்தனைப்பேரும் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறப் போகிறார்கள்." இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்களுடன் வெளியில் ஓடிவந்தார். அதற்குள் தூக்கம் கலைந்த அந்தப் பயணி...

"ஓட்றான் பாருங்க, அந்த காபிப் பொடி சட்டைக் காரன்தான்!" என்றாள் மாலதி.

"ஹே ரெளண்ட் அப்! ஷூட் ஹிம்!" மயிலாடுதுறை கடைத்தெரு பரபரத்தது. பலர் ஓடினார்கள். கடமை முடிந்தது என்று மாலதி மஞ்சளூர் பஸ் ஏறி வீடு வந்தாள். பிறகு நடந்த விஷயங்களை அவளும் தினசரிகளில் படித்தே தெரிந்து கொண்டாள்.

போலீஸ் அவனை விடவில்லை. விரட்டி பிடித்தது. பலத்த போலீஸ்மரியாதைக்கு பிறகே அவன் தன் கூட்டாளி பற்றி வாய் திறந்தான். கூட்டாளியையும் சரியாகக் கவனித்ததில் முதலாளி பற்றிய விபரம் தெரிந்தது. சென்னை, ஹைதராபாத், மும்பை போலீஸ் ஸ்டேஷன்கள் மைக்ரோ வேவ் தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டு புருடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட் கம்பெனி முதலாளி கைது செய்யப்பட்டான். ஹைகோர்ட் நீதிபதி ஒருவர் முன்னிலையில் எல்லோருடைய பணத்தையும் திருப்பித் தர ஒப்புக் கொண்டான்.

"புண்ணியவதி நல்லா இருக்கணும்! என் பென்ஷன், கிராஜுவிடித் தொகைப்பூரா இதிலே முதலீடு செஞ்சேன். என் மக கல்யாணத்துக்கு இதைத்தான் நம்பி இருந்தேன். புருடா பிடிபட்டதால என் பணம் தப்பிச்சுது!. . ." பொதுமக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

பத்திரிகைகள் சும்மா இருக்குமா? மஞ்சளூரும் மாலதியும் பிரபலம் ஆகிவிட்டனர். இவர்தான் அந்த வீராங்கனை!

"மேடம், உங்களுக்கு எப்படி அப்படி ஒரு துணிச்சல்?" நிருபர்களின் கேள்வி.

"ஏதோ ஒரு அசட்டுத் துணிச்சல்தான்!"

அகில இந்திய அளவில் மாலதியின் புகைப்படம் வராத பத்திரிகையே இல்லை. மாநில முதல்வர், ஆளுனர், அரசியல் தலைவர்கள் வாழ்த்து, மயிலாடுதுறையில் ஓர் அரசியல் கட்சி அவளுக்கு பாராட்டுவிழா நடத்தியது.

ஒருநாள் அய்ந்தாறு கார்களில் தஞ்சாவூர் மிராசுதார் ஒருவர் மஞ்சளூர் வந்தார்.

"யம்மாடி, நாங்களும் மூணுகோடி ரூபாய் அந்த மோசடி கம்பெனியில் முதலீடுப்பண்ணி இருந்தோம். நீ அவன்களப் பிடிக்கல, அம்புட்டுப்பணமும் எள்ளுதான். நன்றின்னு சொன்னாப் பத்தாது. உன்னைப் பேட்டி காண வந்த நிருபர்கள்ள எங்க வீட்டுப் பிள்ளையாண்டானும் ஒருவன். அவன் இந்த ஊர் கருந்திராட்சை மேல ஆசைப்பட்டுட்டான். என்ன சொல்ற, எங்க வீட்டு மருமகளா ஆக சம்மதிக் கிறியா?. . ."

"நான் என் பாட்டை மட்டும் பாத்துக்கிட்டுப் போயிட்டா, என் சகோதரிகள் கதி?. . ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முதல்ல நீ மணமகள் ஆகு. மத்தப் பொண்ணுக கல்யாணத்த உன் புருஷனே நடத்தி வெப்பான்..."

கடலூர் பாடலீசர் கோயில் வாசலில் அந்த நீளக் காரில் இருந்து இறங்குகிறாள் மாலதி. பின்னால் கணவர். தையல் மெஷினில் வெங்கு.

"வெங்குசார், எங்களை ஆசிர்..."

"சௌபாக்யவதியா இரும்மா" வெங்கு மகிழ்ச்சியுடன் கை உயர்த்துகிறார்.

## முப்பத்தி ஒன்பது

"**நா**ன் ராத்திரி வரமாட்டேன் கொலுசு. ஒரு நாடகம் நடிக்க பாண்டி போறேன். காலையிலே தான் வருவேன். நீயும் அம்மாவும் பத்திரமாக இருங்க. உனக்கு என்ன வேணும் சொல்லு. வரும்போது வாங்கி வருவேன்..." என்றான் சிவப்பா.

சிவப்பாவைப் பார்த்துக் கண் கலங்கினாள் தங்கை கொலுசு. பாவி, என்னால தானே அண்ணனும் நல்ல வாழ்க்கை அமையாமல் நிற்கிறான்? இவள் காதில் விழுந்தாலும் பரவாயில்லை என்று அக்கம் பக்க வீட்டுக் காரர்கள் வம்பளப்பார்கள். "ஹ்ம், எப்படி இருக்கான் பாரு ராஜா மாதிரி! இந்த முண்டையால இவன் வாழ்வும் பாழ்! எதுக்கு இவ இந்த பூமிக்குப் பாரமா..."

சிவப்பா, தங்கையின் கூந்தலைப் பரிவுடன் தடவினான். "இப்ப, காலம் ரொம்ப முன்னேறிடிச்சி. நவீன மருந்துகள் வந்தாச்சி. உனக்குப் பூரண குணம் ஆகும். உன்னை ஒருத்தன் கைல ஒப்படைச்சு நீ சந்தோஷமா வாழறத கண் குளிரப் பாப்பேன். உன் சந்தோஷம் தான் எனக்கு முக்கியம்..."

சிவப்பா சைகிளில் ஏறிப் போனான்.

கொலுசு, வருத்தத்துடன் அவன் சென்ற திசையைப் பார்த்து நின்றாள். சில பேர் அப்படித்தான். தாங்கள் வாழ வேண்டும் என்று நினைப்பதே இல்லை. எனக்காவது வியாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் ஆவதாவது? பைத்தியக்கார அண்ணா! அம்மா, எனக்கு ஏதாவது ஆயிட்டா நீ அண்ணாவுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வை.

அன்றிரவு அம்மா தூங்கிய பிறகு கொலுசு, அரளி விதையை அரைத்துக் குடித்தாள். "பகவானே, இன்னொரு பிறவியிலாவது வியாதி இல்லாத பெண்ணாக என்னைப் படைடா!" புன்னகையோடு படுத்தாள்.

காலையில் சிவப்பா வீடு திரும்பியபோது அம்மாவின் ஒப்பாரி அவனை வரவேற்றது. "தன் வியாதிக்கு அவளே நல்ல மருந்து சாப்பிட்டுட்டாடா சிவப்பா!"

தெரு கூடி இருந்தது. நாக கணேஷுக்கு யார் தகவல் சொன்னார்களோ? சைகிள் கீழே விழக் குதித்தோடி வந்து சிவப்பாவைக் கட்டிப் பிடித்தான். சிவப்புப் பூத்துண்டை வாயில் அடைத்துக் குலுங்கி அழுதான் சிவப்பா. (நடிப்பில்லை!)

திடீரென்று எதையோ நினைத்துத் துணுக்குற்ற நாக கணேஷ் மெல்லிய குரலில், "டேய், இது தற்கொலை கேஸ் ஆச்சேடா, போலீஸ்காரன் வம்புப் பண்ணப் போறான் போஸ்ட்மார்ட்டம், அது இதுன்னு. வந்து பாடியைத் தூக்கிட்டுப் போயிடப் போறான்" என்றான்.

செய்தி தெரிந்து கட்சித் தோழர்கள் விரைந்து வந்தனர். என்ன அண்ணே, அடாடா!. . . கொலுசுவின் உடல் மீது மாலை சாத்தினர். கட்சித் தொண்டர்கள் கூட்டம் தெருவை நிறைத்தது. மாலைகள் வந்த கொண்டே இருந்தன.

நாக கணேஷின் பேச்சை செவி மடுத்த ஒரு தோழன், "அதெல்லாம் ஒண்ணும் ஆகாது, ஏரியா போலீஸ் இன்ஸ்பெக்டர் வேண்டியவர்தான், பாத்துகலாம். . ." என்றான்.

கொலுசுவைப் புதைத்த பிறகு, "வாடா, துயரத்தை மறக்க ஒரு 'பெக்' அடிப்போம்" என்றான் நாகம்.

"இல்லப்பா. வீட்ல அம்மா தனியா அழுதுக் கிட்டிருப்பாங்க. அவங்க எந்த பெக் அடிச்சுத் துன்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியும்? இந்த நேரம் நான் அவங்களுக்கு ஆறுதலா பக்கத்துல இருக்கணும்..." என்றான் சிவப்பா.

இரண்டு நாட்களுக்கு நாக கணேஷ், சிவப்பாவுடனே தங்கினான். அவ்வப்போது கேரியர் எடுத்துச் சென்று ஓட்டலில் இருந்து சிவப்பாவுக்கும் அம்மாவுக்கும் சாப்பாடு எடுத்து வந்து வற்புறுத்தி சாப்பிட வைத்தான்.

அம்மாவுக்கு ஏதோ திகில் பிடித்துவிட்டது. திடீரென்று உடம்பு, மனமும் ஒடுங்கிவிட்டது. என்னையும் கூட வந்துடச் சொல்லி கொலுசு கூப்பிடுறாப்பா...

பத்துநாட்கள் சென்றன. பதினொன்றாவது காலையில் காபியைக் கையில் வைத்துக் கொண்டு சிவப்பா எழுப்பியபோது அவள் எழுந்திருக்கவில்லை. தூக்கத்திலேயே போய்விட்டிருந்தாள்.

சிவப்பா முட்டி மோதிக் கொண்டு அழுதான். "நான் அநாதை ஆயிட்டேன். அநாதை ஆயிட்டேன்.."

"அப்படிச் சொல்லாதே" என்று நாககணேஷ் கட்டித் தழுவினான். உங்களுக்குப் பக்கபலமா நாங்களும், நம்மப்பேரியக்கமும் இருக்குது அண்ணாச்சி! என்றனர் கட்சித் தொண்டர்கள்.

அன்றே அந்த வீட்டைக் காலி செய்துவிட்டான் சிவப்பா.

சிவப்பா, தான் வேலை செய்த ஓட்டலிலேயே தங்கினான். சில நாட்களில் கட்சி ஆபீசிலும் தூங்குவான்.

நாககணேஷ் சொன்னான். "டேய், ஒரு கல்யாணம் பண்ணிக்கோ. வாழ்க்கையில் நமக்கு ஆதரவு வேணும். எனக்குத் தெரிஞ்ச ஒரு பொண்ணு.."

"ஏண்டா, நீ கை வெச்சதா?" என்று கேட்க நினைத்த சிவப்பா, "50 வயசுக்குப் பிறகு என்னப்பா கல்யாணம்? எனக்கு அம்மாவும், தங்கையும் போன பிறகு இந்த ஊர்ல இருக்கவே பிடிக்கல. வெறுப்படிக்குது.." என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கம் விசாரிக்க வந்த இப்ராஹீம். "நான் ஒண்ணு சொல்றேன், தோழரே. நம்ம அப்துல் காதர்பாய் பேசிக்கிட்டிருந்தாரு. துபாய்க்கு ஹெல்பர் பதவிக்கு ஆட்கள் வேணுமாம் உன் ஞாபகம் வந்திச்சி. . ." என்றான் ஒரு பக்கம் திரும்பி எச்சில் துப்பி.

"செய் பாய். உனக்கு கடமைப்பட்டிருப்பேன். . ."

"கடமை, வண்டி மை எல்லாம் இருக்கட்டும். சில ஆயிரம் செலவாகும். அதை மட்டும் குடுத்துடு. . ." என்றான் இப்ராஹீம்.

ஒரு மாதத்தில் சிவப்பா துபாய் செல்ல அப்துல் காதர் ஏற்பாடு செய்துவிட்டார்.

சிவப்பாவைப் பிரிவது நாககணேஷுக்கும் சிரமமாகத் தான் இருந்தது. அவனோடு பாண்டிச்சேரி சென்று பிரியாணியும் பீரும் சாப்பிட்டு, இங்லீஷ் சினிமாப் பார்த்து, மட்டமான லாட்ஜில் விலை மாது சுகம் தேடி, கடலூர் திரும்பினர்.

"இந்த நேரம் அண்ணியை நினைச்சி வேதனைப்படுது என் மனசு. நீ செஞ்சது அயோக்கியத்தனம்தான். அவங்களை வீட்டை விட்டு விரட்டிட்டியே, இது என்ன நியாயம்? நல்லவேளை, நம்மஅருண் அவங்களுக்குத் தன் ஸ்வீட் ஸ்டால்ல வேலை குடுத்து ஆதரிக்கிறான். இந்த ரெண்டாவது அண்ணியையாவது வீட்டோடு வெச்சுக் காப்பாத்து. . ." என்றான் சிவப்பா.

"நீங்க இந்த நாட்டை விட்டுப் போறது நம்ம கட்சிக்கே ஈடு செய்யமுடியாத இழப்பு" என்று கண் கலங்கினான் ஒரு தோழன்.

"நாடக உலகத்துக்கும்தான். முழுநிலா நாடகங்களில் நாம் நடித்த நாட்களை மறக்கமுடியுமா?" என்றான் நாகம்.

சிவப்பாவின் பஸ் சென்னையை நோக்கிப் புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது

தரம் நாடக மன்றம் அமைத்து அதன் மூலம் மூன்றே மூன்று தரமான நாடகங்களை 200 உறுப்பினர்களுக்கு மட்டும் வெங்கு நடத்தியது நேற்று நடந்ததுப் போல் இருக்கிறது. ஆனால் அய்ந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. ஈஸ்வரமூர்த்தியின் மைத்துனி அம்ருதேஸ்வரி கேட்டாள், "இந்த நாடகங்கள் பற்றி என்ன நினைக்குறீங்க?" என்று. "பெருமையாத் தாங்க இருக்குது. ஆனாலும் நிறையப் பேர் பார்த்து ரசிக்க முடியலையேன்னு வருத்தமாவும் இருக்குது.தீபாவளி மலர்ல கதை எழுதறது கௌரவம்னாலும் பல ஆயிரக் கணக்கான வாசகர் பார்வைக்குப் போகாது இல்லீங்களா?" என்றார் வெங்கு.

அம்ருதாவும் டெல்லி திரும்பிவிட்டாள். பிறகு இந்த அய்ந்தாண்டுகளில் வெங்கு ஒரு நாடகமும் அரங்கேற்ற வில்லை. ஒரு திருப்தி ஏற்பட்டுவிட்டது. தான் உண்டு, தன் தையல் மெஷின் உண்டு என்று அமைதியாக காலத்தை ஓட்டுகிறார் வெங்கு. எப்போதாவது ஏதாவது மன்றம் காரர்கள் வந்து தங்கள் நாடகத்திற்கு தலைமை தாங்க அழைப்பார்கள். ஏற்று, மேடை ஏறி, கழுத்தில் மாலை அணிவிக்கப் பெற்று வாழ்த்து வழங்குவார். மற்றப்படி எவராவது பழைய நண்பர்கள் வந்து மணிக் கணக்கில் நாடகங்கள் பற்றிப் பேசி மகிழ்வதுண்டு.

வெங்கு தம்பதிகள் ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொண்டு அந்தக் குழந்தைக்கு இப்போது வயது பத்து.

கடை முன்னால் ஓர் ஆர்மடா ஜீப் வந்துநின்று ஹாரன் பெரிதாக ஒலிக்கிறது. "புலிசை வெங்கு யாருங்க? உங்களை காரில் ஏற்றி வரச்சொல்லி ஹரியானா எம்.பி. ஹர்கிஷன்லால் அனுப்பினாரு. அவசர விஷயம். உடனே வர்றீங்களா?. . ." என்கிறான் டிரைவர்.

கடையைப் பூட்டி புறப்படுகிறார் வெங்கு. யார் இந்த எம்.பி. ஹரிகிஷன்? இவருக்கு என்னை எப்படி?. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் முசாபரி பங்களாத் தோட்டத்தில் சென்றுநிற்கிறது. நிறைய அரசியல்வாதிகள் எம்.பியின் தரிசனத்திற்காக வராந்தாவில் நிற்கிறார்கள். வெங்குவை அழைத்துச் சென்ற டிரைவர் அவரை ஒரு சோபாவில் அமர்த்தி கிரீம் பிஸ்கட்ஸ், வறுத்த கார முந்திரி, அருமையான டீ கொடுக்கிறார். இந்த ஹரியானா எம்.பி.க்கு கடலூரில் என்ன வேலை?

பைஜாமா, ஜிப்பா, வெய்ஸ்ட்கோட், காந்தி குல்லா, கட்ஷ" என்று எம்.பி. "நமஸ்தேஜி!" என்று வருகிறார்.

போச்சுடா! ஹிந்தி வாலாவிடம் மாட்டிக் கொண்டு அறுபடப்போகிறோமா! ஹிந்தியில் அச்சா, பச்சா என்பதற்கு மேல் ஒன்றும் தெரியாதே! மனைவியையும் அழைத்து வந்திருக்கலாம். . .

"சௌக்யமா?. . ." என்று கும்பிட்டபடி வந்தாள் ஒரு மகா குண்டுப் பெண்மணி. கன்னங்களில் குழி விழச் சிரிக்கும் இந்தப் பெண்மணி? முகவாயில் கூட எம்.ஜி.ஆர். போல அதிர்ஷ்டக்குழி. - இருங்க அம்மணி, உங்களை எங்கோ. . .

"தெரியலையா! அம்ருதேஸ்வரி. இவரும் நானும் காதல் கல்யாணம். அடுத்த மாதம் இவர் ஒலிபரப்புத்துறை மந்திரி ஆகப் போகிறார். அதுதான் நம் ஹயக்ரீவருக்கு திருமஞ்சனம். . ."

"ஓ அம்ருதா! என்ன இது சேட் பொம்பளை போல? இப்படி ஏன் குறுக்கில் படர்ந்தீர்கள்?"

"என்ன நாடக உலகம் எப்படி இருக்கு?"

"அமைதி. பேரமைதி. என் தையல்மிஷின் சக்கரம் ஓடும் கடகட ஒலி மட்டும். . ."

"பரிதாபம். ஒரு மகா கலைஞன் இப்படி ஓய்ந்து கிடப்பதா? நான் உங்களை ஓயவிடமாட்டேன். . ."

எம்.பி. எழுந்து வேறு அலுவல்கள் பார்க்கச் சென்றார். வடநாட்டில் ரொம்ப செல்வாக்குள்ளவராம். இவர் சூள் கொட்டினால், மத்திய மந்திரி சபையே ஆட்டம் காணுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடனடியா ரெண்டு டி.வி. சீரியல் நாடகம் எழுதணும். தீம் நான் சொல்றேன். டைம் பத்திரிகையில் நான் சமீபத்தில் படித்த இரு புதுமையான செய்திகள்..."

அன்று பிற்பகல் உணவு வெங்குவுக்கு எம்.பி. தம்பதிகளோடு தான். ஒருமாத அவகாசத்தில் நாடகங்கள் தன் டெல்லி முகவரிக்கு வந்த சேர வேண்டும் என்றாள் அம்ருதா.

வெங்குவுக்கு நம்பிக்கை இல்லை. டிவியிலாவது நம் சீரியல் எடுபடவாவது? அங்கே எத்தனைப்போட்டிகள், சிபாரிசுகள், சாமர்த்தியங்கள்... நம் நாடகத்தைத் தான் தேர்வு செய்யக் காத்திருக்கானாக்கும்! அடிப்போடி!

இருப்பினும் எழுதி அனுப்பினார்.

ஒரு மூன்று மாதம். திடீரென்று சென்னை தூர்தர்ஷன் கேந்திரா, வெங்குவை வந்து போகச் சொல்லி அழைத்தது.

வெங்கு சென்னைக்கு வந்தார். தொலைக்காட்சி நிலையத்தில் அவருக்குக் கிடைத்த அன்பான வரவேற்பும், மரியாதையும் பிரமிக்க வைத்தது. ஒளிபரப்பு அமைச்சர் ஹரிகிஷன்லால் தூர்தர்ஷனுக்கு வெங்கு பற்றி எழுதிய கடிதம்தான் காரணம் என்பது வெங்குவுக்குத் தெரியாது. அவரின் இரு நாடக ஸ்கிரிப்டுகளும் தொலைக்காட்சியால் ஏற்கப்பட்டன. கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எல்லாம் வெங்குவே.

ஒரு வாரத்திற்கான வசனத்தைத் தொலைக்காட்சியில் எழுதினால் சன்மானம் அய்யாயிரம் ரூபாயாம். 26 வாரங்களுக்கு ஒரு தொடரை இயக்குவதென்றால்? அம்மாடியோவ்! ஏகப்பட்ட வருமானம். சேனல் ஒன்று மற்றும் இரண்டில் வெங்குவின் இரு தொடர்கள். சனி அன்று ஒன்று, அடுத்த நாள் மற்றொன்று,

லட்சக்கணக்கான ரூபாய் வருமானம். அவ்வளவையும் என்ன செய்வது? கடலூரில் பெரிய தையல் கூடம் நிறுவி, வெளிநாடுகளுக்கு ரெடிமேட் துணிகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனம் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய வீட்டை இடித்து புதுப்பாணியில் ஒரு பங்களா கட்டினார். போர்டிகோவில் ஒன்று. ஷெட்டில் ஒன்று ஆக இரு கார்கள். தன் வீட்டு மாடியிலேயே ஷுட்டிங் ஸ்டுடியோ. பங்களாவைச் சுற்றி ஒன்பது வகை நாய்கள்.

அவ்வப்போது தூர்தர்ஷன் அவரை அழைக்கிறது. சென்று பல நிகழ்ச்சிகள் தயாரித்துக் கொடுக்கிறார். மாமனார் ஹிந்திப் பண்டிதர் அல்லவா? அவரையும், மனைவியையும் துணையாகக் கொண்டு ஹிந்தியிலிருந்து தமிழுக்கு, தமிழில் இருந்து ஹிந்திக்கு மொழி மாற்றத் தொடர்கள் தயாரிக்கிறார்.

நன்றி மறக்காமல் தன் பங்களாவுக்கு 'அம்ருதேச்வரி' என்று வைத்திருக்கிறார்.

தொலைக்காட்சி நாடகங்களில் கடலூர் வெங்குவின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

கடலூரில் ஆண்டு தோறும் நாடக விழா நடத்தி சிறந்த நாடகத்திற்கு அம்ருதேச்வரி பரிசு ரூபாய் இருபத்தையாயிரம் வெங்கு வழங்குகிறார்.

இன்று அந்த முழுநிலா நாடக மன்ற முன்னாள் உறுப்பினர் எவரும் (வெங்கு தவிர) நாடகம் பற்றியே நினைப்பது இல்லை என்பது ஆச்சர்யமான விஷயம்! வாழ்க நாடகக் கலை!

திரை! ஜனகணமன!

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
20-8-2001
LIBRARY

534278

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
20-8-2001
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரா. கண்ணன் எனும்
கண்ணன் மகேஷ்
கடலூர்க்காரர். கடந்த 40
ஆண்டுகளாக எழுதி
வருபவர். வேய்ங்குழல்
வேந்தன் என்ற பெயரில்
நாடகம், புதுக்கவிதை
ஆகியவற்றை எழுதியவர்.
இதில் இவரது இரு
நாவல்கள் உள்ளன.
'அரிதாரம்' நாடக
வாழ்க்கை பற்றிய
நயமான நாவல்.
அரிதாரமற்ற வாழ்க்கை
அப்பட்டமாக வெளிப்
பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org